பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 01 | 06 மே 2017 | விதி : 47



இயந்திர வல்லூறுகளுக்கு இரட்டை அடி



ஒரே புள்ளியில் இணையும் ஈழத்தமிழரும் பர்மியர்களும்



குமார் பொன்னம்பலத்தை மிரட்டிய சீலன்



வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை




'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாவடு

தொடர்கதை 46



## சயந்தன்

ஐஸேயாஸ் அபேவர்க்கி எரித்திரிய விடுதலை முன்னணியில் இருந்து சடுதியாக விலகிய போது அதன் தத்துவக் காரணங்களை இத்ரிசினால் சரிவரப் புரிந்து கொள்ள முடியவில்லை. அன்றைக்கு இரவு நிலம் வறண்டு பாளம் பாளமாய் வெடித்திருந்த கடற்கரை வழியே நடந்து கொண்டிருப்பதாய் இத்ரிஸ் கனாக் கண்டான். உடலை உருக்குகிற தகிப்பில் அனல் அடித்தது. கடல் நீர், கண்ணுக்கு முன்னாள் வற்றியபடியிருக்க, அதன் ஆழ் நிலத்தில் புதிய வெடிப்புகள் கோடுகளாய் உருவானபடியிருந்தன. முடிவில்லா இலக்கு நோக்கி அவன் கண்விழித்த வரை நடந்து கொண்டிருந்தான். அன்றைக்கே அவன் ஐஸேயாசின் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியில் தன்னை இணைத்துக் கொண்டான். சற்று நாட்களில் அதுவே எரித்திரியாவின் ஏகப்பிரதிநிதித்துவ இயக்கமென்று ஐஸேயாஸ் அறிவித்தார்.

இத்ரிஸ் கிழவனுக்கு ஸஅத் நகரின் தொலைவில் மீனவக் கிராமமொன்றில் குடிசையொன்றிருந்தது. மண்ணைக் குழைத்து எழுப்பிய சுவரின் மேலே புற்களால் பின்னப்பட்ட பாயினால் சுற்றி அது அடைபட்டிருந்தது. காய்ந்த சுள்ளிக் கம்புகளை அடர்த்தியாகப் பரப்பி அதன் கூரையினை வேய்ந் திருந்தார்கள். நீண்ட காலத்தின் பின் சூடானிலிருந்து எரித்திரியாவுக்கு திரும்பிய போது இத்ரிஸ் இந்தக் கிராமத்திற்கு வந்தார். அப்பொழுது லண்டனில் எரித்திரியாவிற்கும், எத்தியோப்பியாவிற்கும் இடையில் பேச்சுக்கள் நடந்தபடியிருந்தன.

இத்ரிஸ் கிழவன் சூடானுக்கு ஓடித் தப்பிய அந்த நாள்களை குடிசையின் வெறுந்தரையில் படுத்தபடி அடிக்கடி நினைத்துக்கொள்வார். அப்பொழுது நெருக்கமாக அடுக்கப்பட்ட சுள்ளித்தடிகளின் நீக்குகளால் கூரையினுடே ஒன்றிரண்டு நட்சத்திரங்களை அவர் காண்பார். “ஓ வழிப்போக்கனே…” என்ற பாடல் தீனமாக அவரிடமிருந்து ஒலித்தபடியிருக்கும்.

எத்தியோப்பியா அப்படியொரு அசுர பலத்தினைப் பெறுமென இத்திரிஸ் ஒருபோதும் நினைத்திருக்கவில்லை. குவிக்கப்பட்ட சோவியத்தின் வளங் களைத் தின்று கொழுத்த காளையாக அது மூசியபடியிருந்தது. அதுவொரு மே மாதம். நாடு முழுவதும் யுத்தத்தில் எரிந்துகொண்டிருந்தது. தெற்கே செங்கடலைத் தொடுகின்ற இதே அஸாப் நகரின் கோடியில் இத்ரிஸ் அணியினர் முகாம் அமைத்திருந்தார்கள். ஒரு நள்ளிரவில் எதிரிகள் அவர்களைச் சூழ்ந்த சற்றைக்கெல்லாம் அதிர்ந்தபடியிருந்த நிலம் அமைதியாகி விட்டிருந்தது.

இத்ரிஸ் வலி பொறுக்க மாட்டாதவனாய் கடற்கரையோர நிலத்தில் சரிந்து விழுந்து கத்தினான். தலைக்குள் நட்சத்திரங்கள் மின்னுவதைப் போல் தோன்றிற்று. கரைகளைத் தொடும் அலைகளின் இரைச்சல் சீரான இடைவெளியில் இரவினை நிறைத்திருந்தது. அவ்வப்போது நீர்த் தூறல்கள் அவனில் பட்டன. இத்ரிஸ் வலது காலின் தொடைகளுக்கு கீழே இரத்தப் பிசுபிசுப்பை உணர்ந்தான். கைகளால் மெதுவாகத் தடவியபோது முழங்காலில் உடற்சூடு தணியாத இறைச்சிக் குவியலில் கைகள் அளைந்தன. அவனது கண்கள் நீரை உகுத்தபடியிருந்தன. கடற்கரை மணல் உடலில் தேய அவனை யாரோ இழுத்துச் சென்றார்கள்.

இத்ரிஸ் கிழவனிடம் தோள் இடுக்குகளில் பொருத்தி நடக்க முடிகிற இரண்டு ஊன்றுகோல்கள் இருந்தன. சூடானில் அவனுக்குப் பொருத்தப்பட்டிருந்த தகரத்திலாலான கால்கள் துருப்பிடித்து பழுந்தடைந்த பின்னர் அந்த ஊன்றுகோல்களை அவன் பெற்றிருந்தான். அவனுக்குத் தொழிலென்று ஒன்றிருக்கவில்லை. காலையில் சுருட்டைப் புகைத்தபடி ஊன்றுகோல்களைத் துணையாக்கி தத்தித் தத்தி கடற்கரையை நோக்கி நடப்பான். முழங்கால் வரையான இன்னொரு கால் அந்தரத்தில் தொங்கியபடியிருக்கும்.

கடற்கரைச் சனங்களின் நேசத்துக்குரியவனாக இத்ரிஸ் கிழவன் இருந்தான். உட்கார்ந்த இடத்தில் அவன் செய்வதற்கென சில வேலைகளை அவர்கள் வைத்திருந்தார்கள். மீனவர்களின் வலைகளைச் சிக்கெடுக்கும் போது தேர்ச்சியுடன் அவனது கை வளைந்து நெளியும் அழகைச் சிறுவர்கள் வேடிக்கை பார்த்தபடி நிற்பார்கள். மீன்களைக் கொட்டிக் கூறுகளாக்கி பங்கு பிரித்தளிப்பான். மாலையில் அவனிடம் கொஞ்ச நக்பாக்களும் ஒரு சமையலுக்குத் தேவையான மீன்களும் மிச்சமிருக்கும். அவனிடம் ஓரளவுக்கு நக்பாக்கள் சேர்ந்திருந்தன. சாவதற்கிடையில் தகரத்தினாலான காலொன்றைப் பொருத்தி நடக்க வேண்டுமென அவனுக்கொரு கனவிருந்தது.

அன்று காலை இத்ரிஸ் கிழவனுக்கு அசதியாயிருந்தது. மேலே வெறித்தபடி படுத்திருந்தான். கூரையின் நீக்குகளினால் உள் நுழைந்த ஒன்றிரண்டு வெளிச்சக் கோடுகள் அவனது கண்களைக் கூசச் செய்தன. குடிசையின் வாயிலில் தொங்கிய பாயினை விலத்தியபடி இரண்டு இளைஞர்கள் வந்தார்கள். கிழவன் தலையை நிமிர்த்தி அவர்களை பார்த்தான். அவர்கள் கடற்கரை இளைஞர்கள், அவர்களில் ஒருவனிடம் மீன்பிடி வள்ளமொன்றிருந்தது. கடலில் எல்லை தாண்டியதாக யேமன் கடல் படையினர் அவனை முன்னர் கைது செய்து சிறையில் அடைத்திருந்தனர்.

“இத்ரிஸ், ஒரு தடவை கடற்கரைக்கு வர வேண்டும். கடலில் போட் உடைத்து சில பொருட்களும் சில மனித உடல்களும் கரை தட்டியிருக்கின்றன.”

இத்ரிஸ் கிழவன் எழுந்து கொள்வதற்கு அவர்களிலொருவன் உதவினான். சுவரைப் பற்றியபடி நடந்து கிழவன் ஊன்றுகோல்களை தோள் இடுக்கில் மாட்டினான். பிறகு வந்தவர்களோடு நடந்தான்.

கடற்கரையில் சனங்கள் மொய்த் தார்கள். பயணப்பொதிகள், பைகள், உடைகள், பீப்பாக்கள், பிளாஸ் ரிக் வாளிகள் என ஓரிடத்தில் குவிக்கப் பட்டிருந்தன. ஒன்றிரண்டு இளைஞர்கள் அவற்றைக் கிளறியடிப்படியிருந்தனர். புதிய நீளக் காற்சட்டையொன்றை அவர்களில் ஒருவன் தனக்கென பத்திர படுத்திக் கொண்டான். சிலர் கடற்கரைக்கு ஓடி வேறும் ஏதேனும் கிடைக்கிறதா எனத் தேடினர்.

அடர்த்தியான மீசையையும் நீண்ட தாடியையும் கொண்ட வெளிர் நிறம் பாய்ந்த இரண்டு மெல்லிய உடல்கள் கைகளை மேலே உயர்த்தியபடி மண லில் வளர்த்தப்பட்டிருந்தன. உடலின் சில இடங்கள் கை கால் வைத்தால் உள்ளே போகுமளவிற்கு நொதித்துப் போயிருந்தன. சனங்கள் மூக்கைப் பொத்திக் கொண்டு நடந்தார்கள்.

இத்ரிஸ் கிழவன் பெருமூச்சுடன் கடலை வெறித்தபடி நின்றான். அலையில் படகொன்றில் சிதிலடைந்த துண்டுகள் மிதந்து வந்தன. கிழவன் பார்வையை மேலும் கூர்மையாக்கினான். சிவப்பு நிறத்தில் தோளில் சுமக்கிற பையொன்று மிதந்தது. பிறகொரு சாக்கு, பிறகு…

கிழவன் கைகளை விரித்து நெற்றியில் பிடித்து வெளிச்சக் கூசலை தவிர்த்தான். ஊன்று கோல்களை இரண்டடிகள் முன்வைத்துப் போய் நின்றான். இப்பொழுது கடல் அலைகள் மிக மெலிதாக அவனது பாதத்தை வருடிச் சென்றன. கால் போலொன்று அலைகளில் அல்லாடுவதை அவன் கண்டான். சற்று கிட்ட நெருங்கிய போது அதுவொரு செயற்கைக் காலென்று அவனுக்குப் புரிந்தது. இத்ரிஸ் கிழவனின் கண்கள் விரிந்தன. பைபர் கிளாசினால் ஆக்கப்பட்ட வழுவழுப்பான செயற்கைக் காலொன்று சற்றைக்கெல்லாம் அவனது காலடியில் கிடந்தது.

இத்ரிஸ் கிழவன் அதனைக் கைகளில் ஏந்தியபடி ஓடிப்போய் படகொன்றில் முதுகினைப் பதித்தபடி கால்களை நீட்டி உட்கார்ந்தான். மொட்டையாகிக் கிடந்த அவனது வலது காலில் அதை வைத்துப் பார்த்த போது அளவு ஓரளவுக்குச் சரியாகலாம் போல் தோன்றிற்று. நீண்ட பத்தாண்டுகளுக்குப் பிறகு கிழவனுக்குப் புன்னகை தோன்றிற்று.

இத்ரிஸ் கிழவன் அச் செயற்கைக் காலினைக் கையினில் ஏந்தி முகத்தினருகே கொண்டுவந்து தொடர்ந்து முத்தமிட்டபடியிருந்தான்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயந்திர வல்லூறுகளுக்கு இரட்டை அடி





தலைவருடன் கடாபி (பிரிகேடியர் ஆதவன்)

தமிழரசன்

"பெடியள் விமானத்தை சுட்டுட்டாங்களாம்... நவக்கிரியில விழுந்து கிடக்காம்" இந்தப் பேச்சுத்தான் எங்கும் ஒலித்தபடி இருந்தது. தாங்களே விமானத்தை சுட்டு வீழ்த்தியது போன்ற பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் மக்கள் ஒருவருக்கு ஒருவர் செய்திகளை பரிமாறிக் கொண்டிருந்தனர்.

மூன்றாம் கட்ட ஈழப்போர் வெடித்திருந்த காலமது. தனித்து விடப்பட்டிருந்த யாழ்ப்பாணத்தில் செய்தித் தொடர்புக்கு பத்திரிகைகளையும், வானொலிகளையும் மட்டுமே நம்பிக் கொண்டிருந்தனர். இவற்றினூடாக அன்றி விமானம் வீழ்த்தப்பட்ட செய்தி காற்றைப்போல வேகமாக யாழ்ப்பாணம் முழுவதும் பரவிக் - கொண்டிருந்தது. தங்களுக்கு கிடைத்த தகவலால் தித்திப்பான பலரும் நவக்கிரி நோக்கி சைக்கிள்களில் பறந்து கொண்டிருந்தனர்.

இவ்வாறு சைக்கிளில் பறந்து கொண்டிருந்தவர்கள் "நேற்று விழுந்த பிளேனையும் பெடியள்தான் சுட்டவங்கள். இரண்டாவது பிளேன சுடுறதுக்குத்தான் அதை மறைச்சிருக்கிறாங்கள்... நேற்று வல்லைவெளியில பெரிய குழாய் மாதிரி ஆயுதம் ஒன்றைப் பெடியள் கொண்டு போறதை சனங்கள் பார்த்ததாம்..." என்றவாறாகப் பேசிக்கொண்டனர். வீதியெங்கும் மக்கள் ஒரே பக்கமாகவே சென்று கொண்டிருந்தனர். அந்தப் பாதை நவக்கிரி நோக்கி - விமானம் வீழ்ந்த இடம் நோக்கியதாகவே இருந்தது.

நவக்கிரியில் விமானம் விழுந்த இடத்தில் ஏராளமானவர்கள் நின்றிருந்தார்கள். அங்கு நின்றவர்களிடம் மகிழ்ச்சியைத் தவிர வேறு எதனையும் பார்க்க முடியவில்லை. மகிழ்ச்சிப் பிரவாகத்தால் துள்ளிக் குதித்தும் விமானத்தின் மீதேறி ஆடியும் பாடியும் விமானத்தின் வீழ்ச்சியை மக்கள் கொண்டாடிய வண்ணமிருந்தனர். அந்த இடத்தில் நின்ற புலி வீரர்கள் மக்களின் கொண்டாட்டத்தை ரசித்தவாறு ஓரமாக நின்றிருந்தனர். நொறுங்கிக் கிடந்த விமானத்தின் பாகங்களை ஞாபகார்த்த பொருள்களாகவும் மக்கள் கொண்டு சென்றிருந்தனர். இன்றும் அந்த நினைவுகளை பலர் மீட்டிப் பார்க்கக்கூடும்.

*1995* ஏப்ரல் *28,29* ஆம் திகதிகளில் விடுதலைப் புலிகள் இரண்டு விமானங்களை வீழ்த்தியிருந்தனர். முதலாம், இரண்டாம் கட்ட ஈழப்போர்களின் களங்களில் புலிகளுக்கு சிம்ம சொப்பனமாக இருந்தது இலங்கை விமானப் படைதான். அந்தப் படை புலிகளை அழித்ததோ இல்லையோ தினமும் அப்பாவி மக்களை கொன்று குவித்தது. தமிழர் தாயகம் விமானத் தாக்குதல்களால் தினமும் அல்லோலகல்லோலப்பட்டது. தங்களுக்கு சிம்மசொப்பனமாகவும் மக்களுக்கு எமனாகவும் இருந்த இயந்திரப் பறவைகளை அழிக்க வேண்டும் என்பது புலிகளின் கனவாக இருந்தது. *1986* மே *3* ஆம் நாள் கொழும்பு விமான நிலையத்தில் தரித்து நின்ற விமானத்துக்குள் குண்டொன்றை வெடிக்கவைத்து பெரும் சேதத்தை விடுதலைப் புலிகள் ஏற்படுத்தியிருந்தனர்.

இம்முறை புலிகள் குண்டு வைத்துத் தாக்குதலை நடத்தவில்லை. பறந்து கொண்டிருந்த விமானத்தை ஏவுகணை மூலமாக சுட்டு வீழ்த்தியிருந்தனர். இந்த இரு சாகசத்துக்கும் சொந்தக்காரர் ஒருவரே. அவர் வன்னி இறுதிப் போரில் ஆனந்தபுரத்தில் வீரகாவியமான புலிகளின் மூத்த தளபதியான பிரிகேடியர் கடாபி (ஆதவன்). தலைவர் பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலர் அணிக்கு தலைமை தாங்கிய இவர், இம்ரான் - பாண்டியன் படையணியின் சிறப்புத் தளபதியாகவும் இருந்தார். குறி பார்த்து சுடுவதில் மிக வல்லவரான கடாபி, இந்தியாவில் பயிற்சி பெற்றபோது விமான எதிர்ப்பு சூட்டுப் பயிற்சியை நிறைவு செய்திருந்தார். பெரிதும் வெளியில் தலைகாட்டாத இவர், சிறப்புத் தாக்குதல்களுக்கு மட்டுமே வெளியில் வருவார். அப்படி அவர் அடுத்தடுத்து வெளிவந்த இருநாள்களில்தான் இலங்கை அரசாங்கம் இரு விமானங்களை இழந்ததுடன் *90* இராணுவத்தினரையும் இழந்தது.

இரண்டாம் கட்ட ஈழப்போரில் புலிகளின் உச்சபலத்தைக் கண்டு அச்சமடைந்த இராணுவம் போர் தொடுக்க அஞ்சியது. கடலால் இராணுவத்தையும் அவர்களுக்கு தேவையான விநியோகங்களையும் செய்யலாம் என்றால் கடற்புலிகளை சமாளிப்பது பெரும் கடினமாக இருந்தது. அப்படியே கடற்புலிகளிடம் இருந்து தப்பினாலும் கரும்புலிகளின் இலக்கில் இருந்து தப்புவது என்பது முடியவே முடியாததாக இருந்தது. இவ்வாறான நிலையில்தான் தங்களின் அனைத்து விநியோகங்களுக்கும் விமானங்களையே இராணுவம் நம்பியிருந்தது. இப்போது அந்த நம்பிக்கையையும் புலிகள் தகர்த்து விட்டிருந்தனர். அடுத்தடுத்து விமானங்கள் வீழ்த்தப்பட்டதில் புலிகளின் தந்திரம் மிகப்பெரியது.

*1995* ஏப்ரல் *28* ஆம் நாள் கொழும்பிலிருந்து *36* படையினரை ஏற்றிக் கொண்டு பலாலி நோக்கி வந்த அவ்ரோ ரக விமானத்தை, வல்லை வெளியில் வைத்து புலிகள் ஏவுகணை மூலமாகத் தாக்கியிருந்தனர். தாக்குதலுக்கு இலக்கான விமானம் பலாலி விமான நிலையத்துக்கு அண்மையாக வீழ்ந்து நொறுங்கியதுடன் அதில் பயணித்த அனைத்து படையினரும் மரணித்திருந்தனர். இயந்திரக் கோளாறு காரணமாகவே அந்த விமானம் விழுந்ததாக அரசாங்கமும் இராணுவமும் நம்பின. அந்த நம்பிக்கையை புலிகளும் உடைக்கவில்லை. புலிகள் ஏவுகணையால் விமானத்தை தாக்கியதை மக்கள் சிலர் கண்டபோதும், புலிகள் அதற்கு உரிமை கோராதது அவர்களுக்கு வியப்பை அளித்தது.

இந்நிலையில்தான் மறுநாள் *54* படையினருடன் பலாலி வந்த மற்றைய அவ்ரோ விமானத்தையும் புலிகள் விழுத்தியிருந்தனர். இதன் பிறகுதான் முதல் தாக்குதலுக்கு புலிகள் உரிமை கோராது விட்டது தந்திரம் எனப் புரிந்தது. அதன் பிறகு சில நாள்கள் விமானங்கள் எதுவும் தமிழர் தாயகத்தின் வான் பரப்பில் வட்டமிடவில்லை. மக்கள் மீது குண்டு வீசவும் இல்லை. பல கோடி ரூபாய்களை செலவு செய்து ஏவுகணை எதிர்ப்பு ஆயுதங்களை வாங்கிய பின்னரே தமிழர் தாயகத்தில் இராணுவத்தின் விமானங்கள் பறந்தன.

ஈழப் போரரங்கில் புலிகள் புரிந்த சாதனைகள் எண்ணற்றவை. அந்த சாதனைகள் தமிழர்களின் நெஞ்சில் என்றும் நிறைந்திருப்பவை. அவ்வாறான நினைவுகளில் மக்களை அழித்த இயந்திர வல்லூறுகளை அடுத்தடுத்து வீழ்த்திய நாள்களும் மக்கள் மனதில் இருந்து நீங்காது...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார சமூக இணையத் தரவரிசை

## 1 தொழிலாளர் தினமும் பேஸ்புக் போராளிகளும்

**தொ**ழிலாளர் தினம் கடந்த வாரம் சமூகவலைத்தளங்களை நிறைத்த விடயம் இதுதான்.

தொழிலாளர் தின வாழ்த்துக்கள், தொழிலாளர் தினத்தை அடையாளப்படுத்தும் படங்கள் சமூகவலைத்தளங்கள் நிறைந்து வழிந்திருந்தன. கூடவே மே நாளில் அரசியல் கட்சிகள் நடத்திய ஊர்வலங்கள், கூட்டங்களின் படங்களையும், செய்திகளையும் ஆதரவாளர்கள், செய்தி சொல்லிகள் பகிர்ந்திருந்தனர்.

இந்த பேஸ்புக் போராளிகள் எங்கிருந்துதான் யோசிக்கிறார்களோ தெரியவில்லை. சுரண்டப்படும் தொழிலாளர் வர்க்கம், மறுக்கப்படும் தொழிலாளருக்கான உரிமைகள் குறித்து வகை வகையாக பல பதிவுகளை பிரஸ்தாபித்தார்கள்.

உழைப்பாளர் தினத்திலும் விடுமுறை இன்றி உழைக்கும் வர்க்கத்தினர் பற்றியும் சிலர் பதிவு செய்தனர். மேலும் சிலர் மே நாளில் தொழிலாளர்களின் பெயரால் நடக்கும் வழமையான கூத்துக்களை வழக்கமான பல்லவியில் பாடினர்.






சிறந்த நடிகருக்கு ஆஸ்கர் அவார்டு நேஷனல் அவார்டெல்லாம் யார் யாருக்கோ தராங்க.




க்ளாஸ் ரூம்ல பாடம் எடுக்கும் போது புரிஞ்சா மாதிரியே நடிக்கிற மாணவர்களுக்குத்தான் மொதல்ல கொடுக்கனும்

## 2 சிலாகிக்கப்பட்ட பாகுபலி – 2

**பா**குபலி என்ற திரைப் பிரமாண்டத்தைப் பற்றி சமூக வலைத்தளத்தில் பதிவிடாத சினிமா ரசிகர்களை விரல் விட்டு எண்ணி விடலாம்.

கடந்த இரு வருடங்களாக பாகுபலியை மையப்படுத்தி மீம்ஸ்களை பறக்கவிட்டவர்களுக்கு தீனி போட்டிருக்கிறது பாகுபலி -2. இதேசமயம் பாகுபலி -2 இன் பிரமாண்டத்தைப் பார்த்துப் புல்லரித்துப்போய் சிலாகித்துப் பதிவிட்டிருக்கிறார்கள் சினிமா ரசிகர்கள்.

தியேட்டர்களில் குவிந்த ரசிகர்கள் பாகுபலி பார்க்கும் படங்களையும் கூடவே செல்பிகளையும் சமூகவலைத்தளங்களில் பகிர்ந்து கொண்டனர். கூடவே தாங்கள் படம் பார்த்த கதையையும், படத்தின் கதையையும் பலரும் சமூகவலைத்தளங்களில் பதிவிட்டார்கள். படம் தொடர்பான மீம்ஸ்களையும் தெறிக்க விடவும் பதிவர்கள் தவறவில்லை.




அட்சய திருதயை அன்னிக்கு கோல்டு 'வாங்குனா' ஐஸ்வர்யம் பெருகும்னா, அன்னிக்கு கோல்டு 'வித்தா' ஐஸ்வர்யம் 'குறைஞ்சு' போய்டாதா........!!!???




அப்ப ஏன் நகைகடைங்க இவ்ளோ அட்வர்டைஸ்மெண்ட் எல்லாம் பண்ணி அட்சயை திருதயை அன்னிக்கு அவங்க ஐஸ்வர்யத்த வெளில அனுப்பறாங்க..?"




## 3 புதிய துணைவேந்தரும் கூத்துக்களும்



**இ**ந்த வாரம் அதிகம் பேரால் சமூகவலைத்தளத்தில் கருத்துக் கூறப்பட்ட விடயம் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவுதான். கூடவே அவரின் பதவியேற்பும்.

யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக பேராசிரியர் விக்னேஸ்வரன் தெரிவானமை அனைவரும் அறிந்ததே. துணைவேந்தருக்கான தேர்தலில் முதல் இடத்தைப் பெற்றவருக்கு அப்பதவியை வழங்காமல் இரண்டாம் இடம் பெற்றவருக்கு அப்பதவியை வழங்கியது குறித்து பலரும் விமர்சித்திருந்தனர்.

இந்த ஜனநாயக மாண்பு(?) குறித்து பலரும் விமர்சித்த போதும், பதவியேற்ற புதிய துணைவேந்தருக்கு வாழ்த்துக்கள் சொல்லத் தவறவில்லை. விக்னேஸ்வரனின் பதவியேற்பு படங்களையும் பல சமூகவலைத்தளப் பதிவர்கள் பதிவிட்டனர்.

## இந்தவார மீம் (Meme)



எங்களுக்கு ஹீரோ "கட்டப்பா சத்யராஜ் தான்! தமிழக இளைஞர்கள் அதிரடி!




கணவன்: மதுபோதையில் வீட்டின் கதவை தட்டுகிறான்

மனைவி: கோபமாக கதவை திறக்க மறுக்கிறாள்.

கணவன்: அழகான பொன்னுக்கு அழகான வைர மோதிரம் வைத்திருக்கிறேன் என்கிறான்.

மனைவி: கோபமாக கதவை திறந்து எங்கே அந்த அழகான வைர மோதிரம் என்கிறாள்.

கணவன்: சிரித்து கொண்டே கேட்கிறான். எங்கே அந்த அழகான பெண் என்று.!

அதற்கு பிறகு அவன் எந்த ஆஸ்பிடலில் அட்மிட் ஆனானோ ஆண்டவனுக்கே வெளிச்சம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com

## சவாரிகள் தினம்

தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும். மீண்டும் தர்மமே வெல்லும் என்பதெல்லாம் மலையேறிவிட்டது. இப்போது சூதின் வாழ்வுதனை தர்மம் கவ்வும் மீண்டும் சூதே வெல்லும் என்பதுதான் யதார்த்தம். அதற்கு மிகச்சரியான உதாரணம், கடந்த வாரம் காலிமுகத்திடலில் நடைபெற்ற மஹிந்த ஆதரவு மேதினக்கூட்டம் தான்.

ஆரம்பத்தில் பொது எதிரணியின் மே தினக் கூட்டத்துக்காக, காலிமுகத்திடல் வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டபோது, அதனைப் பலரும் ஒரு கேலியோடுதான் பார்த்தனர். அரச தரப்பினர் ஊடகங்களில் பொது எதிரணியின் மே தினக் கூட்டம் பற்றிய எதிர்வு கூறல்களை எள்ளலோடு சொல்லிக் கொண்டார்கள்.

" அவர்களுக்கு ஏன் இவ்வளவு பெரிய இடம் தேவைப்படுகிறது என்று தெரியவில்லை. நாலைந்து பேர்தான் வரப்போகிறார்கள். அதற்கு எதற்கு காலிமுகத்திடல்? வீண் செலவு. வேண்டுமானால் அவர்களுக்கு ஏதேனும் மயானத்தில் எஞ்சியிருக்கும் சிறுதுண்டுக் காணியே போதுமானது" என்று சொன்னார்கள். ஆனால் எல்லாமே மே தினத்தன்று தலைகீழாகிப் போனது.

காலிமுகத்திடலின் கடலுக்குப் போட்டிபோடும் வகையில் சனசமுத்திரம் ஊற்றெடுக்கத் தொடங்கியது. நாலாபுறத்தில் இருந்தும் காலிமுகத்திடலுக்கு வந்து கொண்டிருந்த சனக்கூட்டத்தால் கொழும்பு மாநகரின் போக்குவரத்து நெருக்கடிக்குள்ளானது. 2 லட்சத்துக்கும் அதிகமானோர் ஒரு திடலில் கூடுவதென்பது மஹிந்தவுக்கு கிடைத்த வெற்றியே. இது அவர்களே எதிர்பார்க்காத பெருவெற்றி.


அந்த சந்தோசத்தில் மஹிந்த தரப்பு உடனடியாக சனக்கூட்டத்தை படமெடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவிட, எங்கும் மஹிந்தவின் மீளெழுச்சிக்காலம் ஆரம்பமாகிவிட்டதாக கருத்துக்கள் எழத் தொடங்கியுள்ளன. அதேவேளை ஐ.தே.கவின் மே தினக் கூட்டம், சு.க வின் மே தினக் கூட்டம் என்பன பற்றிய செய்திகள் வந்தபோதும் அவற்றில் கலந்து கொண்ட மக்கள் எத்தனை பேர் என்பது குறித்து அவர்கள் கள்ள மௌனம் சாதிக்கின்றனர். கூட்டத்துக்கு வந்த சனத்திரளை வைத்து மஹிந்த தரப்பும், அரசதரப்பும் மாறி மாறி 'தாங்களே வெற்றி பெற்றதாக' மார்தட்டிக் கொள்கிறார்கள்.

மே தினம் என்பது தொழிலாளர்களுக்கானது. ஆனால் இலங்கையிலோ அது ஒவ்வொரு அரசியல் கட்சியும் தனது பலத்தை காட்டுவதற்கான ஒரு களம். வருடம் முழுதும் உழைத்துக் களைத்த தொழிலாளர்களை மே முதலாம் திகதியிலாவது கௌரவப் படுத்துவதை விடுத்து, அன்றைக்கும் அவர்களை வீதி வீதியாகக் கோஷம் போட வைத்து, வெயிலில் காய வைத்து, தங்களின் அரசியல் முதலீடாக அவர்களின் முதுகில் சவாரி செய்கின்றன அரசியல் கட்சிகள்.

எந்த ஓர் அரசியல் கட்சியும் தொழிலாளர் தினத்தை தொழிலாளர்களுக்காகக் கொண்டாடுவதில்லை. ஒவ்வொரு மே தினத்திலும் அவர்களை எப்படி தங்களுடைய அரசியலுக்குப் பயன்படுத்தலாம் என்பது பற்றியே சிந்திக்கின்றன. அன்றைக்கு ஊர்திகளிலும் மேடைகளிலும் தொழிலாளர்களின் உரிமைகள் பற்றி அரசியல்வாதிகள் வாய்கிழிய பேசினாலும்கூட அவை எதுவும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுவதில்லை.

அன்றைய தினத்தோடு எல்லோரும் அதை மறந்து விடுவார்கள். என்றாலும் அரசியல்வாதிகள் மே தினக் கூட்டத்தை காட்டிக் காட்டியே தன்னுடைய வாக்கு வங்கியை பலப்படுத்திக்கொண்டு சென்றுவிட ஏதுமறியா அப்பாவித் தொழிலாளர்கள் தொடர்ந்தும் அன்றாடம் காய்ச்சிகளாகவே இருக்கவேண்டியதுதான். தொழிலாளர் தினம் என்பது ஏழைகளின் முதுகில் முதலாளிகளும் அரசியல்வாதிகளும் சவாரி செய்வதற்கென்றே ஒதுக்கப்பட்டுவிட்டதுபோலும்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'




# "உங்கட காணி எங்களுக்கு"

**ஆதங்கன்**

இன்னுமொரு நில மீட்புக்கான ஜனநாயகக் களமுனை இரணைத்தீவில் திறக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பன்னங்கண்டி, கேப்பாப்பிலவு, வட்டுவாகல் போன்ற இடங்களில் மக்கள் தங்களுடைய காணி உரிமைக்காகவும் நில மீட்புக்காகவும் தொடர்ச்சியாக போராடி வரும் நிலையில் இந்தப் போராட்டங்களின் வரிசையில் இரணைத்தீவும் தன்னை இணைத்துக்கொண்டுள்ளது. பிலக்குடியிருப்பு, பரவிப்பாஞ்சான், முள்ளிக்குளம் பகுதிகளில் இருந்து இராணுவத்தினர் விலகி, மக்கள் மீண்டும் தங்கள் நிலத்தில் கால்வைப்பதற்கு அந்தப் பகுதிகளில் மக்கள் தொடர்ச்சியாக மேற்கொண்ட நிலமீட்புப் போராட்டங்களே காரணிகளாக அமைந்தன. எனவே தமது காணிகளை மீட்க போராடினால் நிச்சயம் பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏனைய மக்களிடமும் பிறக்க, நிலமீட்புப் போராட்டங்கள் பல பகுதிகளிலும் பிறப்பெடுத்தன. ஆனால் அரச தரப்பு தான் கையகப்படுத்தியிருக்கும் நிலங்களை விட்டு ஒரு அங்குலம் தானும் நகர மாட்டேன் என்று அடம்பிடித்து நிற்கிறது. இத்தனைக்கும் அரச படைகள் மக்களின் நிலத்தையே அடாத்தாகப் பிடித்து வைத்திருக்கின்றன. அந்த நிலத்தைக்கூட கைவிடுவதற்கு படைத்தரப்புக்கு துளியும் மனமில்லை. அப்படியிருக்க பூர்வீகமாக அந்த நிலங்களில் வாழ்ந்த மக்கள் மட்டும் அதனை அரச படைகள் குந்தியிருக்க விட்டுக் கொடுக்க வேண்டும் என்பதில் என்ன நியாயம் இருக்கிறது?

கேப்பாபிலவு பகுதியில் இன்னும் விடுவிக்கப்படாமல் படைத்தளங்களின் பூமியாக மாற்றப்பட்டிருக்கும் மக்களின் காணிகளை விட்டு இராணுவம் முற்றாக அகன்று செல்வதற்கு இன்னும் 2 வருட காலம் எடுக்கும் என்று சொல்லப்படுகிறது. கேப்பாபிலவில் நிலை கொண்டுள்ள படைகள் தாம் புதிதாகப் படைத்தளத்தை அமைப்பதற்கு பொருத்தமான இடமொன்றைத் தேர்ந்தெடுத்து, அங்கு கட்டடங்களை நிறுவி, பால்காய்ச்சி குடியிருக்கச் செல்வதற்கு குறைந்த பட்சம் இரு வருடங்கள் தேவை என்று படையதிகாரிகள் அரச ஊடகத்துக்கு தெரியப்படுத்தியிருப்பதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் விரைவில் தமது நிலம் மீளக்கிடைக்கும் என நம்பிப் போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு மனச்சோர்வு ஏற்பட்டுள்ளது. நிலைமை இப்படியிருக்க " இன்னும் 2 வாரங்களுக்குள் நல்ல செய்தி வரும்" என்று குடுகுடுப்பைக்காரன் போல ஆரூடம் சொல்லியிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன். இந்த வார்த்தைகள் எந்தளவுதூரம் சாத்தியமானவை என்று சிறு குழந்தைக்கு கூட நன்கு புரியும். முன்னர் "இந்த வருடத்துக்குள் தீர்வு வரும்" என்று ஒவ்வொரு வருடமும் சொல்லிவந்த எதிர்க்கட்சித் தலைவர், இப்போது அந்தக் கால அவகாசத்தை வாரக் கணக்குக்குள் சுருக்கி விட்டார். ஆனால் சிக்கல் என்னவெனில், வருட ஆரம்பத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை மக்கள் காலப்போக்கில் மறந்துவிடக்கூடும். ஆனால் இரு வாரங்கள் அவகாசம் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை மறக்கமாட்டார்கள். இரண்டு வாரங்கள் முடிய " நீங்கள் வழங்கிய வாக்குறுதிக்கு என்ன நடந்தது?" என்று கேட்டு மக்கள் தமது போராட்டத்தின் திசையை சம்பந்தனின் பக்கமாகத் திருப்பினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நிலமென்பது வெறுமனே மண் மட்டுமல்ல. அது சுமந்து கொண்டிருக்கும் கட்டடங்களோ, மரங்களோ மட்டுமல்ல. அந்த மண்ணில் பிறந்து, வளர்ந்த மனிதர்களின் இன்ப, துன்பங்களையும், உணர்வுகளையும் , இரகசியங்களையும் தனக்குள் கொண்டிருப்பவை இந்த நிலங்களே. அந்த நிலங்களை ஆயுதமுனையில் அபகரித்துவிட்டு, அவற்றின் சொந்தக்காரர்களையும் வெளியே போ என்று துரத்துவதுதான் கலியுகநீதி. இந்தக் கலியுக நீதி மஹிந்த காலத்தில் மட்டுமல்ல, மைத்திரி காலத்திலும் தொடர்கிறது. "உங்கட காணி எங்களுக்கு.." என்று திமிரோடு சொல்லிக் கொண்டு, அந்த நிலத்துக்காகப் போராடும் மக்களின் குரல் கேட்காதது போல நடிக்கும் அரசிடம் இருந்து நீதியை எதிர்பார்ப்பது மடத்தனம். இருப்பினும் ஏதேனும் அதிசயங்கள் நிகழ்ந்துவிடாதா என்ற துளியளவு நம்பிக்கையின் துணையோடு நிலத்தின் மீதான ஏக்கங்கள் போராட்டங்களாக விரிந்து கொண்டேயிருக்கின்றன.

K

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முன்னொரு காலம் - பிறகொரு காலம்



■ சிக்மலிங்கம் றெஜினோல்ட்

யாரின் மீதும் நம்பிக்கை வைக்க முடியாத காலமொன்று எங்களின் வாழ்வில் வந்திருந்தது. அப்பொழுது நண்பர்கள் சந்தேகிக்கப்பட்டனர். அல்லது நம்புவதற்கு கடினமான ஒரு நிலையில் தெரிந்தனர். நான் நண்பர்களிடம் சந்தேகத்துக்குரியவனாக இருந்தேன். நானும் நண்பர்களைச் சந்தேகித்தேன். அயலவர்கள் ஒருவரையொருவர் சந்தேகித்தன்ர். அண்ணன் தம்பியைச் சந்தேகித்தான். தம்பி அண்ணனைச் சந்தேகித்தான். தங்கை அக்காவைச் சந்தேகித்தாள். பெற்றோரைப் பிள்ளைகளும் பிள்ளைகளைப் பெற்றோரும் சந்தேகித்தார்கள். இந்த நிலை வளர்ந்து சனங்கள் இயக்கத்தைச் சந்தேகித்தனர். இயக்கம் சனங்களைச் சந்தேகித்தது. இறுதியில் இயக்கமே இயக்கத்தைச் சந்தேகித்தது. (போராளிகளே போராளிகளைச் சந்தேகித்தனர்). இப்படி எல்லோரையும் சந்தேகிக்கும் விதி ஒரு மாபெரும் வலையாக அப்பொழுது எல்லோரின் மீதும் விழுந்திருந்தது.

இது வெட்கம்தான். ஆனால், அன்றைய நாளில் இதுதான் நிலைமை.

இல்லையென்றால் பின்னேரம் வலைஞர் மடம் கடலோரத்தில் எங்களோடு சேர்ந்து ஒரு குடிசையைப் போடுவதற்கான இடத்தைத் தேடிக்கொண்டிருந்த விஷ்ணு, அன்றிரவு எங்களுக்கே தெரியாமல் எப்படித் தப்பிச் செல்ல முயன்றிருப்பான்? அப்பொழுது நாங்களும் அங்கிருந்து வெளியேறக்கூடிய - வெளியேற வேண்டிய நிலையிலேயே இருந்தோம். இது விஷ்ணுவுக்கும் தெரியும். விஷ்ணுவும் குடும்பத்தோடு வெளியேறுவதற்கான சந்தர்ப்பத்தைத் தேடிக்கொண்டேயிருக்கிறான் என்று எங்களுக்கும் தெரியும். ஆனால், அன்றிரவு எங்களுக்குச் சொல்லாமல் அவன் இரகசியமாகவே வெளியேறினான். அப்படிச் சொல்லிக்கொண்டு போவதற்கான யதார்த்தம் அங்கில்லை. மனச்சூழலும் அப்போதில்லை. அதனால், இரகசியமாகவே வெளியேறிப்போய்க் கடலில் வைத்து இயக்கத்திடம் சிக்கிக் கொண்டான்.

சொந்த நிலத்தில் இனி இருக்கவே முடியாதென்று வெளியேறிச் செல்லும்போது படையினராலும் போராளிகளாலும் ஒரே நேரத்தில் இருவழித் தாக்குதல்களுக்கும் இருவழி அபாயங்களுக்குள் உள்ளான சந்தர்ப்பம் நான்காம் கட்ட ஈழப்போரில் உருவாகியிருந்தது. மூன்றாம் கட்ட ஈழப்போரில் ஏறக்குறைய இது அரும்பு நிலையிலிருந்தது. ஆனால், இந்த மாதிரியில்லை. இப்பொழுது நான்காம் கட்டப்போரின்போதோ இது உச்சநிலையை எட்டியிருந்தது.

இலங்கைக்கு வெளியே யாரும் தப்பிப் போய்விடக்கூடாது என்று படைகள் கவனமாக இருந்தன. 'தமிழீழத்தை' விட்டு வெளியேறிச் செல்வதை அனுமதிக்க முடியாது என்று இயக்கம் மிக ஜாக்கிரதையாக இருந்தது. ஒரு சாரார் போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது அதை விட்டு ஏனையவர்கள் தப்பிச் செல்வதை இயக்கம் விரும்பவில்லை.

ஆனாலும் இயக்கத்தின் பகுதிகளில் இருந்து படையினரின் பகுதிக்குச் சனங்கள் போய்க்கொண்டிருந்தனர். இன்னும் பலர் படைக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குப் போவதற்கு முயன்று கொண்டிருந்தனர். அவ்வளவு காலமும் எதிரிகள் என்றும் நம்பவே முடியாதவர்கள் என்றும் கருதப்பட்டிருந்த படைகளிடம் துணிந்து செல்வதற்கு சனங்கள் முனைந்தனர். இதில் யாரும் சரிபிழைகளைச் சொல்ல முடியாது. சூழல் அப்படி. அந்தளவுக்கு உச்சமாக நடந்து கொண்டிருந்தது போர். ஆகவே படையினரிடம் சரண் அடைவதைத் தவிர தப்புவதற்கு வேறு வழிகளே இல்லை. எனவே ஏறக்குறைய இது ஒரு ஏக மனநிலையாக எல்லோரிடமும் உருவாகிக் கொண்டிருந்தது.

இந்த நிலையில் சவாலான காரியம், இயக்கத்தின் பிடியிலிருந்து மீள்வதே.

இந்த மாதிரியான சந்தர்ப்பத்தில் அங்கே யாரும் யாருக்கும் சொல்லிக் கொண்டு வெளியேறுவது குறைவு. சூழ்நிலைச் சாத்தியங்களின் குறைவும் இதற்கொரு காரணம். மற்றது, தகவல் கசிந்து விட்டால் எல்லாமே அம்போ. செல்லும் வழியில் இயக்கத்திடம் சிக்கிக் கொள்ள வேண்டிவந்து விடும். சிக்கினால் அவ்வளவுதான். பிறகு முன்னரணில் நிற்பதைத் தவிர வேறு வழியில்லை. அல்லது, வட்டுவாகலில் உள்ளதைப் போன்ற ஏதாவதொரு சிறைக்கூடத்திலோ சீர்திருத்தப்பள்ளியிலோ சமைத்துக்கொண்டிருக்க வேண்டும். சிலருக்கு விசாரணைகளின் முடிவைப் பொறுத்து தண்டனைகளின் ஏற்ற இறக்கம் உண்டு. ஆகவே, என்னதானிருந்தாலும் இரகசியத்தைக் கசியவிடாமல் பார்த்துக் கொள்வார்கள். உயிர்ப் பிரச்சினையல்லவா!

இன்னொரு சந்தர்ப்பத்தில் விஷ்ணு எங்களிடம் சொல்லாமல் வெளியேறியதைப்போல நாங்கள் திருவருக்கு - (மு. திருநாவுக்கரசுவுக்கு) சொல்லாமல் வெளியேறினோம். இரவு ஒன்பதே முக்கால் மணிவரையில் ஒன்றாகவே வலைஞர் மடம் கடலோரத்தில், மலநாற்றமும் வேட்டோசையுமான பின்னணியில் பி.பி.ஸியைக் கேட்டுக் கொண்டிருந்த நாங்கள், பிறகு வந்த ஒரு மணி நேரத்தில் எங்களுடன் கூடவே இருந்த திருவருக்குச் சொல்லாமல் அந்த இரவு கடல்வழியே வெளியேறிச் சென்றோம்.

ஆனால், அந்தக் கணங்களின் வதையைச் சொல்லவே முடியாது. கூட இருந்து நட்பாகப் பழகியவர்கள், ஒன்றாகவே இருந்து, ஒன்றாகவே பழகி, அன்பில் தோய்ந்திருந்த உறவுகள், நட்பின் நெருக்கத்தோடிருந்தவர்களை எல்லாம் இப்படி அந்நியப்படுத்திய மாதிரி இடையில் விட்டு வெளியேறிச் செல்வதென்பது எவ்வளவு கொடுமையானது? எவ்வளவு வெட்கத்துக்குரியது? என்பதை அந்தக் கணத்தைக் கடக்க முடியாமல் திணறும்போதே புரிந்து கொள்ள முடியும். நாங்களிருந்த நிலைமை இப்படி எங்களையும் - எல்லோரையும் மாற்றியிருந்தது.

வெட்கமும் துக்கமும் கூடிய நிலை அது. அந்நியத்தன்மையும் குற்றவுணர்ச்சியும் துக்கமும் பேரிருளுமாக நம் மனதை அடைத்த கணங்கள் அவை. இனி எப்படி நாங்கள் ஒவ்வொருவரும் எதிரெதிரே முகங்களை நோக்க முடியும்? அதற்கு மனம் எழுச்சிகொள்ளுமா? ஏனிந்த அந்நியத்தனம்? எந்த விதி இப்படி எங்களைப் போட்டு வதைக்கிறது? இப்படியானதொரு நிலையைச் சந்திப்பதற்காகவா நாங்கள் போராடினோம்? அபாய வலயத்தில் இருக்கும் மற்றவர்களைப் பற்றிச் சிந்திக்காமல் அவரவர் தப்பிச் செல்வதென்பது மிகக் கேவலமான செயலே. அதிலும் காயப்பட்டவர்கள், உறவுகளை இழந்தவர்கள் என்று உதவிகள் தேவைப்படுவோரையே கைவிட்டு வரும் மிகக் கொடுமை.

யாரையும் நம்பாமல், யார் மீதும் சந்தேகத்தையே வைத்து வைத்து நடத்தப்பட்ட போராட்டங்களுக்கு இறுதியில் இப்படியான முடிவுகள்தான் வரும் என்று எங்கோ படித்தது நினைவு.

எல்லோருடைய விடுதலைக்காக, பொது நன்மைகளுக்காகப் போராடப் புறப்பட்ட நாங்கள், அதற்காக உயிரையே கொடுப்பதற்குத் துணிந்த நாங்கள் ஒவ்வொருவரும் இப்போது மிகச் சுருங்கி அவரவர் தப்பினால் போதும் என்ற நிலைக்கு வந்திருந்தோம். வெட்கத்திலும் வெட்கமான துக்கம் தரும் வாழ்க்கை இது.

கடலில் பயணிக்கையில் அலைக்களிக்கும் எண்ணங்களைக் கடக்க முடியாமல் திணறினேன். முன்னே விரிந்திருந்த அபாயவெளியைக் கடப்பதை விடவும் அலைக்கழிக்கும் எண்ணங்களைக் கடப்பது கடினமானதாயிருந்தது.

வழி நெடுகத் திருவரைப் பற்றியும் பாலகுமாரனைப் பற்றியும் இன்னும் நெருக்கமான அத்தனை பேரைப்பற்றியும் நினைத்துக்கொண்டு கடலில் இருந்தேன். தப்பிச் செல்ல விதியற்ற அத்தனைபேரின் நிலையும் துக்கத்தைத் தந்தது. அலைகளை விட ஆக்ரோசமாக இருந்தது மனம்.

இரவு ஒரு கள்வனைப் போல வெளியேறி மறுநாள் மதியம் கைகளை உயர்த்தியவாறு அடிமையைப் போல கரை சேர்ந்தோம். இத்தனைக்கும் இதெல்லாம் சொந்த நிலத்திலேயே நடந்து கொண்டிருந்த நிகழ்ச்சிகள். நாம் விடுதலைக்காகப் போராடிய, குருதிய சிந்திய நிலத்தில் நடந்த நிகழ்ச்சிகள்.

இனப்பிரச்சினையாலும் ஈழப் போராட்டத்தின் விளைவாகவும் உலகம் முழுவதும் ஈழத்தமிழர்கள் களவு வழிகளில் போலி முகங்களோடும் அடிமை நிலையோடும் பயணம் செய்யும் நிலை இன்னும் முடியவேயில்லை. இப்போது போர் முடிந்த பிறகும் இந்தக் களவான வழிகளில் - ஆபத்தான நிலையில் (கப்பல்களிலும் பார வண்டிகளிலும்) ஏராளம் பயணங்கள் நடக்கின்றன. (இத்தாலி தொடக்கம் கிறிஸ்மஸ் தீவுகள் வரையில் ஈழத்தமிழர்களின் இரகசியப் பயணங்கள் தொடர்கின்றன).

இதெல்லாம் சமுத்திரத்தைப் போல நீண்ட கதைகள். சொல்லித் தீராதவை.

நான்காம் கட்ட ஈழப்போரில் யுத்த அரங்கு விரிந்து கொண்டுபோனது. அதனுடைய வாய் பெருக்கப் பெருக்க போரிடுவதற்கான ஆள்தொகையும் அதிகமாக இருந்தது. இந்த நிலையில் 'கட்டாய ஆள்சேர்ப்பு' என்ற இயக்கத்தின் நிலைப்பாடு எல்லா இடங்களிலும் பிரச்சினைகளை உருவாக்கியிருந்தது. வெளியிடங்களில் இருந்து போராட்டத்தின் அவசியத்தைப் பற்றிக் கதைத்தார்களே தவிர, யாரும் போராட வரவில்லை. அதற்குத் தயார் கூட இல்லை. அதனால் வன்னியில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் யாராவது ஒருவர் கட்டாயம் போராட வரவேண்டும் என்ற உத்தரவை இயக்கம் அறிவித்ததால், எல்லா வீடுகளும் கலங்கின. தொடக்கத்தில் வீட்டுக்கு ஒருவர் என்ற விதி பிறகு போராடத் தகுதியுள்ளோர் என்றுமாறி, ஒரு குடும்பத்தில் எத்தனைபேரும் போராடலாம். வயதும் வலுவும் இருந்தாற் போதும் என்றாகியது.

'அக்காவை இயக்கத்துக்கு அனுப்பப் போகிறார்களா இல்லைத் தன்னைத் தான் அனுப்பப்போகிறார்களா?' என்று சந்தேகித்தாள் தங்கை. தனக்கு அம்மா 'சப்போர்ட்' பண்ணப்போகிறாவா இல்லைத் தங்கைச்சியைப் பாதுகாக்கப் போகிறாவா? என்று கலங்கினாள் அக்கா.

'அண்ணா உழைத்துக் கொண்டிருக்கிறான். ஆகவே, தன்னைத்தான் போருக்குப் போகச் சொல்லப்போகிறார்களோ?' என்று கலங்கினான் தம்பி. 'இல்லை, தம்பி படிக்கக் கூடியவன். இடையில் படிப்பைக் குழப்பியதால், தன்னைத்தான் இயக்கத்துக்கு அனுப்பப்போகிறார்களோ' என்று பயந்தான் அண்ணன்.


'அத்தான் (அக்காவின் கணவர் அல்லது தங்கையின் கணவர்) இயக்கத்திலிருக்கிறார். குடும்பத்தையும் விட இயக்கத்துக்கே அவர் விசுவாசமாக இருப்பதால் நிச்சயமாக அவர் தன்னை இயக்கத்துக்குக் காட்டிக் குடுத்துவிடுவார்' என்ற சந்தேகத்தில் கலங்கினான் மைத்துனன்.

'அயல் வீட்டாரின் பிள்ளையை இயக்கம் கூட்டிக் கொண்டு போயிட்டுது. ஆகவே, நிச்சயமாகத் தங்களின் பிள்ளையைக் காட்டிக் குடுக்கப்போகிறார்கள்' என்று பக்கத்து வீட்டாரையே சந்தேகப்பட்டனர் அதுவரையில் இயக்கத்துக்குப் பிள்ளையை அனுப்பாத வீட்டார்.

சில வீடுகளில் 'போராட வரவில்லை' என்ற காரணத்துக்காக அக்காவின் கணவரை - அத்தானை இயக்கம் கூட்டிக் கொண்டு போனபோது தம்பிக்குச் சந்தேகம் வந்தது. தான் தப்பிக் கொள்வதற்காக அவர் தன்னைக் காட்டிக் குடுத்துவிடுவாரோ

(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் ஒரு மட்டக்களப்பு பிரதேசவாதி

'வீரமும் களத்தே போட்டு வெறுங் கையோடு இலங்கை புக்கான்" இது கம்பனின் அழிக்கமுடியா கவிதை வரிகளில் ஒன்று.

கருணாவினுடைய செயல்களை எண்ணும்போது கம்பனின் இவ்வரிகள் என் எண்ணத்தில் தோன்றும்.

நான் மட்டக்களப்பில் வாழைச்சேனையிலிருந்து நீலாவணை வரையும், கொக்கட்டிச்சோலை கரடியனாறு எனவும் ஒரு கிழமையாக பல இடங்களிலும் சுற்றித் திரிந்தேன். அப்போது என்னை ஆங்காங்கு இனம் கண்டுகொண்ட அன்பர்கள், ஆர்வலர்கள், உறவினர்கள் எனப்பலரும் 'உங்களுக்கென்ன பைத்தியமா? கருணா குழுவினர் நீங்கள் இங்கு வந்திருப்பதை அறிந்தால் உங்களை கொன்றுவிடுவார்கள்" - என்று என்னிடம் கூறினர்.

மட்டக்களப்பு நான் பிறந்து வளர்ந்த மண். எந்த வெளிநாடு சென்றாலும் மட்டக்களப்பின் வாவியோரம் மாலை நேரத்தில் வீசும் தென்றல் உலகத்தின் எந்த நவீன சொர்க்கங்களிலுமே கிடைக்கப்போவதில்லை. மீண்டும் மீண்டும் அங்குதான் நான் செல்வேன். என்னை யாரும் தடுக்கமுடியாது. உலகம் முழுதும் சுழலும் என் பயணங்களின் முடிவு மட்டக்களப்பில்தான்.

இலங்கை வான்படையின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட ஆலடிச்சோலையில் நான் புதைக்கப்பட வேண்டும் என்பதுதான் என் அவா. என்னுடைய ஆவலை அரசியல் இலாபத்துக்காகவும் சுயநலநோக்கத்துக்காகவும் இலங்கை படைகளுடன் சேர்ந்து தடைசெய்ய முற்படும் எந்த ஒரு அற்ப பதரும் தடுத்துவிடமுடியாது. என்னிடம் மட்டக்களப்பில் இருந்து உடனடியாகப் புறப்படும்படியும் இல்லையெனில் என்னை இலங்கை இராணுவ புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து செயற்படும் கருணா குழுவினர் கொன்றுவிடுவார்கள் எனவும் கூறிய அனைவரும் ஒரே அரசியல் நோக்கம் கொண்டவர்கள் அல்லர். அவர்களுள் படையினருடன் வேலை செய்யும் முன்னாள் இயக்க உறுப்பினர்களும் அடக்கம்.

மட்டக்களப்பில் புலிகளுக்கு எதிரான பல இயக்கங்கள் செயற்பட்டிருக்கின்றன. அவர்கள் எவருமே (ராசிக் உட்பட) மட்டக்களப்பிலிருந்து பெரும்பாலான பத்திரிகையாளர்களை விரட்டியடிக்கும் அளவுக்கு அராஜகம் புரிந்தவர்கள் அல்லர். ஆனால் இன்று பல்வேறு அரசியல் கருத்துக்களைக் கொண்டவர்கள் கூட அபிப்பிராய பேதமின்றி 'கருணா என்றால் பத்திரிகையாளர்களை கொன்றழிக்கும் அல்லது மிரட்டியடிக்கும் பேர்வழி" என கூறுகின்றனர்.

வடக்கிலே இலங்கை படைகளை விரட்டியடித்த புலிகளின் சிறப்பு

> ஊடகவியலாளர் தராகி சிவராம் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டு, பின்னர் கொன்று வீசப்பட்ட கொடூரம் நிகழ்ந்து 12 வருடங்கள் கடந்து விட்டன. ஆனால் இன்னும் அவரது சாவுக்கான நீதி நிலைநாட்டப்படவில்லை. தமிழ்த் தேசியத்துக்காக ஊடகத்துறையில் ஓயாது உழைத்த தராகி சிவராமின் கடைசிக் கால கட்டுரைகளில் அவரது உணர்வுகளை நினவேந்திப் பகிரும் வகையில் இங்கு மீள்பிரசுரிக்கப்படுகிறது.

மிக்க கட்டளைத் தளபதியாக வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் ஏன் ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் கொண்டாடப்பட்ட கருணா, கேவலம் இன்று நிராயுதபாணிகளான தம் எழுத்தைத் தவிர எந்தவித பாதுகாப்புக் கவசமும் இல்லாத நடேசன் போன்ற எழுத்தாளர்களை கொலைசெய்கின்ற ஒரு நபராகவும், துரைரட்ணம், சண். தவராசா, வேதநாயகம் ஆகிய மட்டக்களப்பு எழுத்தாளர்களை கொலை செய்ய திட்டமிடும் இலங்கை இராணுவ புலனாய்வுத்துறையின் இன்னுமொரு கையாளாகவும் மட்டக்களப்பு மக்களால் கருதப்படுகின்ற நிலைக்கு இறங்கியிருப்பது வேதனையளிக்கிறது.

வீரம் விளைந்த நிலமென்று கருணாவால் புகழாரம் சூட்டப்பட்ட மட்டக்களப்பு மண் இலங்கை இராணுவத்துக்கு இன்னுமொரு கைக்கூலியை கொடுத்துவிட்டோம் என வெட்கித்தலைகுனிந்து நிற்கிறது.

மட்டக்களப்பு மண்ணின் விடுதலைக்காக என கருணா எதைச் செய்திருந்தாலும் அதை இரண்டாம் பேச்சுக்கு இடமின்றி முன்னின்று ஆதரித்திருக்கக்கூடிய நூற்றுக்கணக்கான மண்ணின் மைந்தர்களில் என்னையும் கணக்கில் எடுக்கலாம்.

ஏனெனில் மட்டக்களப்பு மண்ணின் விடிவுபற்றி கருணாவுக்கு திடீரென ஞானோதயம் தோன்றுவதற்கு சரியாக 22 வருடங்களுக்கு முன்னர் கிழக்குக்கு என தனி இயக்கம் தொடங்கியவர்களில் நானும் ஒருவன். என்னுடைய வீட்டிலிருந்த துப்பாக்கிதான் மட்டக்களப்பு கச்சேரியில் 200இற்கு மேற்பட்ட ஆயுதங்களை அபகரித்துச் செல்வதற்கு பயன்படுத்தப்பட்ட ஒரே ஒரு ஆயுதம் (எங்களுடைய செயற்பாடுகளை அறிந்து மிரண்ட என் தாயார் அத்துப்பாக்கியின் தோட்டாப்பெட்டிகளை மறைத்ததும் பின்னர் எமக்கெல்லாம் அன்புடன் உணவளித்ததும் மறக்கமுடியாத வேறுகதை)

நாங்கள் இவ்வாறு மட்டக்களப்புக்கென இயக்கம் தொடங்கிய காலத்தில் ஏதும் அறியா பாலகனாக பா.சின்னத்துரையுடன் புறப்பட்டுச் சென்று புலிகளோடு இணைந்து இந்தியா சென்ற கருணா, திடீரென் மட்டக்களப்பு பிரதேசவாதம் என்ற பூச்சாண்டியை கிளப்புவது எனக்கு விநோதமாக இருக்கின்றது.

மட்டக்கள[illegible]

வேண்டும் அந்த மண்ணுக்காக பல வேலைகளைச் செய்யவேண்டும். சிங்களப் பேரினவாதத்திலிருந்து அதன் எல்லைகளைக் காக்கவேண்டும் என்ற இலட்சியவெறியோடு எங்களுடைய இயக்கம் அன்று இயங்கியது. இதற்கென எங்களுக்குத் தேவையான பல முக்கிய வரைபடங்களை தந்துதவியவர் எனது அன்பு நண்பர் ஞானரதன். பிடிபட்டால் தனக்குத் தொழில் இல்லை. ஓய்வூதியம் இல்லை என்பதை நன்றாக தெரிந்தும்கூட பயமின்றி உதவிசெய்த அந்த அன்பனை நான் என்றும் மறக்கமுடியாது.

எமது மட்டக்களப்பு இயக்கத்தின் உயிர்நாடியாக இருந்தவன் சுரேஷ் என்றும் - பின்னர் பயஸ் என்றும் அறியப்பட்ட எனது அன்பு நண்பன். என்னுடைய வீட்டில் பலநாள் பதுங்கி வாழ்ந்தவன். இன்று கனடாவில் வாழ்கின்ற 'கல்லடியான்" தங்கவடிவேலைக் கேட்டால் சுரேஷைப் பற்றி இன்னும் பல கதை சொல்வான். எங்களுடைய மட்டக்களப்பு இயக்கத்தின் உயிர்மூச்சாக இருந்த சுரேஷ், ஒரு யாழ்ப்பாணத்தான் போராளி. இயக்கம் என்றாலே நடுத்தர வர்க்கங்கள் பயந்து ஒதுங்கிய காலத்தில் தன்னுடைய தொழிலையும் குடும்பத்தையும் சிந்தியாது எமக்குதவி செய்த ஞானரதன் ஒரு யாழ்ப்பாணத்தான். சுரேஷ் பின்னர் புலிகளில் இணைந்து இந்தியா சென்று பயிற்சிபெற்று, மீண்டும் மட்டக்களப்புக்கு வந்து 1985ஆம் ஆண்டு மாவீரனாகிப் போனான். மட்டக்களப்புக்கென்று நாங்கள் இயக்கம் தொடங்கியபோது எங்களிடம் தன்னம்பிக்கையையும் மண்வெறியையும் தவிர வேறெதுவும் இருக்கவில்லை. மட்டக்களப்பில் நெடுஞ்சாலைத் திணைக்களத்தில் இருந்த வெடிக்கவைக்கும் கருவியை (Exploder) எடுக்கச்சென்றபோது எங்களிடம் ஒரு பாண் வெட்டும் கத்தியையும் ஒரு சிறுகட்டுக் கயிறையும் தவிர எதுவுமே இருக்கவில்லை. எங்களிடம் இருந்தது மாவீரனாகிப்போன சுரேஷ் தந்த தன்னம்பிக்கை மட்டும்தான். ஆனால், மட்டக்களப்பு மண்ணின் நன்மைக்காக புலிகளிடமிருந்து பிரிகின்றேன் என்று கூறிய கருணாவிடம் இருந்த வளங்களுக்கு அளவுகணக்கில்லை. ஆனால் நடந்தது என்ன?

தனியாகப் போகின்றேன் என கருணா பிரகடனப்படுத்தி நான்கு நாள்களின் பின்னர் கொழும்பில் ஒரு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்று பதிவுசெய்யப்பட்டது. நிறுவனத்தின் பெயர் 'மகாஜால ஏற்றுமதி இறக்குமதி கம்பனி" பதிவிலக்கம்: N(PVS) 36846 பதிவுசெய்யப்பட்ட திகதி: 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதி. இதற்கான ஆவணங்களை தயார்செய்தவர் சட்டத்தரணியும் நொத்தாரிசுமான எஸ். துரைராஜா இந்த நிறுவனத்தின் உரிமையாளர். வித்யாபதி முரளிதரன், நிர்வாக முகாமையாளர். சுந்தையா சந்திரசேகரம் கல்லடியைச் சேர்ந்தவர். வித்யாபதியின் தந்தை, வித்யாபதி என்பது கருணாவின் மனைவி நிராவின் சொந்தப் பெயராகும்.

மட்டக்களப்புக்காக அதன் மக்கள் மீது கொண்ட அக்கறைக்காக - விடுதலைப்புலிகளிடமிருந்து பிரிகின்றேன் எனக் கூறிய கருணா ஏன் தன் மனைவியின் பெயரில் ஏற்றுமதி, இறக்குமதி நிறுவனம் தொடங்கவேண்டும்?

தனது மனைவியின் பெயரில் இரண்டரைக் கோடி ரூபாவை வெள்ளவத்தையிலுள்ள தனியார் வங்கி ஒன்றில் ஏன் வைப்புச் செய்யவேண்டும்? இது மட்டுமன்றி மட்டக்களப்பில் கூட்டுறவு நிறுவனங்களிலிருந்தும் முதலாளி ஒருவரிடமிருந்தும் பெறப்பட்ட மூன்று கோடி ரூபாவை கருணா என்ன செய்தார்?

மட்டக்களப்பு மீது பேரன்பு இருந்திருந்தால் மேற்படி கோடிக்கணக்கான பணத்தை அங்கிருக்கும் ஆயிரக்கணக்கான ஏழை விதவைகளுக்கு வழங்கியிருக்கலாமே!

கருணாவுக்கு உதவிசெய்து தங்கள் சொத்துக்களையும் வாழ்வையும் இழந்த எத்தனையோ அன்பர்கள் இருக்க, தமிழ் மக்களைக் கொன்றொழித்த ஐக்கிய தேசியக் கட்சியின் அலிஸாஹிர் மௌலானவை மட்டும் ஏன் கருணா நம்பவேண்டும்?

இது போன்ற இன்னும் பல கேள்விகள் உண்டு.

என்னைக் கொல்வது அவற்றுக்கு மறுமொழியாகிவிடாது. வெளிநாட்டு வானொலிகளுக்கு அறிக்கை விடுவதை விடுத்து மட்டக்களப்பு மக்களுக்கு விளக்கம் அளிப்பது கருணாவின் கடமை. ஆனால், அதற்கு அவருடைய போசகர் இடமளிப்பாரா என்பது கேள்விக் குறி.

போன கிழமை நான் ஆங்கிலத்தில் 'டெய்லி மிரர்" பத்திரிகையில் எழுதிய ஒரு கட்டுரையின் தழுவல் என என்னுடைய பெயரில் (தராக்கி) வீரகேசரி வாரவெளியீட்டில் ஒரு ஆக்கம் வெளியாகியிருந்தது. இதில் நான் எழுதாத சில விடயங்களும் எனது ஆங்கில நடையை சரியாக புரிந்துகொள்ளாமையால் ஏற்பட்ட தவறுகளும் இடம்பெற்றுள்ளன. எனது மூலக்கட்டுரைக்கு முரணான சில அபிப்பிராயத்தை மேற்படி தமிழ்த்தழுவல் ஏற்படுத்தியதையிட்டு நான் மனம் வருந்துகிறேன்.

எனது ஆங்கில கட்டுரைகளை மொழிபெயர்க்க விரும்பும் அன்பர்கள் அகராதியை மட்டும் துணைக்கொள்ளாமல் ஆங்கில வழக்காறுகளையும் (Idioms) கவனத்தில் கொள்ளுமாறு தாழ்மையாக வேண்டிக்கொள்கிறேன். 19.07.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரேபுள்ளியில் இணையும் ஈழத்தமிழரும் பர்மியர்களும்

காஃகுமாரதாஸன்

ஈழத் தமிழர்களைத் தொடர்ந்து தெற்கு மற்றும் கிழக்கு ஆசியக் கடற்பரப்புகளில் தத்தளிக்கும் இனமாக மாறியிருப்போர் மியன்மாரின் றோஹின்யா (Rohingya) முஸ்லிம் அகதிகள்.

தங்களின் பூர்வீக நிலமான மியன்மாரின் மேற்கு ராகின் (Rakhine) பிராந்தியத்தை விட்டு விரட்டப்படும் இவர்கள், எல்லை நாடான பங்களாதேஷ் மற்றும் தாய்லாந்து, இந்தியா, மலேசியா என்று பல நாடுகளை நோக்கி ஏதிலிகளாக ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் சுமார் முப்பது பேர் காங்கேசன்துறை கடல் வழியாக இலங்கையை வந்தடைந்திருப்பதுதான் பிந்திய நிலவரம். இந்திய றோலர் படகு ஒன்றில் வடக்கு நோக்கி வந்துகொண்டிருந்த இந்த அகதிகளை இலங்கைக் கடற்படை மீட்டு கரை சேர்த்திருக்கிறது.

பௌத்த பெரும்பான்மை நாடான மியன்மாரில் (பர்மா), பெரும் இன அழிப்பை எதிர்கொண்டு அதிலிருந்து தப்பிவரும் றோஹின்யா அகதிகள், மற்றொரு பௌத்த பெரும்பான்மை ஆட்சி நிலவும் நாட்டில்- இலங்கையில்- அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். இலங்கை பௌத்த அரசு சிறுபான்மையினரான இந்த முஸ்லிம் அகதிகளை எவ்வாறு கையாளப்போகின்றது என்பது இனிமேல்தான் தெரியவரும்.

சமகால உலக வரலாற்றில் பாதுகாப்பற்ற ஒரு சிறுபான்மை இனமாக அடையாளப்படுத்தப்படுகின்ற றோஹின்யா மக்கள், மியன்மார் அரசபடைகளால் இனச்சுத்திகரிப்புக்கு உட்படுத்தப்பட்டு வருவதை உலகம் மிகத் தாமதமாக மெல்ல ஏற்றுக்கொள்ளத் தொடங்கியுள்ளது. இவர்களுக்கு எதிராக திட்டமிடப்பட்டு நடத்தப்படும் கொடுமைகள், கட்டமைக்கப்பட்ட ஓர் இன அழிப்பாக மாறி வருகின்றது என்று மனித உரிமையாளர்கள் குரல் எழுப்புகின்றனர்.

பதினான்காம் நூற்றாண்டில் இருந்தே மியன்மாரில் ஒரு பாரம்பரிய தாயகத்தைக் கொண்டிருந்த மக்கள் கூட்டத்தினர் என வரலாற்றாளர்களால் நம்பப்படும் றோஹின்யா முஸ்லிம்களை, பங்களாதேஷில் இருந்து வந்த வந்தேறு குடிகள் எனக்கூறி, அவர்களைத் தனது பிரசைகளாக ஏற்க மறுக்கும் மியன்மார் அரசு, அவர்களது குடியுரிமையைப் பறித்து வைத்திருக்கிறது. உலகின் கண்களுக்குத் தெரியாமல் அங்கு நடைபெறும் வகைதொகையற்ற அரச வன்முறைகளும் சித்திரவதைகளும் சுமார் எழுபதாயிரம் றோஹின்யா மக்களை அகதிகளாக பங்களாதேஷ் நோக்கி விரட்டியடித்துள்ளன. அங்கும் வேறுபல நாடுகளிலும் முகாம்களில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள இவர்கள் சரியான பராமரிப்பின்றி பசி பட்டினியை எதிர்கொண்டு வருகின்றனர்.

றோஹின்யா மக்கள் மத்தியில் இருந்து அவர்களைப் பாதுகாக்கவென உருவெடுத்த ஒரு முஸ்லிம் தீவிரவாத இயக்கம் கடந்த ஆண்டு ஒக்ரோபரில் அதன் முதலாவது தாக்குதலை நடத்தியது. இதில் மியன்மார் இராணுவத்தினர் சிலர் கொல்லப்பட்டனர். இதையடுத்து றோஹின்யர்களின் பிராந்தியத்தில் தீவிரவாத ஒழிப்பு என்ற போர்வையில் அரசுப் படைகளின் பெரும் ஒடுக்கு முறைகள் கட்டவிழ்ந்தன. கைதுகள், நீதிக்குப் புறம்பான கொலைகள், பாலியல் வல்லுறவுகள் என மோசமான கொடுமைகள் அங்கு நிகழ்ந்தேறின. பல்லாயிரக்கணக்கானோர் தமது சொந்த நிலங்களில் இருந்து விரட்டப்பட்டு அகதிகளாக்கப்பட்டனர்.

இவற்றுக்கான ஆதாரங்களாக வெளியான படங்களையும் வீடியோ காட்சிகளையும் போலியாக உருவாக்கப்பட்டவை எனக் கூறி மியன்மார் அரசு நிராகரித்தது.

இறையினால் நடத்தப்படுகின்றதொரு பாடம் என்ற வகையிலேயே இந்த விடயத்தைப் பார்க்க முனைகிறோம். இந்த அகதிகளின் மீது என்ன நடவடிக்கையை எடுத்தாலும் அது இலங்கையின் அரசியல் ஸ்திரத்தைப் பாதிப்பதாகவே இருக்கும். தன் வழியே சென்ற பாம்பொன்றை எடுத்து தலையிலேயே சுற்றிக் கொண்டதைப்போல இலங்கை மாட்டிக் கொண்டிருக்கிறது. இதன் பின்னணியில் ஒரு சர்வதேச அரசியல் பின்னணி இருப்பதாகச் சந்தேகம் வலுக்கிறது. ஏனெனில் அகதிகள் பர்மியர்கள். அவர்களைச் சுமந்து கொண்டு வந்ததோ இந்திய றோலர் படகு. அதுவும் வேறு ஒரு நாட்டை நோக்கிச் சென்ற வழியில் கைது செய்யப்பட்ட தென்பது நம்பத் தகுந்ததாக இல்லை. அவர்கள் இலங்கையை நோக்கியே வந்திருக்கிறார்கள் தெரிந்தோ தெரியாமலோ அரசியல் சர்ச்சை ஒன்றை உள்வாங்கியிருக்கிறது இலங்கை.

பாரதூரமான விடயமென்று இந்த மக்களின் பின்னணியில் இருப்பது தெரிந்திருந்தால் இவர்களைக் கைது செய்யாமலே இலங்கை அரசு இருந்திருக்கும். கைதுசெய்தபோது கடற்படைக்கு இவர்கள் பூர்வீகம் தெரியவில்லை. இவர்கள் விடயத்தில் இலங்கை அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது? சிங்கள மக்களின் சிந்தனை எப்படி இருக்கப்போகிறது? அரசியலுக் கப்பால் சகோதரத்துவத்தைப் பார்த்து முஸ்லிம்கள் என்ன செய்யப்போகிறார்கள்? தமிழராகிய நாம் தான் என்ன செய்யப் போகிறோம்.? உள் நாடு மற்றும் சர்வதேச அரசியலோடு பின்னிப் பிணைந்த விடயம் என்றதால். மெல்லவும் முடியாமல் துப்பவும் முடியாமல் இலங்கை அரசுதான் திண்டாடப்போகிறது..!!!!


சமாதானத்துக்கான நோபல்பரிசு பெற்றவரும் இராணுவ ஆட்சியாளர்களால் 15 ஆண்டுகள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தவருமான ஆங் சான் சூ கி யின் கட்சி மியன்மாரில் தற்போது அதிகாரத்தில் உள்ளது. அவரது செல்வாக்கின் கீழான பௌத்த பெரும்பான்மை அரசு றோஹின்யர்களைக் கொடுமைப்படுத்துவதாக சுமத்தப்பட்டுவரும் குற்றச்சாட்டுக்கள் மற்றும் அழுத்தங்களை எதிர்கொள்ளும் ஆங் சான் சூகி, இந்த விவகாரத்தில் சர்வதேச விசாரணைத் தலையீடுகளை மறுத்து வருகிறார். மாறாக உள்நாட்டு மட்டத்திலான விசாரணைக்கு வெளிநாட்டு உறுப்பினர்கள் இணைந்த விசாரணைக் குழு ஒன்றை அண்மையில் அவர் அனுமதித்திருந்தார்.

முன்னாள் ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனானை தலைமையாகக் கொண்ட அக்குழு கடந்த மாதம் சமர்ப்பித்த இடைக்கால அறிக்கை றோஹின்யர்களின் நீண்டகாலப் பிரச்சினைக்கு நீதி வழங்கவில்லை. மாறாக அந்த மக்கள் மீதான அரச இராணுவ வன்முறைகளை, ஒக்ரோபரில் நடந்த தீவிரவாதத் தாக்குதலோடு தொடர்புபடுத்தி அதன் விளைவான சம்பவங்கள் என்ற சாரப்பட அறிக்கை சமர்ப்பித்தது.

இந்த நிலையில் இது விடயத்தில் உண்மை கண்டறியும் குழு ஒன்றை மியன்மாருக்கு அனுப்புவது என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு கடந்த மார்ச்சில் தீர்மானம் ஒன்றை எடுத்திருக்கிறது. எனினும் இக்குழுவை நாட்டினுள் அனுமதிப்பது பௌத்த பெரும்பான்மையினரதும் ஆட்சியில் செல்வாக்குமிக்க இராணுவத்தினரதும் எதிர்ப்பை மீறி நடக்குமா என்பது இன்னமும் சந்தேகமாகவே நோக்கப்படுகிறது.

தங்களுக்கான ஆயுதப்போராட்ட வழிமுறை ஒன்றை ஆரம்பிப்பதற்கு முன்பாகவே பெரும் இன அழிப்பை எதிர்கொண்டுள்ளவர்கள் றோஹின்யாக்கள். சவூதி அரேபியாவின் ஆதரவில் செயற்படுவதாகக் கூறப்படும் புதிய முஸ்லிம் மத மார்க்க இயக்கம் ஒன்று இப்போதுதான் அங்கு தனது தீவிரவாத செயற்பாடுகளைத் தொடங்கியுள்ளது. இதனை ஒடுக்குவதற்காக இராணுவமும் பொலிஸாரும் பரந்த அளவில் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர்.

தொடரும் அரச வன்முறைகளிலிருந்து தப்ப தொடர்ந்தும் அண்டை நாடுகளை நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்ற றோஹின்யாக்களில் ஒரு சிறுகுழுவினர் இலங்கையின் வடபகுதியில் தஞ்சமடைந்திருப்பது, ஈழத்தமிழர்களது போராட்டவரலாற்றின் பல நிகழ்வுகளை இதே பிராந்தியத்தின் மற்றொரு சிறுபான்மை இன மக்களின் அவலங்களோடு ஒரே புள்ளியில் தொடர்புபடுத்தியிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரப்பலன்

**மேடம்**
எடுத்த காரியசித்தி. மனக்கவலை. பொருள்வரவு.

**ரிஷபம்**
எதிர்ப்பால் சிறப்பு. மனைமாட்சி. காரியத்தடை

**மிதுனம்**
நண்பரால் கவலை. தனிமை. பொருள் சேர்க்கை

**கடகம்**
போனதை எண்ணி வருத்தப்படல். சிறப்பு. பலம்

**சிம்மம்**
புத்திரரால் கவலை. மனைச்சிறப்பு. உழைப்பு

**கன்னி**
சிறப்பு. மனையில் பிணக்கு. சுகச்செலவு. பயம்.

**துலாம்**
திருடர் பயம். மன உழைச்சல். சம சுகம். சித்தி.

**விருச்சிகம்**
மனைவிருத்தி. மக்கள்பேறு. சுகச்செலவு. தவம்.

**தனுசு**
காரிய ஜெயம். சந்தோசம். வீண் அலைச்சல்

**மகரம்**
மனத் தெளிவு. மக்களால் கவலை. துயரம்.

**கும்பம்**
வீண் அலைச்சல். வேளாண்மை சிறப்பு. பகை

**மீனம்**
அயல் சிறப்பு. தர்ம சிந்தனை. தாகமிகுதி. தவம்



கடந்த 29.04.2017 அன்று கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாமனிதர் தராக்கி சிவராமின் பன்னிரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்வின் பதிவுகள்.





கடந்த 25.04.2017 அன்று பொன்னாலை கலாசார மண்டபத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் செல்வரத்தினம் ரூபனின் ஏழாவது ஆண்டு நினைவு நிகழ்வுகளின் பதிவு.



வெற்றிச்செல்வியின் ஐந்து நூல்களின் அறிமுகம், 26.04.2017 அன்று யாழ்.பொதுசன நூலக மேற்தள மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வின் போது....



தமயந்தியின் ஒளி ஓவியக் கண்காட்சியும் "ஏழு கடல் கன்னிகள்" மற்றும் "ஏகலைவன்" ஆகிய அவரது நூல்கள் பற்றிய கலந்துரையாடலும் சுவாமி விபுலானந்தா நுண்கலைக் கல்லூரியில் 28.04.2017 அன்று இடம்பெற்றது.



கடந்த 30.04.2017 அன்று திசேராவின் 'யோவான் 14:2", வி.கௌரிபாலனின் 'காற்றில் மிதக்கும் தழும்பின் நிழல்" சாத்திரியின் "அவலங்கள்" ஆகிய மூன்று கதைப்புத்தகங்களைப் பற்றிய உரையாடல் எழுத்தாளர்.க.சட்டநாதனின் நெறிப்படுத்தலில் யாழ்ப்பாணத்தில் நடந்தபோது.



க. பாலேந்திரா நெறியாள்கைசெய்த - பேர்டோல்ட் பிரெக்ட்டின் 'யுகதர்மம் நாடகமும் பதிவுகளும்' நூல் அறிமுக நிகழ்வு, 29.04.2017 அன்று யாழ்.பொதுசன நூலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னன் மனதை மாற்றிய புதிர்!

மரகதவூர் நாட்டை மன்னன் வீரசேனன் ஆட்சி செய்தான். அந்த நாட்டில் வாழும் மக்களுக்கு மன்னரே கடன் கொடுப்பதும், அதை அவரே வசூல் செய்வதும் வழக்கமாக இருந்தது. அப்படிக் கடன் வாங்கியவர்களில் முத்தையனும் ஒருவர்.

முத்தையன் நீண்ட நாள்களாகக் வாங்கிய கடனைச் செலுத்தவில்லை. ஒருநாள் அமைச்சரையும் அழைத்துக் கொண்டு மன்னரே முத்தையனின் வீட்டுக்குச் சென்றார். . வீட்டுக்கு வெளியே நின்றபடி "முத்தையா...முத்தையா..." என்று குரல் கொடுத்தார்.

வீட்டுக்கு உள்ளேயிருந்து 10 வயதுச் சிறுமி வெளியே வந்தாள். அவளுக்கு மன்னரைப் பார்த்ததும் மகிழ்ச்சி. "மன்னா... தாங்கள் எங்கள் வீடு தேடி வந்தது நாங்கள் செய்த புண்ணியம். தங்களின் வருகை மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது" என்றாள்.

"அதெல்லாம் இருக்கட்டும். முதலில் உன் தந்தையைக் கூப்பிடு" என்று மன்னர் அதிகாரத் தோரணையில் கட்டளையிட்டார்.

"மன்னா.. தற்போது என் தந்தை வீட்டில் இல்லை. அவர் சூரியனின் கண்ணை மூடுவதற்காகச் சென்றிருக்கிறார்" என்றாள்.

"என்னது, சூரியனின் கண்ணை மூடவா?" மன்னருக்கும் மந்திரிக்கும் அவள் சொன்னது புரியவில்லை. அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், "சரிசரி... உன் அம்மாவைக் கூப்பிடு" என்றார்.

"அம்மாவா...? அம்மா தங்கத்திலிருந்து வெள்ளியைப் பிரித்து எடுக்க அடுப்பைப் பற்ற வைத்து, உலையேற்ற போய் இருக்கிறார்" எனப் பதில் சொன்னாள்.

ஒன்றும் புரியாமல் மன்னர் மந்திரியைத் திரும்பிப் பார்த்தார். மந்திரி தனக்கும் எதுவும் புரியவில்லை என்பதைப் போலத் தலையை ஆட்டினார். இதனால் கோபமான மன்னர் "கடனை வசூல் பண்ண வந்த இடத்தில் இவள் புதிர் போட்டுப் பேசி நம்மைக் குழப்புகிறாளே. இவளைச் சும்மா விடக் கூடாது" என நினைத்து, சிறுமியிடம் மிரட்டும் தோரணையில் பேசினார்.

"நான் யாரெனத் தெரியாமல் என்னிடம் விளையாடுகிறாய்" என்றார் மன்னர்.

"மன்னா, தாங்கள் யாரென நாடே அறியும். தாங்கள் ஹரிஹர வம்சம்" என்றாள் சிறுமி.

"மந்திரியாரே! இந்தச் சிறுமி என்னை மிகவும் குழப்புகிறாள். இப்போது வாரும், போகலாம்" என்று சொல்லி இருவரும் புறப்பட்டுச் சென்றனர்.

மறு நாள்

மன்னர் மந்திரியை வரவழைத்துக் கேட்டார். "மந்திரியாரே! அந்தச் சிறுமி நேற்று சொன்ன வார்த்தைகள் இன்னமும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. அவள் சொன்ன



புதிர்களுக்கு என்னால் விடை கண்டுபிடிக்க முடியவில்லை. உங்களால் ஏதேனும் கண்டுபிடிக்க முடிந்ததா?" என்று கேட்டார்.

"ஆம் மன்னா! அந்தப் புதிருக்கான விடையைக் கண்டுபிடித்துவிட்டேன்".

"பிரமாதம்! அதைச் சொல்லும்" என்றார் மன்னர்.

"முதல் புதிர். அவளது தந்தை கூரையைப் பழுது பார்க்கப் போய் இருக்கிறார் என்று சொன்னாள். அதாவது வீட்டின் கூரை பழுது அடைந்துவிட்டால், சூரிய வெளிச்சம் வீட்டுக்குள் விழும். கூரையை மூடி விட்டால் வெளிச்சம் அடிக்காது. அதைத்தான் அப்படிச் சொல்லி இருக்கிறாள்" என்றார் மந்திரி.

"சரி...இரண்டாவது?"

"அவளது அம்மா நெல்லை அவித்து அரிசியாக்க உலையேற்றும் பணிக்குச் சென்றிருக்கிறாள். அதைத்தான் தங்கத்திலிருந்து வெள்ளியைப் பிரித்தெடுக்கப் போனதாகச் சொன்னாள்."

" நல்ல விளக்கம். மூன்றாவதாக என்னை 'ஹரிஹர வம்சம்' என்று சொன்னாளே. அது என்ன?" என்று கேட்டார் ராஜா.

"மன்னராகிய தாங்கள் நல்லது செய்பவர்களைக் காப்பதும் தீமை செய்பவர்களைத் தண்டிக்கவும் செய்வதால் காக்கவும் அழிக்கவும் செய்யும் கடவுளைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறாள்" என்று மந்திரி விளக்கம் அளித்தார். இதைக் கேட்டதும் மன்னர் மகிழ்ச்சியடைந்தார்.

"மந்திரியாரே! அந்தச் சிறுமியை உடனே அரண்மனைக்கு அழைத்து வர உத்தரவு போடும்" என்று கட்டளையிட்டார். உடனே அந்தச் சிறுமியையும் அவரது தந்தையையும் அரண்மனைக்குக் காவலர்கள் அழைத்து வந்தனர். கடனுக்காக மன்னர் தண்டிப்பாரோ எனச் சிறுமியின் தந்தை பயப்பட்டார். ஆனால், சிறுமியைச் சபைக்கு அழைத்து அவளது திறமையைப் பாராட்டினார். ஏராளமான பரிசுகளையும் கொடுத்தார்.

பிறகு சிறுமியின் தந்தையிடம் திரும்பி, "முத்தையா! மிகவும் அறிவான குழந்தையைப் பெற்றிருக்கிறாய். அவளது புத்திக்கூர்மையைப் பாராட்டுகிறேன். நீ வாங்கிய கடனைத் திருப்பித் தர வேண்டாம்." என்றார்.

மகளை மெச்சியபடி சந்தோசத்துடன் அழைத்துச் சென்றான் முத்தையா.

# ஹாய் குட்டீஸ்...!



உங்களின் படைப்புகள் அனைத்தும் புதுவிதியில் பிரசுரமாக வேண்டுமா? உடன் எழுதி அனுப்புங்கள்.

puthuvithi@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கும் உங்கள் படைப்புகளை அனுப்பி வைக்க முடியும்.

'புதுவிதி' இல.107 இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## தகவல்கள் அறிவோம்

### உலகின் மிகப்பெரிய மரக்கட்டடம்



ஸ்பெயினின் செவாலே நகரில் மரங்களால் மட்டுமே உருவாக்கப்பட்ட கட்டடம் உள்ளது. இதனை 2011 ஆம் ஆண்டு மெற்றோபோல் பராசோல் நிறுவனம் அமைத்தது. இதுதான் உலகிலேயே மரத்தால் உருவான மிகப்பெரிய கட்டடம்.

இந்தக் கட்டடத்தை ஜர்கன் மேயர் என்பவர் வடிவமைத்தார். உலகெங்கும் உள்ள 50 புதுமையான கட்டடங்களில் இதுவும் ஒன்று. தவிர ஜர்கன் மேயர் அமைத்த 6 கட்டடங்கள் உலகின் 50 புதுமையான கட்டங்களில் இடம்பிடித்துள்ளன.

### உப்பு நீரால் ஒளிபெறும் நாடு!



உப்பு நீரில் எரியும் மின் விளக்கைக் கண்டுபிடித்திருக்கிறது பிலிப்பைன்ஸ். நூற்றுக்கணக்கான தீவுகளைக் கொண்ட நாடு பிலிப்பைன்ஸ். இதில் பல தீவுகளில் மின்சார வசதி இல்லை. இதனால் மக்கள் மண்ணெண்ணெய், மெழுகுதிரிகளையே பயன்படுத்தி வந்தனர்.

பெரும்பாலான மக்கள் ஏழைகளே என்பதால் அவர்களால் இந்தச் செலவுகளை தாங்க முடியவில்லை. இந்நிலையில்தான் உப்புநீரில் எரியும் மின் விளக்கை பிலிப்பைன்ஸ் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த மின் விளக்கால் வெளிச்சம் பெறுவதோடு நில்லாமல் யு.எஸ்.பி. கேபிள் மூலம் கைபேசிகளுக்கு சார்ஜும் ஏற்றலாமாம்.

### பீரங்கிகள் மேல் நோக்கி இருப்பதேன்




போர்களில் துப்பாக்கியால் சுடும்போது இலக்குக்கு நேரே நின்று சுடுவதைப் பார்த்திருப்போம். ஆனால் பீரங்கிகளால் சுடும்போது அவைத வானத்தை நோக்கி இருப்பதை பார்த்திருப்பீர்கள்.

அவை ஏன் அப்படி உயர்ந்திருக்கின்றன என்று யோசித்திருக்கிறீர்களா? அப்படி யோசிக்கும்போது நீண்ட தூரத்துக்கு குண்டுகள் சென்று விழ வேண்டும் என்பதற்காக அவ்வாறு உயர்ந்து இருக்கலாம் என்றும் எண்ணியிருப்பீர்கள். ஆனால் அது தவறு.


பீரங்கிகள் உயர்ந்திருப்பதற்கு காரணம் ஏவப்பட்ட பீரங்கிக் குண்டு காற்றின் விசையில் இருந்து தப்பவே பீரங்கிகள் மேல்நோக்கிய வண்ணம் இருக்கின்றன. ஏனெனில் ஏவப்பட்ட பீரங்கிக் குண்டு காற்றின் உராய்வுக்கு உட்பட்டு வேகம் குறைந்துவிடும். இதனால் குறித்த இலக்கை தவறாது சென்று தாக்கும்.

### 6 வித்தியாசங்களைக் கண்டறியுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜதந்திரத்தால் குமாரை மிரட்டிய சீலன்



● தயாளன்

கூட்டமைப்பும் புலிகளும் 7

2004 இல் ரூபன் வன்னிக்கு மீண்டும் வந்துவிட்டார். இவரது மனைவி வசந்தா ஓர் அரச வைத்தியர். அதனால் புதுக்குடியிருப்பு வைத்தியசாலை விடுதியிலேயே வசித்து வந்தனர். அங்கு தேடிச் சென்ற சம்பந்தன் ஐயா ரூபனைக் கட்டித்தழுவி தனது மகிழ்ச்சியையும் , அன்பையும் வெளிப்படுத்தினார். 2001 இல் இருவரும் இணைந்து திருமலையில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை மீட்க ஆற்றிய பணிகளை நினைவில் கொண்டே தம்மைச் சந்திக்க வந்ததாக ரூபன் தம்பதியினர் இதுவரை நினைத்துக்கொண்டு இருக்கின்றனர். அந்த நினைப்பைக் குழிதோண்டிப் புதைத்து விடுங்கள். உறவினர் என்ற ரீதியிலேயே உங்களைச் சந்திக்க வந்ததாக அவர் விளக்கமளிக்கக் கூடும் என்றே அவர்களுக்கு சொல்ல வேண்டி இருக்கிறது .

● ● ●

**அரசியல் கைதிகள் விடுதலையில் அக்கறை செலுத்திய குமார்!**

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை புலிகள் தொடர்பாக குமார் பொன்னம்பலம் கொண்டிருந்த மனப்பதிவால் ஏற்பட்ட நிலைப்பாடு தொடர்ந்து எதிரொலித்துக் கொண்டிருந்தது. இவரது தந்தையார் ஜீ. ஜீ. பொன்னம்பலம் தொடர்பாகவும் தந்தை செல்வா பற்றியும் வெவ்வேறான மதிப்புகள் - மனப் பதிவுகள் தமிழ் பேசும் மக்களிடையே உள்ளன. அதைப்பற்றி விவரிக்கத் தேவையில்லை 1999 - 2000 காலத்தில் குமார் பொன்னம்பலத்தின் நடவடிக்கைகளை அவதானித்த முன்னாள் அச்சகப் பணியாளர் ஒருவர் அரசியல் ரீதியாகக் கூறிய கூற்று கவனிக்கத்தக்கது. "பொன்னம்பலத்துக்கு ஒரு பிள்ளை செல்வநாயகமாகப் பிறந்திருக்கிறது. செல்வநாயகத்துக்கு ஒரு பிள்ளை பொன்னம்பலமாய்ப் பிறந்திருக்கிறது"

சட்டவல்லுநரான குமார் தமிழ் அரசியல் கைதிகளை அரசின் பிடியிலிருந்து மீட்கும் முயற்சியில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டார். இவரோடு அப்பாத்துரை விநாயக மூர்த்தி, திருமதி ஜோய் மகிழ் மகாதேவன் போன்றோரும் இந்த விடயத்தில் கூடிய அக்கறை காட்டினர். விடுதலைப் புலிகள் பத்திரிகையின் ஆசிரியராக 1990இலிருந்து இறுதி வரை பணியாற்றிய ரவியும் குமாரின் முயற்சியினால் விடுதலையான முன்னாள் அரசியல் கைதியே. இதில் முக்கிய விடயம் இந்த வழக்குகளுக்காகப் பணம் ஏதும் அறவிடப்படுவதில்லை என்பதே. காகிதாதிகள், நிழற் பிரதி முதலான சகல செலவுகளையும் குமாரின் அணியினரே பொறுப்பேற்றனர்.

**புலிகளிடம் மட்டும் சொல்லுங்கள் - குமார்**

1984 - 1985 காலகட்டங்களில் ஆரையம்பதி மற்றும் மகிழடித்தீவுப் பகுதிகளுக்கு அப்போதைய புலிகளின் மட்டக்களப்புத் தலைமையைத் தேடி தனித்தனியாகப் பல இளைஞர்கள் வந்தனர். எல்லோரும் ஒரே விடயத்தையே குறிப்பிட்டார்கள். தாங்கள் எங்கு கைது செய்யப்பட்டு எங்கெங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என கூறுவார்கள். அடுத்து தமக்காகக் குமார் வாதிட்டதாகவும், இதற்காகத் தம்மிடம் பணம் ஏதும் அறவிடவில்லை. எனவும் சொல்வார்கள். தாங்கள் விடுதலையாகும் போது தமக்குப் பயணச் செலவையையும் தந்து "புலிகளிடம் போய்ச் சொல்லுங்கள், நான் உங்களது வழக்குக்காக ஒரு சதமேனும் வாங்கவில்லை" என்று கூறி அனுப்பி விட்டார் எனத் தெரிவிப்பார்கள். அவர்களிடம் குமார் எதிர்பார்க்கும் ஒரே விடயம் தான் வழக்குகளுக்காகப் பணம் வாங்கவில்லை என்பது புலிகளுக்குத் தெரியவேண்டும் என்பதே "வேறு எந்த இயக்கத்திடம் சொல்லச் சொன்னார்?" என்று கேட்டதற்கு அவர்கள் சொன்ன பதில் "புலிகளிடம் மட்டும் சொன்னால் போதும் - என்றார்".

இவர்கள் கைதானதும் தெரியாது. விடுதலையானது பற்றியும் புலிகள் அறிந்திருக்க மாட்டார்கள். ஏனெனில் அந்தக் காலத்தில் பரவலாகக் கைதுகள் நடந்தன. அது பற்றிய செய்திகளும் பெருமளவில் வெளிவராது.

**பெண் கடற்புலிகளைப் பொறுப்பெடுத்த சட்டத்தரணி!**

குமாரின் ஜூனியர்களில் ஒருவரான திருமதி ஜோய் மகிழ் மகாதேவன் கொழும்பில் தமிழ்க் காங்கிரஸின் கட்சி சார்பாக குமாரின் தலைமையின் கீழ் போட்டியிட்டவர். காங்கேசன்துறையில் கப்பல் மீதான கரும்புலித் தாக்குதலைத் தொடர்ந்து நிகழ்ந்த சமரின் பின் இரு பெண் கடற்புலிகள் பாதை தெரியாது தடுமாறிய வேளை படையிரால் கைதாகினர். இவர்கள் இருவரையும் வாதாடி மீட்டார் திருமதி ஜோய் மகிழ் மகாதேவன். ஆயினும் அன்றிருந்த சூழலில் இவர்களைப் பொறுப்பெடுக்கப் பெற்றோரால் இயலவில்லை. அவ்விருவரையும் தனது வீட்டில் வைத்து நீண்டகாலம் பாதுகாத்தார். சமாதான காலம் வந்ததும் அவர்களைப் பெற்றோரிடம் ஒப்படைத்தார் இவர். இவர்கள் ஆயிரம் முட்டை போட்ட ஆமைகள். ஆனால் ஒரே ஒரு முட்டையிட்டு விட்டுக் கொக்கரிக்கும் கோழி போன்றோர்தான் எல்லாவற்றையும் தாம் தான் செய்ததாகக் காட்டிவிட்டுச் சாதனை புரிந்து விட்டதாகத் தம்பட்டம் அடிக்கின்றனர். இவ்வாறானவர்களில் ஒருவர் மட்டக்களப்புக்கு வந்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் பிரமுகர் ஒருவரிடம் "நீங்கள் எல்லாம் பணத்துக்காகத்தானே வாதாடுகிறீர்கள்?" எனக் கேட்டார். உடனே கூட்டமைப்பின் தலைமை வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம் அவரைக் கண்டித்தார். "இவரை நாம் அழைத்து விட்டு இப்படி கேட்பது தவறு" எனச் சுட்டிக் காட்டினார். தமிழ் காங்கிரஸ் கட்சியினர் தமிழ் அரசியல் கைதிகளுக்காக இலவசமாக வாதிட்டனர். அதேவேளை, வசதி படைத்தோரின் விடயங்களிலும், வேறு வழக்குகளிலும் அதனை எதிர்பார்க்க முடியாது என்பதுதானே யதார்த்தம்.

**துணிச்சலுடன் மகிழ்ச்சியை வெளிப்படுத்திய குமார்**

2000 ஆம் ஆண்டு ஆனையிறவு முகாமில் புலிகளின் கொடியை ஒருங்கிணைப்புத் தளபதி பானு ஏற்றினார். இதனைத் தொடர்ந்து "இதுபற்றிக் கருத்துக் கேட்கப் பொருத்தமான ஆள் இவர்தான்" என்று குறிப்பிட்டு விட்டு குமாரின் கருத்தை ஒலிபரப்பியது ஐ.பி.சி. வானொலி. "எனக்குச் சரியான சந்தோசம்" - இதுதான் அவர் கூறிய முதல் வாக்கியம் கொழும்பு நகரில் இருந்து கொண்டு எந்த விளைவுகளையும் பொருட்படுத்தாமல் தனது மனதில் பொங்கிய மகிழ்ச்சியை வார்த்தைகளில் வெளிப்படுத்துவது சாதாரண விடயமல்ல. அடுத்து சிவராமிடம் கேட்ட போது அவர் இராணுவ ரீதியாக விளக்கமளித்தார்.

இன்று கொடியேற்றியவரும் இல்லை - சந்தோசப்பட்டவருமில்லை - இராணுவ ரீதியில் விளக்கமளித்தவருமில்லை. வன்னியிலிருந்து இந்த வரலாற்று நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியவரும் இல்லை. இல்லை, இல்லை என்ற நீண்டபட்டியலுக்குப் பின் யுத்த களத்தின் செய்திகளை நேரில் கண்டு எழுதிய பத்திரிகைச் செய்தியாளர் மட்டும் ஏதோ ஒரு மூலையில் நினைவுகளை அசைபோட்டுக்கொண்டிருக்கிறார் .

எம்.ஜி.ஆருக்குப் பிரபாகரன் மேல் எவ்வாறான மதிப்பு ஏற்பட்டதோ அதுவே, குமாருக்குச் சீலன் மீதும் அவர் சார்ந்த புலிகள் இயக்கம் தொடர்பாகவும் ஏற்பட்டது. முதல் சந்திப்பில் ஒருவர் மீது மற்றவருக்கு ஏற்படும் தாக்கம் பெரும்பாலும் அவரது வாழ் நாள் முழுவதும் நீடிக்கும். 1983 உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் இலங்கை அரசு நிர்வாகத்துக்கான சகல தேர்தல்களையும் நிராகரிக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டைப் புலிகள் எடுத்திருந்தனர். இதனால் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும் புலிகளுக்கும் இடையில் மிகுந்த கருத்து வேறுபாடு ஏற்பட்டது. தமது நிலைப்பாடு தொடர்பாகக் காங்கிரஸ் செயலர் குமாரைச் சந்திக்கத் தமது தரப்பிலிருந்து சிலரை அனுப்பியிருந்தார் பிரபாகரன்.

சீலன் (லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி - திருமலை ) தலைமையிலான இக்குழுவில் பண்டிதர் ( சின்னத்துரை ரவீந்திரன் ) ரகு, பசீர் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். தமது நிலைப்பாட்டைச் சீலன் தெளிவு படுத்தினார். அதற்குக் குமார் "கூட்டணி இந்தத் தேர்தலில் இருந்து ஒரு போதும் விலகாது. ஆகையால் நாங்கள் கட்டாயம் இந்தத் தேர்தலில் போட்டியிடவேண்டிய தேவையுள்ளது. நாங்கள் விலகினால் அது கூட்டணிக்குச் சாதகமாக மாறிவிடும். அந்த நிலையை நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் விலகா விட்டால் உங்கள் நிலைப்பாடு என்ன?" என வினவினார். அதற்குச் சீலன் "நாங்கள் இதனை ஒரு கோரிக்கையாகத்தான் முன் வைத்திருக்கிறோம். இதற்கு மதிப்பளிப்பதும் அளிக்காதிருப்பதும் உங்களது முடிவு. மதிப்பளிப்பீர்கள் என எங்கள் தலைவர் பிரபாகரன் நம்புகிறார்." எனப் பதிலளித்தார்.

ஒரு கட்டத்தில் "இந்தத் தேர்தலை உங்களால் நிறுத்த முடியுமா? முடியுமானால் கை போடுங்கள்" எனக் கேட்டுக் கையை நீட்டினார் குமார். முந்திரிக் கொட்டை போல நீட்டிய தமது சகா ஒருவரின் கையைத் தட்டிவிட்டுச் சொன்னார் சீலன். "இந்தத் தேர்தலை நிறுத்த எம்மாலான அதி கூடிய முயற்சிகளைச் செய்வோம்"

சீலன் தமது சகாவின் கையைத் தட்டிவிட்ட விதமும், நறுக்குத் தெறித்தாற்போலச் சொன்ன பாணியும் குமாரின் மனதில் ஏதோ தைத்திருக்கிறது என்பதை அவர் புருவத்தை உயர்த்திய விதத்தில் இருந்து ஏனைய உறுப்பினர்களால் புரிய முடிந்தது. இறுதியில் புலிகளின் கோரிக்கையை ஏற்றார் குமார். தொடர்ந்து "தேர்தல் முடிந்ததும் எமது கோரிக்கையை ஏற்று இந்தத் தேர்தலில் இருந்து விலகிக் கொண்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு எமது நன்றிகள் என உங்களது புலி இலச்சினை பொறித்த அறிக்கையைத் துண்டுப் பிரசுரமாக வெளியிட வேண்டும். அவ்வாறு செய்வீர்களா?" எனக் கேட்டார் குமார். அதற்குப் பதிலளித்த சீலன் "நாங்கள் இந்த விடயத்தைக் கோரிக்கையாகத்தான் உங்களிடம் முன் வைக்கிறோம். இதனைக் கௌரவிப்பதும் நிராகரிப்பதும் உங்கள் முடிவு. இந்தத் தேர்தலிலிருந்து விலகும் முடிவை நீங்கள் எடுத்தாலும் ஒரு போதும் அவ்வாறான அறிக்கையை எமது இலச்சினையுடன் வெளியிட மாட்டோம்" என ஆணித்தரமாகத் தமது நிலைப்பாட்டை விளக்கினார்.

பேச்சு நிறைவடைந்ததும் சீலனின் கையைப் பிடித்த குமார் " நீர் ஒரு இரும்பு மனிதன்" என்று பாராட்டினார். தங்களது தேவை நிறைவேறவேண்டும் என்பதற்காகப் பொய்யான வாக்குறுதிகளை வழங்கும் அரசியல்வாதிகளைத்தான் அதுவரை குமார் கண்டிருக்கிறார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெண்களை மையமாக வைத்து உருவாகும் கதையில் சாய் பல்லவி நடிக்கவுள்ளார்.

இயக்குநர் விஜய் இயக்கவுள்ள இந்தப் படத்தை லைகா நிறுவனம் தயாரிக்க வுள்ளது. 'கரு' எனப் பெயரிடப் பட்டுள்ள இந்தப் படத்தின் உத்தியோகபூர்வ அறிவிப்பு 'வனமகன்' படம் வெளியானதும் அறிவிக்கப்படும்.



ப.பாண்டி படம் மூலம் நடிகர் தனுஷ் இயக்குநராக அவதாரம் எடுத்தார். இந்தப் படத்துக்கு கிடைத்த வரவேற்பை அடுத்து ப.பாண்டி படத்தின் அடுத்த பாகத்தை எடுக்கவுள்ளாராம்.

எனினும் இந்தப் படத்தை இயக்குவதற்கு அவசரப்படப்போவதில்லை என்று தனுஷ் கூறியுள்ளாராம்.



திரையுலகப் பிரபலங்களின்
படங்களை தனது ருவிட்டர் ப
வெளியிட்டு கலங்கடித்தவர் பி
சுசித்ரா.

கணவர் கார்த்திக்குடன் தற்
அமெரிக்காவில் வசிக்கும் அவ
மனஅழுத்தத்துக்கு சிகிச்சை பெ
வருகிறாராம். இந்நிலையில் தல
கணக்கால் யாருக்கும் எந்தப் பா
ஏற்படுத்த விரும்பவில்லை என்
செய்யப்பட்டதாகவும் சுசித்ரா

தனது ருவிற்றர் பக்கத்தால்
அனைவரிடமும் மன்னிப்புக் கே
தனது நண்பர்கள் தன்னை விட்
மாட்டார்கள் எனக் கருதுவதா
தெரிவித்துள்ளார்.

தமிழ்த் திரையுலகில் கொமடிக்கெனத் தனி இடத்தைப் பிடித்தவர் 'வைகைப்புயல்' வடிவேலு. அரசியல் சர்ச்சைகளால் பட வாய்ப்புகளை இழந்திருந்த அவர், நீண்டநாள் இடைவெளியின் பின்னர் 'கத்திச் சண்டை' படத்தில் நடித்தார்.

விஜயின் 61 ஆவது படத்தில் தற்போது நடித்து வருகிறார். இந்நிலையில் "நீயும் நானும் நடுவில பேயும்" படத்தில் கொமடி கலந்த வில்லனாக வடிவேலு நடிக்கவுள்ளாராம்.





பல படங்களில் நடித்துவந்த ஹன்சிகாவுக்கு தற்போது தமிழில் புதிய படங்கள் எதுவும் இல்லை. இந்நிலையில் பிரபுதேவா நாயகனாக நடிக்கவுள்ள ஒரு படத்தில் ஹன்சிகாவை ஒப்பந்தம் செய்ய பேச்சு நடக்கிறதாம்.

பிரபுதேவா தற்போது 'யங் மங் சங்' படத்தில் நடிக்கிறார். இதையடுத்து 'கொலையுதிர்காலம்' படத்தில் வில்லனாக நடிக்கவுள்ளார். இதைத் தொடர்ந்து விஷால், கார்த்தி நடிக்கும் 'வெள்ளை ராஜா கறுப்பு ராஜா' படத்தை இயக்கவுள்ளார்.



இயேசு நாதரின் 12 சீடர்களில் ஒருவரான புனிதர் தோமஸின் கதை திரைப்படமாகிறது. இந்தப் படத்தை சிவாஜி புரொடக்சன் அமெரிக்காவின் டார்வின் என்ரரைமண்ட் நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கவுள்ளது.

புனித தோமஸ் கி.பி. 52 ஆம் ஆண்டளவில் இந்தியா சென்று தமிழ்நாடு, கேரளாவில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பினார். கி.பி. 72 ஆம் ஆண்டு மயிலாப்பூரில் அம்புகளால் குத்தப்பட்டு உயிரிழந்தார்.

புனிதரின் கதை தமிழ், ஹிந்தி, தெலுங்கு, மலையாளம், ஆங்கிலத்தில் தயாராகவுள்ளது. நடிகர், நடிகையருக்கான தேர்வு இப்போது இடம்பெற்று வருகின்றது.



விஷால் மூன்று வேடங்களில் நடிக்கும் படத்துக்கு "நாளை நமதே" எனப் பெயரிட்டுள்ளனர். 1975 இல் எம்.ஜி.ஆர். நடித்து வெளியான படத்தின் தலைப்பையே இதற்கும் வைத்துள்ளனர்.

இதில் விஷாலுக்கு ஜோடியாக இரண்டு நாயகிகள் நடிக்கவுள்ளனர். இப்படத்தை புதுமுக இயக்குநர் வெங்கடேசன் இயக்கவுள்ளார். விஷால் தற்போது "துப்பறிவாளன்", "இரும்புத்திரை" படங்களில் நடித்து வருகிறார்.



எதி
வசூலை
படம்.
110 கே
அதிகம

பாகு
சாதனை
இந்திய
இதுவ

தமி
தெலுங்
மட்டும
ஜப்பா
மொழி
வெளிய
மழை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அந்தரங்கப்
கத்தில்
ன்னணிப் பாடகி

போது

ற்று
து ருவிட்டர்
திப்பை
வும் அது ஹேக்
கூறியுள்ளார்.

ாதிக்கப்பட்ட
ாருவதாகவும்
ு விலகிச் செல்ல
வும் அவர்





விளையாட்டு வீரர்களின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாகி வருகிறது. டோனி, சச்சின் படங்களைத் தொடர்ந்து இந்தியாவின் பட்மின்ரன் வீராங்கனை சாய்னா நேஹ்வாலின் வாழ்வும் படமாகவுள்ளது.

ஹிந்தியில் தயாராகும் இந்தப் படத்தில் ஷரத்தா கபூர் நடிக்கவுள்ளார். அமோல் குப்தா இயக்கவுள்ளார்.

விஜயின் படத்தில் நடிக்க மறுத்து விட்டாரம் ஸ்ரீதிவ்யா. அட்லீயின் இயக்கத்தில் மூன்று வேடங்களில் விஜய் நடித்து வருகிறார்.

இப்படத்தில் ஜோதிகா நடிக்கவிருந்த நிலையில் திடீரென விலகிவிட்டார். அவருக்குப் பதிலாக ஸ்ரீதிவ்யாவிடம் நடிக்க அணுகப்பட்டது. ஆனால் அவர் நேரமின்மை காரணமாக மறுத்து விட்டாராம்.

அவர் நடிக்கவிருந்த வேடத்திலேயே தற்போது நித்யா மேனன் நடித்து வருகிறாராம்.





"ரசிகர்களை கவர்வதற்காக நீச்சல் உடையில் நடிக்கிறேன் என சொல்கிறார்கள். உடம்பைக் காட்டினால்தான் ரசிகர்களுக்குப் பிடிக்கும் என்கின்றனர். ஆனால் நான் அதை நம்பமாட்டேன்" என்று கூறியிருக்கிறார் தமன்னா.

"உடைகள் ஒருபோதும் நடிகைகளை பிரபலமாக்காது. நான் எந்தச் சூழ்நிலையிலும் நீச்சல் உடையில் நடிக்க மாட்டேன்" எனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.



பார்த்தது போலவே பெரும்
க் குவித்துள்ளது பாகுபலி -2
வெளியான முதல் நாளிலேயே
டி இந்திய ரூபாவுக்கும்
ாக வசூலித்துள்ளது.

பலியின் வசூல்
போல் வேறு எந்த
த திரைப்படமும்
ர செய்ததில்லை.

, ஹிந்தி, மலையாளம்,
த மொழிகளில்
ல்லாமல் ஆங்கிலம்,
லிஸ், ஜேர்மன், பிரெஞ்சு
ளிலும் பாகுபலி - 2
ாகி அந்நாடுகளிலும் வசூல்
பாழிந்து வருகிறது.

மோகினி, சதுரங்க வேட்டை 2, கர்ஜனை படங்களில் நடித்து முடித்த த்ரிஷா நியூயோர்க் பறந்துள்ளார். வழக்கமாக தனது தோழிகளுடன் சுற்றுலா செல்லும் த்ரிஷா இம்முறை அவர்களை கழற்றி விட்டு தாய் உமாவுடன் சென்றுள்ளாராம்.

நியூயோர்க் சென்றுள்ள அவர் மியாமி, புளோரிடா பகுதிகளில் இரண்டு வாரங்கள் சுற்றித் திரியவுள்ளாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயக்கங்களை ஓரணியில் இணைக்க முயன்ற குமார்

**கூட்டமைப்பும் புலிகளும்**

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிலிருந்து மாறுபட்டு நன்றி தெரிவித்துப் புலிகளின் இலச்சினையுடன் துண்டுப் பிரசுரம் வெளியிடமாட்டோம் என முகத்துக்கு எதிரே சொன்னதும் அவருக்குப் பிடித்திருந்தது. பின்னாளில் திட்டமிட்ட படி எம்.ஜி.ஆர் உடனான சந்திப்புக்குப் பின்னரே கருணாநிதியுடனான சந்திப்பு என அறிவித்த பிரபாகரனின் வழி காட்டலில் வளர்ந்தவரல்லவா சீலன்.

இந்தப் பேச்சு நடந்து கொண்டிருந்த போது பால் தேநீர் வந்தது. அதனைப் பருகுமாறு வேண்டினார் குமார். அந்தக் காலத்தில் பெரும்பாலான புலி உறுப்பினர்கள் தேநீர் பருகுவதில்லை. பருகக் கூடாதென்று எந்தக் கட்டுப்பாடுமில்லை. கடவுள் நம்பிக்கையும், தேநீர் பருகுவதும் ஒவ்வொருவரது சொந்த நிலைப்பாடு. இதில் ஒருவரது நிலைப்பாட்டை மற்றவர்கள் மாற்ற முயற்சிக்கக் கூடாது என்பது பிரபாகரனது கருத்து. தேநீர் எடுக்கப் புலிகள் தயங்குவதைக் கண்ட குமார் "என்னிடம் தேநீர் குடிக்கப் பயப்பிடுகிறீர்களா? வேண்டுமானால் நான் ஒரு தேநீரை உங்கள் முன் குடித்துக் காட்டுகிறேன்" என்று சொல்லித் தட்டிலிருந்த ஒரு குவளையை எடுத்துப் பருகினார். புலிகள் தன்னைச் சந்தேகிக்கிறார்களோ? இதற்குள் மயக்க மருந்தோ அல்லது வேறு ஏதோ போட்டிருக்கிறார்களோ என எண்ணுகிறார்களோ என்பது அவரது சந்தேகம். இந்தச் சங்கடத்தைத் தவிர்க்கத் தேநீரை எடுத்துப் பருகுமாறு ஏனையோருக்குப் பண்டிதர் கண் ஜாடை காட்டினார். பண்டிதரைத் தொடர்ந்து ஏனைய மூவரும் தேநீர் அருந்தினர். சில நாள்களின் பின்னரே குமாருக்குத் தெரிந்தது பெரும்பாலான புலிகள் உறுப்பினர்கள் தேநீர் அருந்துவதில்லை என்று இயக்கம் தொடர்பான விடயங்களில் இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்கும் புலிகள் தமது சொந்தப் பழக்க வழக்கங்களை மற்றவர்களுக்கு ஏற்றவாறு மாற்றத் தயாராக உள்ளனர் என்பதை அறிந்து வியந்து போனார். இத்தகவலை அந்நாளில் அவருக்கு நெருக்கமானவராக இருந்த ஒருவரே குறிப்பிட்டார்

இப்பேச்சு நடந்ததற்கு அடுத்த நாள் குமாரின் அறிக்கை வெளியானது "காட்டிலும் மேட்டிலும், கல்லிலும் முள்ளிலும் துன்பப்பட்டுப் போராடிவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து இந்த உள்ளூராட்சி தேர்தலில் இருந்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி விலகிக் கொள்கிறது" என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

யாழ்.பிரதான வீதியில் அமைந்திருந்த காங்கிரஸ் பணிமனையில் தேநீர் குடித்ததும் ஒரு வகையில் நல்லதாகப் போயிற்று. தொடர்ந்து கூட்டணி வேட்பாளர்களைத் தனித்தோ அல்லது இருவராகச் சென்றோ அவர்களது வீட்டில் சந்தித்துப் போட்டியிலிருந்து விலகுமாறு வேண்டிக்கொண்டனர். புலிகள் போன எல்லா வீடுகளிலும் தேநீர் கிடைத்தது. நாங்கள் தேநீர் குடிப்பதில்லை என்றால் அவர்கள் அதற்கு வேறு மாதிரி அர்த்தம் கற்பித்திருக்கக் கூடும். சுமார் அரை மணி நேரத்துக்குக் குறையாமல் ஒவ்வொரு வேட்பாளர் வீட்டிலும் உரையாட வேண்டி இருந்தது.



இதனை விட போகும் போது வேட்பாளர்களின் மனைவியரிடம் "அக்கா ஒருக்கா உங்கட அவரிட்டைச் சொல்லுங்கோ- எலெக்சனில இருந்து விலகச்சொல்லி" என்று விடுத்த வேண்டுகோள் பெரும்பாலும் உடனடிப்பயனை அளித்தது.

**இயக்கங்களின் இணைப்புக்கு முதல் முயன்றவர் குமார் !**

இரண்டாவது சந்திப்பு தமிழகத்தில் நிகழ்ந்தது. 1984 ஆம் ஆண்டு முற்பகுதியில் தமிழ்க்குழுக்களை ஓரணியில் கொண்டுவர வேண்டுமெனக் குமார் நினைத்தார். இதற்கெனப் புலிகளோடு தொடர்புகொண்டார். அவரோடு பேச்சு நடத்த ரகு, கடவுள் ஆகியோர் சென்றனர். தனது நோக்கத்தைக் குமார் வெளியிட்டார். " உங்களது நோக்கம் உயர்வானது. எங்களின் வேண்டுகோளை ஏற்று நீங்கள் உள்ளூராட்சித் தேர்தலில் இருந்து விலகியமை தொடர்பாக எங்களின் தலைவர் தங்களை மதிக்கிறார். எனினும் யதார்த்தம் வேறு மாதிரி உள்ளது. களத்தில் நாங்கள் மட்டுமே நிற்கிறோம். கட்டளையிடுவது எப்போதும் ஒருவராகத்தான் இருக்கவேண்டும். அந்த வகையில் கட்டளையிடும் தரப்பின் தலைமையை மற்றவர்கள் எல்லோரும் ஏற்கத்தானே வேண்டும். களத்தில் நிற்பவர்கள் என்ற வகையில் இவ்வாறு கோர எமக்கு உரிமையுண்டு" எனக் கடவுளும் ரகுவும் தெரிவித்தனர் " இதை எப்படி மற்றவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் ?" எனக் கேட்டார் குமார். பேச்சு அடுத்த கட்டத்துக்குச் செல்லவில்லை. புலிகளின் நிலைப்பாடு இப்படி இருந்ததால் குமார் வேறு இயக்கங்களைச் சந்தித்தாரா எனத் தெரியவில்லை. பெரும்பாலும் அவ்வாறான சந்திப்பு நிகழவில்லை என்றே கருதலாம். எனினும் 1985 இல் ENLF என்ற பெயரில் புலிகள், ரெலோ, ஈ.பி. ஆர்.எல்.எவ், ஈரோஸ் இயக்கங்கள் சிறிது காலம் இணைந்து செயற்பட்டன. ரெலோவுடனான மோதலைத் தொடர்ந்து ENLF இயங்க முடியாமற் போயிற்று.

1990 காலப் பகுதிகளில் புலிகளின் எதிர்பார்ப்புகள், தேவைகளுக்கு ஏற்றபடி கொழும்பில் சில பங்களிப்புகளை செய்திருந்தார் குமார் பொன்னம்பலம்.

**மனித உரிமை அமைப்புக்களுடன் சந்திப்பு!**

மூன்றாவது சந்திப்பு புலம்பெயர் நாடுகளில் நடைபெற்றது. அனைத்துலகப் பிரதிநிதிகள் மனோ, ரொமேஷ் ஆகியோருடன் நடந்த இச்சந்திப்புக்களில் கூட்டமைப்பின் உருவாக்கம் பற்றி அலசப்பட்டது. புலிகளின் எதிர் பார்ப்பு எதுவோ அதையே தானும் பிரதிபலிக்கப்போவதாக அவர் தெரிவித்தார் .

தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்த பல அறிக்கைகளை ஆதாரபூர்வமாக இவர் தயாரித்தார். ஐ.நா. மனித உரிமை சபையின் முன் நேரடியாகச் சமர்ப்பித்தார். பெல்ஜியம் தலைநகர் பிரசெல்ஸில் இயங்கும் ஐரோப்பிய நாடாளுமன்றம், லண்டனில் உள்ள றோயல் நிறுவனம் மற்றும் உலகளாவிய மனித உரிமை அமைப்புக்களுக்கு நேரடியாகச் சென்று முறைப்பாடு தெரிவித்தார். தமிழ் மக்களுக்காகவும் தமிழ் தேசியத்துக்காகவும் இவர் ஆற்றிய பணிகள் போற்றத்தக்கவை.

இவரது படுகொலையை அமெரிக்க காங்கிரஸின் உறுப்பினர்கள் நால்வர் மற்றும், பிரிட்டிஷ் றோயல் நிறுவனத்தினர் ஐரோப்பிய நாடாளுமன்றத்தினர் கண்டித்திருந்தனர்.

**கொள்ளையடிக்கையில் பிடிபட்ட டக்ளஸ் !**

ஈரோஸ் இயக்கம் மாணவர் அமைப்பொன்றை உருவாக்கி இருந்தது. அதன் பெயர் ஈழ மாணவர் பொதுமன்றம் (Guess) அதுவே பின்னர் தனித்து இயங்கி ஈ.பி.ஆர். எல்.எவ். ஆக மாற்றமடைந்தது. பத்மநாபா , டக்ளஸ் தேவானந்தா முதலானோர் இதில் அங்கம் வகித்தனர். திருக்கோவில் மக்கள் வங்கியைக் கொள்ளையடிக்க முயன்ற டக்ளசை அப்பகுதி மக்கள் பிடித்து அடித்து உதைத்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். 1983 வெலிக்கடைப் படுகொலைகளில் தப்பிய டக்ளஸ் ஏனைய அரசியல் கைதிகளுடன் மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.

பரந்தனில் பெரிய சண்டியர் ராஜன். அந்த நினைப்பில் அவர் அங்குள்ள ஏனைய கைதிகள் முன்னிலையில் தான் ஒரு பெரிய ஆள் எனக் காட்ட முயற்சிப்பார். அவ்வேளை டக்ளஸ் "நீயும் பாங்க் அடிச்சனி: நானும் பாங்க் அடிச்சனான், நீயும் பிடிபட்டனி, நானும் பிடிபட்டனான். ஆனபடியால் இங்கே யாரும் பெரிசில்ல கொஞ்சம் அடங்கியிரு" என்று எச்சரிப்பார். கிளிநொச்சி மக்கள் வங்கியைக் கொள்ளையடித்த பின் கைதானவர் பரந்தன் ராஜன்.

**கொமாண்டர் குன்சி**

டக்ளஸ் சிறையிலிருந்த போது குன்சி என்பவரே ஈ.பி.ஆர். எல்.எவ்வின் கொமாண்டராக இருந்தவர். இவரது தலைமையில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத் தாக்குதலுக்குத் திட்டமிடப்பட்டது. பொலிஸ் நிலையத்துக்கு வெளியில் நிலையெடுத்திருந்தனர் ஈ.பி.ஆர்.எல்.எவ் வினர். " நீபோ நீபோ" என ஒருவர் மாறி ஒருவர் சொல்லிக் கொண்டிருந்தனரே தவிர எவரும் முதல் அடியை எடுத்து வைக்கவில்லை. விடிய விடியப் படுத்திருந்தும் எதுவும் நடக்கவில்லை.

அந்த நேரம் ஒரு நாய் குரைத்தது "நாய் குலைச்சிட்டுது. அவங்கள் அலேட்டாகி விடுவாங்கள்" என்று கூறி தமது 'படை அணியைத்' திரும்ப அழைத்துக்கொண்டு வந்துவிட்டார் குன்சி .

**முதல் அடியை எடுத்துவைத்த பனாகொடை!**

மட்டு. சிறையிலிருந்து தமிழ் அரசியல் கைதிகளை காப்பாற்றி அழைத்துச் செல்லப் பட்டமை முக்கியத்துவம் வாய்ந்தது. இவர்களைத் திரும்பவும் தென்னிலங்கைச் சிறைச்சாலைக்கு மாற்றப்போவதாகச் சில கதைகள் நிலவின. சிலவேளை இது வதந்தியாகவும் இருந்திருக்கலாம். இதை அடுத்து பனாகொடை மகேஸ்வரன் தான் சிறையிலிருந்து தப்பப்போவதாகவும் தனக்கு இதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் பரமதேவாவிடம் வேண்டினார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த தீவிரவாத இளைஞர்களில் பரமதேவாவின் பெயரே முதலில் இருந்தது. அந்த வகையில் தமிழ் மக்களின் விடுதலையை நேசிக்கும் சக்திகளின் தொடர்புகள் அவருக்கு நிறைய இருக்கும் என்பது இவரது கணிப்பு. அது சரியானதுதான்.

இவர் பனாகொடை முகாமிலிருந்து தப்பிச் சென்றவர் என்ற வகையில் இவரது தந்தையான தம்பாப்பிள்ளை என்பதற்குப் பதிலாகத் தப்பிய முகாமின் பெயரே இவருக்கு அடைமொழியாயிற்று. பிரபலமான ஒரு விடயத்தைச் செய்தால் அது அவர்களது பெயருக்கு முன்னால் ஒட்டிக்கொள்வது வழக்கம்தானே.

**சித்தாவின் பங்களிப்பு !**

பார்வையாளர் நேரத்தில் தன்னைச் சந்திக்க வந்த சித்தாவிடம் இந்த விடயத்தைச் சொன்னார் பரமதேவா. இது தொடர்பாக வரதன் என்பவர் சித்தாவை வந்து சந்திப்பார் என்றும் கூறியிருந்தார். இம் முயற்சி வெற்றிபெற்றால் நிச்சயம் ஏனைய அரசியல் கைதிகளை தென்னிலங்கையில் உள்ள சிறைக்கு மாற்றப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இதில் பரமதேவாவுக்குப் பிரச்சினை இல்லை. ஏனெனில் அவரது தண்டனைக்காலம் இன்னமும் சில நாள்களில் முடிவடைய இருந்தது. ஆனால் ஏனையவர்களின் நிலைதான் அவருக்குக் கவலையாக இருந்தது.

சித்தா ஈழ மாணவர் பொதுமன்றத்துடன் (Guss) தொடர்புபட்டிருந்தார். தொடர்ந்து அவர்களின் சித்தாந்தங்களால் கடுப்பேறி ஒதுங்கியிருந்தார். இவரைப்போலவே வந்தாறுமூலையைச் சேர்ந்த பாலா என்றழைக்கப்படும் பாலசச்சந்திரனும் "கோஷழத்தனங்களைச் சித்தாந்தப் போர்வை கொண்டு மறைக்கின்றனர்" என்று கூறிச் சில காலம் ஈ.பி. ஆர்.எல்.எவ் விலிருந்து விலகியிருந்தார்.

பரமதேவாவின் வேண்டுகோளை ஏற்றுச் சித்தாந்தங்களைத் தூக்கியெறிந்து விட்டு செயலில் இறங்குவது சித்தாவுக்குப் பிடித்திருந்தது. சித்தாவை அவரது வீட்டில் வந்து சந்தித்தார் வரதன்.

பனாகொடையைச் சிறையிலிருந்து விடுவிப்பது எப்படிச் சாத்தியமாகலாம் என இருவரும் கலந்தாலோசித்தனர். அடுத்த சந்திப்பு இன்னொரு வீட்டில் இடம்பெற்றது. புல்மோட்டையில் பனாகொடை கைதாகும் போது தப்பிச் சென்ற பருத்தித்துறையைச் சேர்ந்த ஜெயா மற்றும் மனோ, சிங்கன் , வரதன் ஆகியோருடன் இச்சந்திப்பு நடந்தது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறைகளின் அரசியல்

● வி.மணிகண்டன்

தினகரனை வளைத்துவிட்டார்கள். சசிகலாவுக்கு பெங்களூர், தினகரனுக்கு டெல்லி திகார் என்று அ.தி.மு.கவை கைப்பற்ற நினைத்தவர்களையெல்லாம் ஒரு வழியாக்கிக் கொண்டிருக்கிறார்கள். பணமும் கட்சிப் பதவியும் மட்டுமே அதிகாரத்தை எதிர்த்து அரசியல் செய்வதற்கு போதுமானதாக இருக்காது என்பதை தினகரனும் சசிகலாவும் உணர்த்தியிருக்கிறார்கள். ஒருவேளை இவர்கள் இருவரும் மக்கள் செல்வாக்கு மிக்கவர்களாக இருந்தால், நிலைமை வேறு மாதிரியாக இருந்திருக்கக்கூடும். வெறும் பணத்தை வைத்துக் கொண்டு அரசியல் செய்துவிடலாம் என்று நினைக்கிறவர்களுக்கு சசிகலாவும், தினகரனும் உதாரணங்களாக இருப்பார்கள்.

இன்று சசிகலாவின் பதாகைகளையும் அ.தி.மு.கவின் தலைமையகத்திலிருந்து நீக்கியிருக்கிறார்கள். இப்போதைக்கு மன்னார்குடி குடும்பம் தலையெடுக்க வாய்ப்பில்லை. ஓ.பி.எஸ். அணியும் அவர்களை உள்ளே விடக்கூடாது என்பதில் தெளிவாக இருக்கிறார்கள். ஒருவேளை 2019 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் பா.ஜ.க. தன் பிடியை இழக்குமானால் சசிகலாவின் குடும்பம் தலையெடுத்துவிடும் என்று சிலர் கணிக்க வாய்ப்பிருக்கிறது. அதற்கும் கூடத் தேவையே இருக்காது போலத் தோன்றுகிறது. மீதமிருக்கும் இரண்டரை ஆண்டுகளில் நசுக்கித் தள்ளிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள். அதற்கான முஸ்தீபுகள்தான் இவையெல்லாம்.

எப்படியும் இனி அடுத்தடுத்து வரவிருக்கின்ற தேர்தகளில் அ.தி.மு.க. அடி வாங்கும். அப்படியொரு சூழல் வந்து 'அ.தி.மு.கவை காப்பாற்ற வழியில்லை' என்கிற சூழலில் மீண்டும் மன்னார்குடி குடும்பத்தை உள்ளே இழுத்து வர வாய்ப்பிருக்கிறது. ஆனால் அதுவரை அ.தி.மு.க. இதே வலுவோடு இருப்பதற்கான வாய்ப்புகள் குறைவு. அத்திபாரத்தை அசைத்துக் கொண்டிருக்கிறார்கள். அ.தி.மு.கவை வலுவிழக்கச் செய்து உருவாக்கப்படும் இந்த வெற்றிடத்துக்குத்தான் பா.ஜ.க. குறி வைக்கிறது. தமிழக அரசியலின் மிகப்பெரிய வெற்றிடத்தை தமதாக்கிக் கொள்கிற வேறு அரசியல் இயக்கங்களே இங்கு இல்லை என்பது துரதிர்ஷ்டம்தான். கடந்த முப்பதாண்டு காலமாக 'ஒன்று நீ இல்லாவிட்டால் நான்' என்று கலைஞரும் ஜெயாவும் செய்த அரசியலின் விளைவு இது. மூன்றாவது ஓராள் தலையெடுக்கவே விடாமல் செய்துவிட்டார்கள். அந்த இடத்தை பா.ஜ.க. வளைக்க கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது. எதிர்த்து நிற்கும் எவருக்கும் இந்த கதிதான் என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அரசியல் என்பது சாமானியர்கள் வேடிக்கை பார்க்க சுவாரசியமான களம். எது வேண்டுமானாலும் நிகழலாம். வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்போம்.

சசிகலா சிறையில் என்ன செய்து கொண்டிருப்பார்? தினகரன் என்ன செய்வார் என்று நினைப்புகள்தான் ஓடிக் கொண்டிருக்கிறது. ஜெயலலிதாவுடன் ஒட்டிக் கொண்ட முப்பதாண்டு காலத்தை சசிகலா அசை போட்டுக் கொண்டிருக்கக் கூடும். எவ்வளவு பெரிய சாம்ராஜ்ஜியம் அது? எத்தனை பேர்களை வதைத்து இருப்பார்கள்? மிரட்டி உருட்டப்பட்டவர்களின் கணக்கு எவ்வளவு? அசிட் வீச்சு, செருப்படி, அடக்குமுறை, நிலம் பறிப்பு என்று தாம் செய்த ஒவ்வொரு காரியமும் மனக்கண்ணில் வந்து போகாதா? எல்லாவற்றுக்கும் கணக்கு இருக்கிறது.

மனதில் இத்தகைய எண்ணங்கள் ஓடும்போது மனநிலைக்கு ஏற்ப படம் ஒன்றைப் பார்த்துவிட வேண்டும் என்று நினைப்பேன். சிறைச்சாலை சம்பந்தப்பட்ட படங்களை இணையத்தில் தேடியபோது 'A Prophet' சிக்கியது. 2009 ஆம் ஆண்டு வெளியான பிரெஞ் படம்.

தினகரன், சசிகலாவையெல்லாம் மறந்துவிட்டு படத்தைப் பார்க்க வேண்டும். அற்புதமான படம். காவல்துறை அதிகாரிகளைத் தாக்கியதற்காகக் கைது செய்யப்பட்ட அரபு இளைஞனுக்கு ஆறாண்டு காலம் சிறைத்தண்டனை கொடுத்து சிறையில் அடைக்கிறார்கள். அவன் அல்ஜீரியன்- யுவராஜ் சிங் மாதிரி இருக்கும். அந்த நடிகன் யார்? பட்டையைக் கிளப்புகிறார். அந்த சிறைச்சாலையில் இரண்டு குழுக்கள் இருக்கின்றன. இஸ்லாமிய குழு ஒன்று. கர்சியன் குழு ஒன்று. கர்சியன் குழு வலுவானது. அந்தக் குழுத் தலைவன் சக அரேபியனைக் கொல்லச் சொல்லி நாயகனை மிரட்டுகிறது. வேறு வழியில்லாமல் அவனைக் கொல்கிறான்.

இந்தக் கொலை நாயகனை கர்சியன் குழுவில் நெருக்கமாகச் செய்கிறது. கர்சியன் குழுத் தலைவனுக்காக ஒன்றிரண்டு முறை வெளியில் சென்று வருகிறான். அதற்கான அனுமதியையும் குழுத்தலைவனே பெற்றுத் தருகிறான். வெளியே சென்று வருகிறவன் தனக்கான தொழிலை வெளியுலகில் நிர்மாணித்துக் கொள்கிறான். இதற்கு மேல் கதையைச் சொல்ல வேண்டியதில்லை. படம் இணையத்திலேயே கிடைக்கிறது. பார்த்துவிட்டுச் சொல்லுங்கள்.

துருத்தல் இல்லாமல் நகர்கின்ற கதை பார்வையாளனை நகரச் செய்யாமல் பிடித்துக் கொள்கிறது. சிறைக்குள் வருகின்றவனின் மனநிலை, தன்னைக் காத்துக்கொள்ள வேண்டிய அழுத்தம், தன்னை பாலியல் உறவுக்கு அழைத்தவனையே அடுத்தவர்களின் அழுத்தத்துக்காக கொலை செய்த பிறகு அவனது மனநிலை, செத்தவன் எப்பொழுதும் தன்னுடனாக இருக்கும் நினைவுகள், முதன் முறையாக வெளியுலகத்தைப் பார்ப்பது, உருவாகும் நண்பன், அவனது குடும்பம் என நிறைய பாத்திரங்களையும் காட்சிகளையும் அருமையாகப் பின்னியிருக்கிறார்கள்.

ஒவ்வொரு நாட்டுச் சிறைக்கும் ஒவ்வொரு விதி. இந்தியாவில் அவ்வளவு சீக்கிரம் சிறைச்சாலையை விட்டு வெளியேற முடியாது - ஆனால் பரப்பன அக்ரஹாரா மாதிரியான சிறைச்சாலைகளில் பல கைதிகள் சகஜமாக வெளியில் சுற்றிக் கொண்டிருப்பார்கள். நீண்ட காலக் கைதிகள் அவர்கள். சிறை வளாகத்தில் வேலைகளைச் செய்துவிட்டு இரவில் தமது அறைக்குச் சென்று படுத்துக்கொள்வார்கள். தப்பித்துச் செல்லமாட்டார்கள் என்ற நம்பிக்கை வந்த பிறகு இப்படி வெளி வேலைகளுக்கு அனுமதிப்பார்கள். 'தப்பிச்சுடலாம்ன்னு ஆசை இல்லையா?' என்று கேட்டால் தப்பித்துச் சென்று பயந்து பயந்து நடுங்கிப் பதுங்கி, ஒருவேளை சிக்கிக் கொண்டால் எதிர்காலம் முழுவதும் சிறைக்குள்ளேயே கிடக்க வேண்டும். அதற்கு இது எவ்வளவு சுதந்திரம்?

ஏழைகள், வசதி இல்லாதவர்களுக்கு இப்படியான வாய்ப்புகள் எனில் பணக்காரர்களுக்கும் அரசியல் செல்வாக்கு மிக்கவர்களுக்கும் வேறு மாதிரியான விதிவிலக்குகள் உண்டு. பெங்களூர் சிறையில் ரெட்டி இருந்த போது இரவில் ஆம்புலன்ஸில் வெளியேறி தனது வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு அதிகாலையில் ஊர் விழிப்பதற்குள் வேறொரு அம்புலன்ஸில் வந்து படுத்துக் கொள்வார் என்ற வதந்தி இருந்து கொண்டிருந்தது. எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியாது. ஆனால் பணம் இருந்தால் ஓரளவுக்கேனும் வளைத்துவிடலாம்.

சசிகலாவும் தினகரனும் புழலிலும் கோவைச் சிறையிலும் இல்லாமல் பெங்களூரிலும் திகாரிலும் அடைக்கப்படுவதும் கூட அரசியல்தானே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவிதி



தொகுப்பு;
அ.றொக்ஷன்

# தமிழ்ப் பெண்களின் கல்விக்கு வித்திட்ட யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை

## வரலாறு

வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை 1838 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதி நிறுவப்பட்டது. ஆனால் 1834 ஆம் ஆண்டிலேயே பாடசாலை சார்ந்த செயற்பாடுகள் ஆரம்பமாகி விட்டது. இங்கிலாந்துக்கு வெளியே மெதடிஸ்த சபையால் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பெண்கள் பாடசாலை என்ற பெருமை இப்பாடசாலைக்கே உரியது. தமிழ்ப் பெண்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் விதத்தில் மெதடிஸ்த சபை முன்னெடுத்த இந்தப் பணிக்கு பிரித்தானிய அரசும் ஆதரவு வழங்கியது.

யாழ். மத்திய கல்லூரியின் அதிபராக இருந்த வண.பீற்றர் பேர்சிவல் பாதிரியாரே வேம்படி பெண்கள் பாடசாலையின் ஆரம்பத்துக்கு அத்திபாரமிட்டார். எனினும் இந்தப் பாடசாலையின் ஆரம்ப கால வரலாறு தொடர்பான குறிப்புக்கள் மிகக்குறைந்தளவே கிடைத்துள்ளன. அதிபர்களின் கீழே நிர்வகிக்கப்பட்ட இப்பாடசாலை அதிபர்கள் இல்லாத காலங்களில் பாதிரிமார்களால் நிர்வகிக்கப்பட்டது.

இப்பாடசாலை ஆரம்பித்த காலம் தொட்டு 1949 ஆம் ஆண்டு வரை ஆங்கிலேயப் பெண்மணிகளே அதிபர்களாக இருந்துள்ளனர். முதல் அதிபராக பாடசாலை்யை நிறுவிய வண. பீற்றர் பேர்சிவலின் பாரியார் திருமதி பீற்றர் பேர்சிவல் (1835 -1838, 1841-1861) அதிபராகக் கடமையாற்றினார். இவரின் பின்னர், செல்வி ருவிடி (1839 - 1841), செல்வி கில்னர் (1861 - 1862, 1882 - 1887), செல்வி மெரிக்கின் (1887 - 1889), செல்வி எ.பி.ஸ்ரிபன்சன் (1889 - 1897), செல்வி மலிசன் (1902 - 1904), செல்வி ஹோன்பி (1908 - 1913), செல்வி லைத் (1915 - 1920), செல்வி கீறிடி (1920 - 1922), செல்வி.பிக்காட் (1923 - 1927), செல்வி ஸ்கோகொறவ்ற் (1928 - 1946), செல்வி மேரிபாக்கர் (1947 - 1949) ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றினர். சில காலங்கள் அதிபர்கள் இல்லாதும் இப்பாடசாலை இயங்கியது. அக்காலங்களில் திருமதி பீற்றர் பேர்சிவல், திருமதி ரிம்மர் அதிபர் பதவிகளை வகித்தனர். இவர்கள் மாணவர்களுடனே தங்கி வாழ்ந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1949 இற்குப் பின் இப்பாடசாலையின் முதல் சுதேசிய அதிபராக செல்வி மேபிள் தம்பையா (1949 - 1971) பணியாற்றினார். இவரைத் தொடர்ந்து செல்வி பத்மாசினி ஆறுமுகம் (1971 - 1981), திருமதி அரியமலர் இராசரெத்தினம் (1981 -1989), செல்வி இராஜேஸ்வரி இராசரெத்தினம் (1989 - 1994), பிரின்சஸ் திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம் (1996 - 2011) ஆகியோரும் அதிபர்களாக கடமையாற்றினர். திருமதி க.பொன்னம்பலத்திற்குப் பின்னர் பதில் அதிபராக திருமதி இராஜினி முத்துக்குமாரன் (2011 - 2012), கடமையாற்றினார். 2012 ஜூலை தொடக்கம் திருமதி.வேணுகா சண்முகரட்ணம் அதிபராக கடமை புரிந்து வருகின்றார். இவரின் கீழ் 2,473 மாணவிகளுக்கு 112 ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகின்றனர்.



அதிபர் வேணுகா சண்முகரட்ணம்

## சாதனைகள்

2016 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வேம்படி மகளிர் பாடசாலை மாணவி த.கம்சா உயிரியல் பிரிவில் 3ஏ சித்தி பெற்று மாவட்டத்தில் முதல் நிலையைப் பெற்றார்.

2015 ஆம் ஆண்டு நடந்த க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் இப்பாடசாலையைச் சேர்ந்த 28 பேர் தமிழ், ஆங்கில மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றி "9ஏ" பெறுபேறுகளைப் பெற்றனர்.

2016 இல் நடந்த க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் இப்பாடசாலையைச் சேர்ந்த 52 பேர் (தமிழ், ஆங்கிலமொழி மூலம்) "9ஏ" பெறுபேற்றைப் பெற்றனர்.

2016 ஆம் ஆண்டு நடந்த மாகாண மட்ட மேசைப்பந்தாட்டப் போட்டியில் சம்பியன்.

2016ஆம் ஆண்டு தமிழ் மொழித் தின போட்டிகளில் குழு இசைப் பிரிவு II இல் முதலாம் இடம். இலக்கணப் போட்டி பிரிவு IV இல் காருண்யா பார்த்தீபன் 2ஆம் இடம், பேச்சுப் போட்டி பிரிவு II இல் திலக்ஷாயினி சாம்குமார் முதலாம் இடம். 2015 ஆம் ஆண்டு பொலன்னறுவையில் நடந்த இலங்கை பளுதூக்கல் சம்மேளனத்தின் போட்டியில் 17 வயதுப் பெண்களுக்கான போட்டியில் 63 கிலோ எடைப் பிரிவில் ஜெ.ஜெ.ப.டினேஜா 118 கிலோ எடையைத் தூக்கி முதலாம் இடத்தைப் பெற்றார். இவர் 2015 ஆம் ஆண்டு நடந்த பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான பளு தூக்கல் போட்டியல் 65 கிலோ எடைப் பிரிவில் 126 கிலோ எடையைத் தூக்கி மூன்றாம் இடத்தையும், இதே ஆண்டில் வட மாகாணத்தின் விளையாட்டு நட்சத்திரமாகவும் தெரிவானார்.

2016ஆம் ஆண்டு இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற பெண்களுக்கிடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் பி.நிலோஜினி (15 வயதுப் பிரிவு) 58 கிலோ எடைப் பிரிவில் 73 கிலோ நிறையைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும், இ.தக்சாயினி 75 கிலோ எடைப் பிரிவில் 74 கிலோ எடையைத் தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.






வட மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான நூலகமும் கற்றல் வள நிலையம் நடத்திய போட்டிகளில் அனைத்து ஆண்டுகளிலும் முதலாம் இடத்தை இப்பாடசாலையே வென்றுள்ளது. அத்துடன் 2015ஆம் ஆண்டு தேசிய நூலக ஆவணமாக்கல் சபையால் வாசிப்பு மாதததுக்கான விருது கிடைத்தது.

இப்பாடசாலையின் உடற்பயிற்சி, மேசைப்பந்தாட்டம் (15 வயதுப் பிரிவு), சதுரங்கம் (15 வயதுப் பிரிவு) அணிகள் மாகாண மட்டத்தில் 2 ஆம் இடம் பெற்று தேசிய மட்டத்துக்குத் தகுதி பெற்றன.

(18ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வீட்டு வருத்தம்

- துளசி

இரண்டாவது வாரத்தின் இறுதி நாள் வரும்போது வயிறு ஒரு தடவை குளிர்ந்து சிறு குடல் உள்ளுக்குள் முறுகிக் கொள்வது போல இருந்தது.கை கடித்தது. உள்ளங்காலில் சொறிந்தது. அறைக்குள் இருந்த பொருள் எல்லாம் அந்தரத்தில் எழுந்து ஆடுவதாய் ஒரு கருமாந்திர ஹலுசினேசன்.நாளாக ஆக அறைச் சுவர் எல்லாம் உள்ளுக்குள் வருவது போல தோன்றும். சாப்பாடு எதுவும் இறங்காது. வெளியில் போக மனசு வராது. நோய் நிலைமை கூடும்.

அறையை பூட்டி விட்டு அடைக்கோழியாய் நேற்றிலிருந்து உள்ளுக்குள் இருக்க, இன்னும் ஒரு நாள் இப்படியே போனால், பைத்தியம் பஸ் ஸில் பிடிக்க வந்து கொண்டிருப்பதாய் சொல்லியது.

பின்புற கதவை திறந்து கொண்டு எட்டாவது மாடியின் பல்கனிக்கு காலையிலோ, மாலையிலோ வந்தால் தங்கச் சூரியன் தகதகக்கும். அறுநூறு மீற்றர் தூரத்தில் அலையடிக்கும். கடல் காற்று காதோரமாய் போகும்.

கீழே எட்டிப்பார்த்தால் தலை நகரத்தின் அவசரமான வீதி அசையாமல் இருக்க, வலதுபக்கத்து பல்கனியில் காலை வேளைகளில் முழுகிவிட்டு தலை ஈரம் போக துவாயை சுத்திக்கொண்டு மூன்று வயது குழந்தையின் உடைகளையும் முப்பது வயது கணவனின் உடைகளையும் சமாந்தரமாய் காயப்போட்டு தன்னுடையதை போட இடமில்லாம் தவிக்கும் ஒரு குடும்ப பெண். பெயர் - கீதாவாயோ, சீதாவாயோ இருக்கலாம்.

இடது பக்க பல்கனியில் மாலை வேளைகளில் எதிரில் இருக்கும் கடலை பார்த்தபடி அறுபது பாகை சரிவுள்ள ஆர்ம்சேரில் கையில் புத்தகம், மூக்கில் கண்ணாடியோடு -

"முதுமைக்கு நன்றி சொல்வது எப்படி?" என்று எழுதியது தெரிய கூடிய தூரத்தில் பேரனோ,பேர்த்தியோ விளையாடிக்கொண்டிருக்கலாம். பக்கங்கள் தட்டுப்பட்டதாய் தெரியவில்லை, கிருஷ்ணபிள்ளை, தம்பிப்பிள்ளை நேம்,ஏஜ் ஜெனரேசனை சேர்ந்த ஒரு பெயர் தெரியாத முதியவர்.

கடந்த இரண்டு வாரங்களாய் இரண்டு பக்க பல்கனிகளிலும் அவதானித்தது. மாலையானால் கடற்கரைக்கு போய் மேற்கு வெட்கத்தில் சிவந்து, இருட்டி, பார்ப்பது நான்காம் பிறையா இல்லை ஐந்தா என்று சந்தேகம் வரும் வரை வழமையான பாறையில் இருந்து விட்டு அறைக்கு திரும்பி, படுத்து காலையில் அடிக்கும் அலாரத்தை அடித்து விட்டு எழும்பி காலை-வேலை-மாலை திரும்பவும் அதே காட்சிகள் பிழையில்லாமல் ஓட....

அத்தனை காட்சிகளும் வந்ததிலிருந்து இன்றுவரை அலுப்படிக்கவில்லை. ஒவ்வொருநாளும் சின்ன,சின்ன மாற்றங்களோடு ஒரே காட்சிகள் ஓடிக்கொண்டிருந்தது.

அவதானிப்பு. சம்பந்தமே இல்லாத மனித அசைவுகளை பார்த்து கொண்டிருத்தல்.சிவப்புச்சட்டை பத்து ரூபா பிச்சை போடுகிறது. பிச்சைக்காரன் குருடனா,? இல்லை. அவ்வளவுதான். இனி ஒரு சந்தர்ப்பத்தில் அதே சிவப்புசட்டையையும் பிச்சைக்காரனையும் காணலாம், காணாமலும் போகலாம் யார் கண்டது.

நேற்று மூன்று வயது பையன் தோளில் நித்திரையாயிருக்க அதே சீ! கீதா ரீக்கப்போடு நின்று சிரித்ததை பார்த்த போது வயிற்றுக்குள் இருந்த குறு குறுப்பு கொஞ்சம் அடங்கியது. மாலையில் அதே மூன்று வயது பையன் அதே ஆர்ம்சேரில் முதியவரின் மடியில் இருந்து சிரிக்க இன்னும் இரண்டு நாள்களுக்கு இருக்கலாம் என்று தோன்றியது.

பெரும்பாலும் தனிமையையும், நேரத்தையும் ஒன்றாய் போக்கிக்கொள்வதற்கு பயன்படுத்துகின்ற. ஒரே ஆயுதமாய் ஒப்சேர்விங் இருந்தது.

"ஒன்றில் படைப்பவனாக இருக்க வேண்டும்.

அல்லது பார்ப்பவனாக இருக்க வேண்டும்"

இரவாக திரும்பவும் முதலாவது பந்தி பெயர் சொல்லிக் கத்தியது. அத்தனையும் இருந்தும், எங்கேயோ பிசிறடித்தது. வருத்தம் முத்திவிட்டது. நாளை வரை - வந்த வேலை முடியும் வரை தாக்குப்பிடிக்க வேண்டும். அதற்கிடையில்

வீட்டு வருத்தம்

வீட்டுவருத்தத்தை பற்றி சொல்ல முதல் வீட்டை பற்றி சொல்ல வேண்டும்.

மேலே சொன்ன மாடிகள், பல்கனிகள், கடற்கரைகள் எதையும் கண்ணுக்கெட்டின தூரம் வரை பார்க்காத கட்டாந்தரையில் கட்டியெழுப்பிய வீடு. முந்நூற்றி ஐம்பது பாகையிலும் மரம் வளர்த்து போக, வர பத்தடியில் பாதை விட்ட காணி. சீதாக்களும், கீதாக்களும் ஒரு வளவு தாண்டி இருந்தார்கள். பக்கத்தில் இருந்த கிருஷ்ணப்பிள்ளை போன பஞ்சமியில் போய் சேர்ந்து விட அது பேய் வீடாகியிருந்தது.

வாசலுக்கு முன் வந்தவுடன் வாலையாட்ட ஒரு நாய். வீட்டுக்குள் பசித்தால் காலையுரஞ்ச ஒரு பூனை. ஆடு,மாடுகளுக்கு அனுமதி கிடைக்கவில்லை.

கதவு மூலையில் உள்ள ஆணியில் ஜனவரி இரண்டுக்கு பிறகு கிழிக்கப்படாத அஷ்டலஷ்மி. ஒரு சுவாமி அறை, நிறைய சுவாமிகள்.

பின்பக்கம் தேங்காய்கள், பழைய புத்தகங்கள், சகோதரத்துடனான பங்குச் சண்டையில சேதமான பிளாஸ்ரிக் கதிரைகள்,கண்ணாடிகளை போட ஒரு டம்பிங் ரூம். அது தாண்டி ஈரப்பலாவின் நிழலுக்குள் வாளி,கப்பியோடு கிணறு. சரிவரத் தண்ணி விடாமல் படப்போகும் நிலையில் உள்ள தேசிமரம். தண்ணியோடும் வாய்கால் முடிவில் ஒட்டுச்செவ்வரத்தை. சுத்திவர நான்கு செவ்விளநீர் மரம்.

மழை பெய்தால் கூரையின் பீலி நீளத்துக்கு நான்கு இடங்களில் ஒழுகும். அப்போது வெளியில் வந்து நின்று பார்த்தால் குட்டிக்கேரளா கண்ணுக்குத் தெரியும்.

இருக்கும் கொஞ்ச நேரத்துக்குள் எடுத்து வாசிக்க நிறையப்புத்தகங்கள். சின்ன தொ.கா. மற்றும் ஒரு வானொலி.

வெயில் எல்லை மீறும் போது ஒதுங்குவதற்கு ஒரு மாமரம் அதைச்சுற்றி பந்தலில்லாத ஒரு அலரி. அதை தொடர்ந்து, மரம், சுற்றி வர பல மரம், பலாமரம். அதன் கீழ் அடிக்கடி அரட்டை.

[illegible] இருந்தாலும் அழகாய் தெரியும் எக்ஸோரா,குறோட்டன்கள்.

இது எல்லாமாக சேர்ந்து வீட்டுவருத்தத்தை ஏற்படுத்தியிருந்தது. வீட்டை விட்டு எந்த இடத்துக்கு போனாலும் மூன்று, நான்கு நாள்களுக்கு மேல் தாக்குப்பிடிப்பதில்லை. இரண்டு கிழமை - பெரிய ஆச்சரியம். நான்கு வயதுக்கு வந்த போது இந்த வருத்தம் இருப்பது தெரிய வந்தது. கோகிலாதேவி ரீச்சரும்-நேர்சரியும் நோய்க்காரணங்களாகி இருந்தன." அம்மா!... வீட்டை போவம்" என்பது நோயறிகுறி.

வயது ஏற ஏற நோய் தாக்க எடுக்கும் கால அளவு கூடியதே ஒழிய முற்றாய் ஒழிந்ததாய் தெரியவில்லை. நாக்கு புளிப்பது போல் இருக்க மினரல் வோட்டரில் ஒரு மிடறு உள்ளுக்குள் போனது. அம்மன் கோவில் தண்ணீரை அள்ளிக் குடிக்க வேண்டும் போல இருந்தது. இரவு எதுவும் சாப்பிடவில்லை.நித்திரையை தேடிப்பிடிப்பதற்குள் விடிந்து விட்டது. நரகம்.

டிப்பிரசன் தாங்காமல் ஸ்பெசலாய் ஒரு டாக்டருக்கு காசு கொடுத்து ஆலோசனை கேட்டாயிற்று....

"இனி எல்லாம் ஆண்டவன் கையில்தான் இருக்கு" என்று அவரும் முடித்து விட காகம் எங்கிருந்தோ கரைந்தது. நாய் ஊளையிட்டது.

வந்த வேலை முடியவில்லை, முதல் நாளே புறப்பட தயராகி செக்கன் செக்கனாய் குப்பைக்குள் அனுப்பி, இரவு ரயிலேறி ஊருக்கு வந்து ஸ்டேசனில் இறங்கிய பிறகு மூச்சு வந்தது. அதே தங்கச்சூரியன் தகதகத்தது. குறுகுறுப்பு அடங்கிவிட்டது.

பரிச்சயமான ரோட்டின் தலைப்பில் ரமணியின் கடை இன்னும் திறக்கவில்லை.கொப்பியில் இரண்டாயிரம் கடன் நிற்கிறது. ராசன் மாமா முற்றம் கூட்டியவாறே தலையாட்ட, அடையாளம் தெரியாமல் ஜிம்மி குரைத்தது.ரத்தினம் மாமி லட்சுமிக்கு வைக்கோல் போடுவது தெரிந்தது. கையோடு பாலை வாங்கி கொண்டு போகலாமா?.வேண்டாம்.

ஒழுங்கைக்குக்குள் இறங்கும்போது முருகன் கோயில் மணி ஆறடித்தது. வேம்பு இலையுதிர்த்தது.

கேட்டுக்குள் நாய் பாய்ந்து சந்தோச சத்தம் போட்டது

கதவடியில் பூனை. மியாவ்.

வீடு சிரித்தது.

வேலிக்குள்ளால் சீதா அக்கா எட்டிப்பார்த்து,..

"போன காரியம் என்னாச்சுடா? விசா கிடைச்சுதா?!"

"இல்லையக்கா!!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னொருகாலம் - பிறகொரு....

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது கணவரைக் காப்பாற்றுவதற் காக அக்கா தன்னைக் காட்டிக் குடுத்து விடு வாளோ என்று கலங்கியவர்கள் உண்டு.

'யாராவது ஒருத்தர் இயக்கத்துக்குப்போகாமல் இருக்கிறதால்தான் அக்காவின் குடும்பத்துக்குள் பிரச்சினை வந்திருக்கு' என்று சொல்லுகின்ற அம்மா, தன்னைக் காட்டிக் குடுத்து விடுவாவோ என்று சந்தேகப்பட்டான் இன்னொருவன்.

தன்னுடன் படித்தவன் இயக்கத்தில இருக்கிறான். அவனைப் பிடித்துச் சேர்த்து விட்டார்கள். ஆகவே, இப்போது அவன் எங்கேயாவது தன்னைக் கண்டால் காட்டிக்கொடுத்து விடுவானோ! என்ற ஐயம் இன்னொருவனுக்கு வந்தது.

இயக்கம் சனங்களைச் சந்தேகித்தது. சனங்கள் இயக்கத்தைச் சந்தேகித்தார்கள். அச்சமும் ஐயமும் ஒரு பெரும் வியாதியைப் போல எங்கும் பரவியது. எதையும் யாரை யும் சந்தேகிப்பதைத் தவிர வேறொன்றும் அறியேன் பராபரமே என்று சொல்லிக் கொண்டு திரிந்தனர் பலர்.

பாசம், உறவு, நட்பு போன்ற பிணைப்புகளில் எல்லாம் சந்தேகத்தின் வெடிப்புகள் தாராளமாகவே உண்டாகின.

குடும்பத்தில் ஒருவர் இயக்கத்துக்குப் போய்த்தான் ஆகவேனும். இல்லையென் றாலும் ஒருவரைப் பிடித்தே ஆகுவர். இதைத்தவிர வேறு வழியில்லை. ஆனால், போருக்குப் போகமறுக்கும் பிள்ளைகளை யாரால்தான் கட்டாயப்படுத்தி அனுப்ப முடியும்? பெற்றவயிறுகளால் அது முடியுமா? அதையும் கடந்து போர்க் களத்துக்கு அனுப்பி, அங்கே சாவு நடந்து விட்டால்...? அதை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்? பின்னர், அது பெருங்குற்றவுணர்ச்சியை ஏற்படுத்தி, அவர்களுடைய நிம்மதி யைக் கெடுத்துவிடும். இப்படி பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற் றோர் இன்னும் துக்கத்தைக் கடக்க முடியாமல் தங்களுக்குள் உக்கிக் கொண்டேயிருந்தார்கள்.

இதேவேளை - கிடைக்கின்ற வழிகளால் எப்படியோ சிலர் தப்பிச் சென்று கொண்டிருந்தனர். அல்லது அவர்கள் எப்படியோ ஒரு வழியைக் கண்டு பிடித்து அதன்வழியே சென்றனர். சுழியன்கள், விச்சுழியன்கள் எல்லோருக்கும் விதியும் வழியும் வேறுதான் போலும். ஆனால், இதெல்லாம் கரணம் தப்பினால் மரணம் என்ற நிலையில்தான். இந்த நிலையில் தப்பிச் செல்ல முயற்சிப்பவர்கள் யாருக்காவது சொல்லிக்கொண்டு போவார்களா?

ஆகவே, எல்லாமே இரகசியமாகவே நடந்தன. இரகசியங்களைக் காப்பாற்றுவதிலேயே பேர் பெற்ற இயக்கத்துக்குத் தண்ணி காட்டக் கூடியவர்களும் இருந்தார்கள். மட்டுமல்ல, இந்த மாதிரிக் கேஸ்கள் சில இயக்கத்துக்கும் இராணுவத்துக்கும் இடையில் 'டிமிக்கி' விட்டுக் கொண்டுமிருந்தார்கள். புத்திசாலித்தனமாக இரண்டு தரப்பையும் வேவுபார்த்தார்கள் சிலர். ரகசிய வழிகளால் ஆட்களைக் கூட்டிச் சென்று அனுப்பும் தொழிலைக் கூடச் செய்தனர் அவர்கள்.

ஆனால், இதில் யாரையும் நம்பவே முடியாது. சிலர் உண்மையாகவே தப்பிச் செல்ல உதவினார்கள். சிலர் தப்பிச் செல்வதைப் போலத் தோற்றம் காட்டி தப்பிச் செல்வோரை இயக்கத்திடம் மாட்டி வைத்தனர். காட்டு வழிப் பயணத்துக்கு ஒரு தொகை. காட்டுவழியால் தப்பிச் செல்வதற்காகக் கூட்டிச் செல்ல ஒரு தொகை. இதற்கு வழிகாட்டுவதற்கு ஒரு தொகை. வழி காட்டியை ஏற்பாடு செய்ய ஒரு தொகை.

காட்டுவழி அடைபட்ட பின்னர், இரகசியக் கடற் பயணங்களுக்கு என்று ஒரு தொகை. ஓட்டிக்கு ஒரு தொகை. படகுக்கு இன்னொரு தொகை. சிலர் படகை வாங்கியே தங்களின் பிள்ளைகளை அனுப்பியதுமுண்டு.

தலையா தொகையா பெரிது என்ற ஒரு நிலை வந்தது? தலையைப் பாதுகாக்க வேண்டும் என்றால் தொகையைப் பற்றிக் கவலைப்பட முடியுமா என்ன? இதற்காகவே புலம்பெயர் நாடுகளில் இருந்து காசை அனுப்பிக் கொண்டே இருந்தனர் உடன்பிறப்புகளும் உறவினரும். (பிறகு, இவர்களே இயக்கம் தோற்கக்கூடாது என்று போராட்டங்களையும் நடத்தினார்கள் என்பதெல்லாம் வேறு கதைகள்).

ஆகவே இந்த மாதிரி அது அதற்கென்று ஏற்பாட்டார்கள். ஒழுங்குபடுத்துகிறவர்கள். வேவு பார்க்கிறவர்கள். துறைக்குக் கொண்டு சென்று விடுகிறவர்கள்... இப்பிடித் தொடர் வட்டம் ஒன்று இயங்கிக் கொண்டேயிருந்தது. இதில் படையினரிடம் சிக்குகிறவர்கள் பூஸாவுக்கோ, களுத்துறைக்கோ, வெலிக்கடைக்கோ, நாலாம் மாடிக்கோ அனுப்பப்பட்டனர். புலிகளிடம் சிக்குகிறவர்கள் வட்டுவாகல், 'காந்தி'யின் வள்ளிபுனம், விசுவமடுச் சிறைக் கூடங்களுக்கு என அனுப்பப்பட்டனர்.

இதேவேளை - இயக்கமே தன்னை மறைத்துக் கொண்டு, பொதுமக்களைப் போல இரகசிய வழிகளால் ஆள்களைக் கொண்டு போய் விடலாம் என்று சொல்லி ஆள்களையும் பிடித்துக் காசையும் கறந்ததும் உண்டு.

'கடல் வழியாக இந்தியாவுக்குக் கொண்டுபோய் விடலாம்' என்று சொல்வார்கள்.

'கடற்புலிகளுக்குக் காசைக் கட்டித்தான் போகிறது, ஆகவே பயப்பட வேண்டாம்' என்று உறுதியளிப்பார்கள்.

'கடற்புலிகளில் தெரிந்த ஒருபோராளி இருக்கிறான், அவனுடன் கதைச்சிருக்கிறம். அவன் நாங்கள் போகிற நேரத்துக்குத் தங்களுடைய கண்காணிப்பை வேறு பக்கத்துக்குக் கொண்டு போயிடுவான்' என்ற கதையையும் விட்டுக் படகில் ஏற்றிக் கடலில் வைத்துப் பிடிக்கிறமாதிரி ஒரு 'சீனை' விடுகிறதும் உண்டு.

இப்படிச் செய்யும்போது எந்தெந்த 'றூட்'களால் என்னென்ன காரியங்கள் எல்லாம் நடக்கின்றன என்று இயக்கத் துக்குத் தெரிந்து கொள்ளும். அதே வேளை தொகைகளும் கிடைத்து விடும்.

ஆகவே, 'யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சம்' என்ற நிலையிலேயே எல்லோரும் இருந்தனர்.

இப்படித்தான் ஒரு தடவை என்னிடம் வந்த யோ.கர்ணன் கேட்டார், 'வெளியில போறதுக்கு ஒரு வழி சரிவரும்போல இருக்கு. உங்கட மகனைப் பற்றி என்ன முடிவெடுத்திருக்கிறீங்கள்?' என்று.

அது கடல்வழியாகத் தமிழகத்துக்குப் போவதைப் பற்றியது. அந்த வழியாகப் பயணிப்பதற்கு ஒரு ஏற்பாடு சரிவலாம் என அவர் நம்பினார். எனவே, அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று கேட்டு வந்திருந்தார். ஏனென்றால் எங்களின் வீட்டிலிருந்த நிலவரத்தை கர்ணன் நன்றாக அறிந்திருந்தார். அதைப்போல அவரும் அந்தப் பயணத்தில் வெளியேறுவதற்கான வாய்ப்பை எதிர்பார்த்திருந்தார்.

அந்த எங்களின் வீடே போர்க்களமாக இருந்தது. வயதுக்கு வந்த பிள்ளைகளிருந்த எல்லா வீடுகளும் ஒன்றில், போர்க்களமாக இருந்தன. அல்லது கண்ணீர்க்கடலில் மூழ்கின. எங்கள் மகனோ, தான் 'இயக்கத்துக்குப் போவதில்லை - போருக்குப் போவதில்லை' என்ற தீர்மானத்தில் உறுதியாகவே இருந்தான். ஆனால், அவன் 'இயக்கத்தில் சேரத்தான் வேணும்' என்ற அழுத்தம் உச்சமாக இருந்தது. நெருக்குவாரங்கள் அதிகரித்தன. எப்படி அவனை இணைக்கலாம் என்று பலவாறாக இயக்கத்திலிருந்த பலரும் முயற்சித்துக் கொண்டிருந்தனர். அது முடியாத போது 'எப்பிடிப் பிடிக்கலாம்?' என்று யோசித்தார்கள்.

இந்த நிலையில் முன்னர் தமிழகத்துக்குச் செல்வதற்குக் கிடைத்திருந்த ஒரு சந்தர்ப்பத்தை இழந்ததைச் சொல்லி அவன் சண்டையிட்டுக் கொண்டிருந்தான். இப்படியிருக்கும்போதே கர்ணன் வந்திருந்தார். கர்ணனின் யோசனை அந் தச் சூழலில் மிக வாய்ப்பானதே. ஆனால், அதேயளவுக்கு ஆபத்தானதும் கூட. மிகப் பயங்கரமான முதலைகள் நிரம்பிய இரண்டு வாய்களுக்குள்ளால் தப்பிச் செல்லவேண்டிய நிலையிலான பயணம்.

நான் கர்ணனிடம் துருவித்துருவி பயணத்தின் விவரங்களைக் கேட்டேன். அவர் எல்லாவற்றையும் என்னிடம் சொல்ல முடியுமா? ஆனாலும் முடிந்தவரையில் அதைப் பற்றிச் சொன்னார். இவ்வளவுக்கும் நாங்கள் மிக நெருக்கமான நண்பர்கள். இறுதியில் நான் அவருக்கு எந்த முடிவும் சொல்லவில்லை. எந்தத் தெளிவான பதிலும் சொல்லவில்லை. அதை அவரும் புரிந்திருக்கக் கூடும்.

உண்மையைச் சொன்னால் அப் பொழுது என்னால் கர்ணனிலும் முழுதாக நம்பிக்கை கொள்ள முடிய வில்லை. கர்ணனைச்சந்தேகித்தேன். அவ் வளவு நட்பாக இருந்த ஒருவனைச் சந் தேகித்தேன். 'அயலானில் நம்பிக்கை வை. அயலானை நேசி' என்று சொல்லிய கிறிஸ்துவை யாருமே கணக்கிலெடுக்க முடியாத காலம் அது.

பிறகு கர்ணனும் வெளியேறவில்லை. அவரால் அதற்கு முடியாமல் போய் விட்டது. பிறகு அவர், எங்களுடன் சமாந்தரமாக தருமபுரம், விசுவமடு, உடையார்கட்டு, சுதந்திரபுரம், தேவிபுரம், இரணைப்பாலை, மாத்தளன், வலைஞர்மடம் என்று இடம்பெயர்ந்து வந்து கொண்டேயிருந்தார்.

வலைஞர்மடத்திலும் வெளியேறுவதற்கான வழிகள் தேடப்பட்டுக்கொண்டேயிருந்தன.

முன்னர்கூட இப்படியெல்லாம் இருந்த ஒரு சூழலில்தான் த.அகிலன் வன்னியை விட்டு வெளியேறிச் சென்றார். ஒரு மதியம் எங்கள் வீட்டுக்கு வந்த அகிலன் தான் அன்றிரவு 'இந்தியாவுக்குப் போகப் போறன்' என்றார். 'விரும்பினால் உங்கட மகனை அனுப்புங்கோ' என்றார். ஆனால், அவர் போகும் வழியைப் பற்றி நாம் முழுவதுமாகக் கேட்கவில்லை. அப்படிக் கேட்பது பொருத்தமானதும் இல்லை. அப்படிக் கேட்டு விசாரித்த பின்னர், அந்த வழியில் ஏதாவது நடந்தால் அவர்கள் பிறகு நம்மைப்பற்றியும் பலவிதமாகச் சிந்திக்கக் கூடும். என்னதான் நண்பர்களாக இருந்தாலும் எல்லாவற்றையும் சொல்ல முடியாமலும் எதையும் நம்பமுடியாமலம் இருக்கும் சூழல் அல்லவா அது.

ஆனால், பிள்ளையை அனுப்புவதா னால் வழியைக் கேட்காமல், அதனுடைய உத்தரவாதங்களைப் பற்றி யோசிக்காமல் எந்தத் தீர்மானங்களையும் எடுக்க முடியாது. அன்றும் நாங்கள் எந்த முடிவையும் எடுக்கவேயில்லை. அகிலனும் ஓர் எல்லைக்கு மேல் தன்னுடைய பயணத்தைப் பற்றி அதிகம் சொல்லவில்லை.

பிறகறிந்தேன். அந்தப் பயணத்தில் போராளியொருவரும் வேறு சிலரும் கூட வெளியேறியிருந்ததை.

அந்தப் பயணங்கள் எல்லாம் வன்னியின் நிலைமைகளில் நம்பிக்கை யின்மைகளின் அடையாளங்களைக் காட்டிய குறிகள். பிறகு எத்தனையோ போராளிகள் சனங்களோடு இப்படி வெளியேறினார்கள். நாங்கள் தப்பிச் சென்ற பயணத்திலும் அப்படி நிறையப் போராளிகள் இருந்தனர். அவர்கள் எங்களோடும் வந்தனர். கடலில் வைத்தே எங்களை வரவேற்றனர். அதாவது, எங்களுக்கு முன்னரே தங்கள் குடும்பங்களோடு வெளியேறிக் கடலில், கடற்படையினரிடம் சரணடைந்திருந்தனர்.

இதற்கெல்லாம் காரணம் இறுதியில் - இறுதியிலும் இறுதியில். போராட்டத்தைப் பற்றி வந்த சந்தேகமே.

ஒரு காலம் தலைவருக்குத் தங்கள் உடல் பொருள் ஆவியை எல்லாம் கொடுப்பதற்குத் தயாராக இருந்தவர்கள், பிறகு, அவரைப்பற்றிக் கவலைப்படாமல் தங்களைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டு வெளியேறினார்கள். இப்படி வெளியேறியோரே அதிகமாக இருந்தது.

# தமிழ் பெண்களின்....

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

2015 ஆம் ஆண்டு தமிழ் மொழி தினப் போட்டியில் சுதிர்தர்சினி பரமேஸ்வரன், மதுஷா சபாநாயகம், சிவசொரூபி கணபதிப்பிள்ளை, ஆகிய மாணவிகள் விவாதப் போட்டியில் முதலாம் இடத்தையும், பிரிவு 4இல் தனி இசையில் ஆதித்தியா அருணகிரிநாதன் 2 ஆம் இடத்தையும் பெற்றனர்.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற நடனம், சங்கீதம், சித்திரம் நாடக அறைகள் அழகுபடுத்தல் போட்டியில் பாடசாலைக்கு "ஏ" தர சித்தி கிடைத்தது.

2015 ஆம் ஆண்டு தேசிய ரீதியில் நடைபெற்ற ஆங்கில தினப் போட்டியில் தரம் 7 மாணவி தாரணி ராஜேந்திரம் 2 ஆம் இடத்தைப் பெற்றார். இதே ஆண்டு, தேசிய ரீதியில் நடந்த ஆங்கில மொழி மூல உரையாடல் நாடகத்தில் அபிலாஷா அருள்மொழி முதலாம் இடம் பெற்றார்.

2015 ஆம் நடந்த க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய, வட மாகாண ரீதியில் தமிழ் மொழிப் பாடசாலைகளிடையே முதலிடத்தை இப்பாடசாலையே பெற்றது. இதே ஆண்டு க.பொ.த. உயர்தரத்தில் கலை, வர்த்தகப் பிரிவில் முதல் நிலை பெற்றமைக்காக பாராட்டும் கேடயமும் வட மாகாண கல்விப்பணிப்பாளரால் வழங்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டுக்கான குரு பிரதீபா பிரபா விருது இப்பாடசாலையின் ஆசிரியை அன்பரசி கணேசலிங்கத்துக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டு மாகாண மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் சம்பியன்.

அகில இலங்கை ரீதியில் சிறந்த பெண் சாரணி விருதை மாணவி யாழினி இராஜேந்திரம் பெற்றார்.

2016ஆம் ஆண்டு இப்பாடசாலை மாணவி டிலோசா தயாநிதி இலங்கை சாரணியர் சங்கத்தின் அதியுயர் விருதான ஜனாதிபதி விருதைப் பெற்றுக் கொண்டார். அத்துடன் மேலும் 2 பிள்ளைகள் பிரதமர் விருது பெற்றனர்.

**சவால்கள்**

இப்பாடசாலையின் மைதான போதிய விஸ்தீரணம் இல்லாமை.

நிர்வாக காரியாலயம், உள்ளக விளை யாட்டு அரங்கு, திறந்தவெளி அரங்கு என்பன இல்லை.

மாணவிகளுக்கான விடுதி வசதி இன்மை.

அதிபர், ஆசிரியர் விடுதிகள் இல்லாமை.

அழகியல் கூடங்கள், வகுப்பறை கட்ட டத் தொகுதி அற்ற நிலை. வகுப்பறைக் கட்டடம் நவீன மாதிரி வகுப்பறைகள் இல்லாமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பார்வைநயம்-21

■ கணபதி சர்வானந்தா

> சந்தையில் வாங்கும் முளைக் கீரையைவிட பல கீரைகளும் அவனிட மிருக்கும். அந்த ஊரைப்பொறுத்தவரை அவன் ஒரு குட்டி வைத்தியராக வலம் வந்து கொண்டிருந்தான். "எந்த நோய்க்கு என்ன கீரையை சாப்பிட வேண்டும்" என்று விலாவாரியாகத் தெரிந்து கொண்டான் சண்முகம். அவனிடம் அதற்குரிய பட்டியலே இருந்தது. சாதாரணமாகக் கிடைக்காத இலைவகைகள் கூட அவனிடமிருக்கும்.



# வெகுமதி

**கா**ல்களை நிலத்தில் வைத்து நடக்க முடியாதபடி வெயில் உச்சியில் நின்றது. நேரம் பன்னிரண்டை நெருங்கிக் கொண்டிருந்ததையும் பொருட்படுத்தாது சைக்கிளை மிதித்துக் கொண்டிருந்தான் சண்முகம். வழமையாகக் காலை பத்து மணிக்கே விற்றுத் தீர்ந்துவிடும் கீரைக்கட்டுகள், இன்று இன்னமும் விற்றது போக மீதியாய் பத்துக்குமேல் தேறும். யாருக்குக் கொடுப்பது? வீடுகளிலும், சைவக்கடைகளிலும் மதிய உணவு சமைத்திருப்பார்கள். போனாலும் கணக்கெடுக்கமாட்டார்கள். கீரையையும் அடி மாட்டு விலைக்குத்தான் கேட்பார்கள். அதைவிடக் கோயில் மாட்டுக்குப் போட்டுவிட்டுப் போகலாம். புண்ணியமாவது கிடைக்கும் என்றது அவன் மனம்.

கேணியடி அரசமரத்தின் கீழ் ச்சைக்கிளை நிறுத்தினான். முகத்தையும், கை காலையும் லேசாக அலம்பித் தன்னை ஆசுவாசப்படுத்தியபடி, கீரைக் கட்டுகளுக்கு நடுவே புதைத்து வைத்த தண்ணீர்ப்போத்தலை எடுத்துத் தாகத்தைத் தீர்த்துக் கொண்டான். கையிலிருந்த சில்லறைகளைக் கொட்டி ஒரு முறை எண்ணினான். "சின்னவளுக்குப் புத்தகப் பை வாங்க வேணும். பெரியவள் கொம்பாஸ் பெட்டிக்குச் சொல்லிவிட்டவள். மா, சீனி, பருப்பெண்டு மனுசி தந்த துண்டும் கையிலை இருக்கு. சாமியார் கடையிலை இண்டைக்கும் கடன் கேக்கிறது சரியில்லை. ஏனெண்டால் போனமுறை அவரிட்டை வாங்கியதை இன்னும் குடுக்கேல்லை. ஏதோ பாப்பம்" என்ற பெருமூச்சுடன் சைக்கிளை மீண்டும் உழக்கத்தொடங்கினான் சண்முகம்.

சண்முகம் தற்போது நல்லூரில் வசிக்கிறான். கீரை விற்கத்தொடங்கி எட்டு வருடங்களாகின்றது. கடைசிச் சண்டை நேரத்தில் வன்னியில் மாடுகள் வைத்திருந்து பால் வியாபாரம் செய்தவன். இடம்பெயர்வின்போது இடது காலில் ஷெல்பட்டு முழங்காலுக்குக் கீழ் பகுதி எலும்புகள் சிதறிப்போக "றெட் குறஸின்" உதவியுடன் வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்ந்துவிட்டான். இப்போது காலுக்குள் தகடு பொருத்தித் தைத்திருக்கிறார்கள். "காலில் உடல்பாரத்தைப் பொறுக்கவிடக் கூடாது" என வைத்தியர் சொல்லியிருக்கிறார். "அதிக தூரம் நடப்பது கடினம். ஆனாலும், எவ்வளவு தூரமென்றாலும் சைக்கிளை உழக்கலாம்" என்ற போதுதான் கீரை வியாபாரத்துக்கான யோசனை சொல்லப்பட்டது. சண்முகத்தின் மனைவி பூமணியின் அக்காதான் அந்த யோசனையின் சொந்தக்காரி. அவள் சித்த வைத்தியர் சிவா ஐயாவுக்குப் பல காலமாக மருந்தரைத்த மருதுவுக்கு எடுபிடியாக இருந்தவள். அதனால் அவளும் சில மூலிகைகளின் பண்புகளைத் தெரிந்து வைத்திருந்தாள்.

சந்தையில் வாங்கும் முளைக்கீரையைவிட பல கீரைகளும் அவனிடமிருக்கும். அந்த ஊரைப்பொறுத்தவரை அவன் ஒரு குட்டி வைத்தியராக வலம் வந்து கொண்டிருந்தான். "எந்த நோய்க்கு என்ன கீரையை சாப்பிட வேண்டும்" என்று விலாவாரியாகத் தெரிந்து கொண்டான் சண்முகம். அவனிடம் அதற்குரிய பட்டியலே இருந்தது. சாதாரணமாகக் கிடைக்காத இலைவகைகள் கூட அவனிடமிருக்கும்.

" வாதத்திற்கு வாத நிவாரணி இலையை வறுத்துத் தின்னலாம். டயபற்றிஸ்க்குக் குறுஞ்சா இலை. பிள்ளையளுக்கு வயிற்றிலை பூச்சியே? முள்முருக்கைக் குருத்து வறுத்துக் குடுங்கோ. இரத்தைத்தைச் சுத்திகரிக்க முருங்கை இலை. சளி பிடிக்காமல் இருக்க தூதுவளை. தினமும் முளைக் கீரையோடை ஒண்டிரண்டு குப்பை மேனி சேர்த்தால் நல்லது. மணல் தக்காளி இலை வயிற்றுப் புண்ணுக்கு நல்லது. பிலா விலையை அவிச்சுக் குடிச் சால் இரத்தத்திலை சீனி குறையும்." என்று இலைகளைப் பட்டியலிடுவான் சண்முகம்.

இன்று அவனது கைப்பைக்குள் மீதியாயிருப்பவை மருத்துவக் குணம் கொண்டவை. அவற்றை வீணாக்க முடியாது. அவ்வளவுக்குக் கஷ்டப்பட்டுத்தான் ஒவ்வொன்றாய் சேர்த்திருக்கிறான். நேராக வைத்தியர் வீட்டுக்குப் போனான். மதியம் மூன்றைத் தாண்டியிருந்தது. "தாறதைத் தாங்கோ" கீரையை அங்கேயே வைத்துவிட்டு தெருவுக்கு வந்துவிட்டான். மதில் மீது சாத்தியிருந்த ச்சைக்கிளை எடுக்கும்போது தொலைபேசி ஒன்று அலறும் சத்தம் கேட்டது. மதிற்கரைப் புல்லுகளுக்கு நடுவே ஒரு கைத்தொலைபேசி. முகம் பார்க்க உதவும் சின்னக் கண்ணாடியளவு. விலை கூடியதாக இருக்கும். எடுக்கும் போது பாரமாய் கனத்தது. சில கண நேரத்திற்கு முன்பதாகத்தான் யாரிடமிருந் தாவது வீழ்ந்திருக்கக்கூடும். அதை எடுத் துக்கொண்டு வைத்தியரிடம் போனான்.

"இப்ப இஞ்சை சுவிஸ்காரரர் மருந்துக்கு வந்தவை. தங்கடை "போன்" எங்கயோ விழுந்திட்டுதெண்டு எனக்குப் போன் பண்ணி இஞ்சினேக்கை கிடக்கோ எண்டு கேட்டவை. நல்லாதாப் போச்சுது சண்முகம். உன்ரை கையிலை கிடைச்சிட்டுது. வேறையாரேன் எடுத்திருந்தால் கொண்டு போயிருப்பினம்." வைத்தியர் சொல்லிக் கொண்டிருக்கும்போது ஒட்டோ ஒன்று வந்து அவர் படலைக்கு முன்னால் நின்றது. அரைக் காற்சட்டையோடை உடலெல்லாம் பச்சை குத்தியபடி அந்த சுவிஸ் காரன்தான் வந்தான். தனது தொலைபேசியைக் கண்டதும் சந்தோஷப்பட்டான். அவன் அதில் பல முக்கியமான விடயங்களைச் சேகரித்து வைத்திருந்தான். பல லட்சம் பெறுமதியான விடயங்கள் அவை. சண்முகத்தைப் பற்றி வைத்தியர் அவனுக்குப் பல விடயங்களைச் சொன்னார். சுவிஸ்காரர் தனது பேர்ஸைக் கையிலேடுத்தார். அவரை யறியாமலே அவரது கைவிரல்கள் பல நோட்டுக்களை எண்ணிக் கொண்டிருந்தன. சந்தோஷத் தில், கால் நோவும் தெரியாது சைக்கிளை எடுத்து வீட்டை நோக்கி வலு வேகமாகப் பறந்து கொண்டிருந்தான் சண்முகம்.

**எப்போது உனது காரியங்களால் உனது மனது லேசாகப்படுகின்றதோ?**
**அத்தகைய தருணங்களில் நீ இறைவயப்பட்டிருப்பதாக ஆன்மிகம் சொல்லுகிறது.**




(22ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கெல்லாம் உச்சமாக கட்டப்பா கதாபாத்திரம். தான் ஓர் அடிமை என்பதையே மீண்டும் மீண்டும் தனக்கு தானே கூறி புளங்காகிதம் அடையும் ஒரு கதாபாத்திரம். வார்த்தைக்கு வார்த்தை தான் ஓர் அடிமை என்பாராம். தன் சொந்த மூளையை கொஞ்சம் கூட உபயோகிக்க மாட்டாராம், பிஞ்சுக் குழந்தையின் காலைக் கூடத் தலையில் தூக்கி வைத்துக்கொள்வாராம். மா்வீரன் பாகுபலி சத்திரியன் என்றால் அவன் குடும்பத்துக்கு அடிமையாக வேலை செய்யும் கட்டப்பா எந்தத் தருமத்தை கடை பிடிக்க வேண்டியவன் என்று நான் சொல்லி உங்களுக்குத் தெரிய வேண்டியதில்லை. இந்தக் கட்டப்பாவை பல்வாள் தேவன் அவமானப்படுத்துவதை விட பாகுபலியே அதிகமாக அவமான படுத்துகிறான். பாகுபலி தன்னிடம் காட்டும் கரிசனத்தை கண்டு உச்சி குளிர்ந்து போகிறார். ஒருவன் தன்னிடம் கரிசனம் காட்டுவதே பெரும் பேறு என்று ஒரு மனிதன் நினைக்கிறான் என்றால் அவனுக்குள் எவ்வளவு மானங்கெட்ட தன்மை இருக்கும். பாகுபலிக்களே! கட்டப்பாக்களுக்கு தேவை உங்கள் கரிசனமோ அன்போ கிடையாது , அவர்களின் தேவை மரியாதை தான். உன் கரிசனத்தைக் குப்பையில் போடு. ஒருவேளை கட்டப்பா உன் குழந்தையை தூக்க மறுத்திருந்தால்? உன்னுடன் கூட்டு சேர்ந்து போரிட மறுத்திருந்தால்? அப்போதும் உன் எதிர்வினை இப்படி தான் இருக்குமா ?

இரண்டு வருடங்களுக்கு முன் காட்சி பிழை இதழிலோ அந்தி மழை இதழிலோ படித்த ஒரு கட்டுரையில் வாசித்த கருத்துத்தான் நினைவுக்கு வருகிறது. இந்தியாவை, ஹிந்துத்துவத்தை ஏற்றுக் கொள்ளும் ஒரு மக்கள் கூட்டமாக ஒரு குடையின் கீழ் கொண்டு வர வேண்டும் என்பதே பி.ஜே.பி. ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்புக்களின் 60 ஆண்டு கால ஆசை. ஆனால் அது அவர்களுக்கு நிறைவேறாத ஆசையாகவே இருக்கிறது. எனில் மொத்த இந்தியாவும் பாகுபலியைக் கொண்டாடுவதன் மூலம் அவர்களால் சாதிக்க முடியாததை அவர்கள் ஆட்சி காலத்திலேயே சத்தமே இல்லாமல் சாத்தித்துக் காட்டியிருக்கிறது பாகுபலி.

நண்பர்களே, தயவு செய்து ஒரு படத்துக்காக அதிகமாக கூவுகிறேன் என்று நினைக்க வேண்டாம். மேலே கூறியது போன்ற விடயங்களை பாகுபலி போன்ற அனைத்து மக்களுக்கும் சேரும் படத்தில் எந்தவொரு கூசலும் இல்லாமல் காட்டுகிறார்கள். நாமும் அதை பற்றின சுரணையே இல்லாமல் பார்த்து வருகிறோம் என்றால் நமக்குள்ளும் அந்த மனநிலையே இருக்கிறதுஎன்று அர்த்தமல்லவா? அதை சுட்டி காட்டியே ஆகவேண்டும் என்பதாலே குறிப்பிடுகிறேன்.

கடைசியாக, கடந்த ஒரு சில வருடங்களாக சினிமாவைப் பயில முயற்சி செய்யும் ஒரு மாணவனாக சொல்கிறேன். சினிமாக்காரனும் அடிப்படையில் ஒரு கதை சொல்லி மட்டுமே. அந்த கதையின் மூலம் அவன் அரசியல் பேசுகிறானா, பொழுது போக்குகிறானா அல்ல வேறேதும் முயல்கிறானா என்பது இரண்டாம் பட்சமே, ஆனால் கதை சொல்லியே ஆகவேண்டும். அதற்காக அவன் பயன்படுத்தும் கருவிகள் மட்டுமே மற்ற (பணம், தொழில்நுட்ப கலைஞர்கள்) அனைத்தும். பாகுபலியின் தொழில்நுட்பத்தின் மீதான மிரட்சியால் படத்தை கொண்டாடுபவர்கள் சினிமா என்னும் கலையை இன்னும் புரிந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுமலர்ச்சி இயக்கம்: கலந்துரையாடல் வழிமுறைகள் அபிலாஷைகள்

சிங்கள மூலம் :
விக்டர் ஐவன்
தமிழில் :
சபாபதி சிவகுருநாதன்





(சென்றவாரத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற பிரதேசங்களே அநேகமாக தமிழ் மக்கள் மாத்திரம் வாழும் பிரதேசங்களாகும். அடையாளம் என்ற வகையில் இந்த இரு மாவட்டங்களிலும் கிளைகளை அமைக்க முடிந்துள்ளது. பொல்பித்திகம, ஆணமடுவ, பக்கமூன, அநுராதபுர மாவட்டத்தின் 'கல்வடுவாகம' (கற்சிலை சிற்பிகளின் கிராமம்) போன்ற பிரதேசங்கள் மிகக் கஷ்டமான விவசாய பிரதேசங்களாகும். இந்த நான்கு பிரதேசங்களிலும் மறுமலர்ச்சி இயக்கத்தால் கிளைகளை அமைக்க முடிந்தது. சில கிளைகளில் இனத்துவ உள்ளடக்கம் கலப்புத்தன்மை வாய்ந்தது. திருகோணமலை கிளை மூன்று இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய கிளையாகக் கருதமுடியும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரண்டு கிளைகள் தமிழ் மக்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட கிளைகளாகும். சில கிளைகளில் சிங்கள மக்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட கிளைகள் உருவாக்கப்பட்டன. இன்னும் சில பிரதேசங்களில் சிங்களம், முஸ்லிம் ஆகிய இனங்கள் கலந்த கிளைகளாக அமைந்தன. 'கிலி ஓய' கிளையிலும், மார்ச் 26 ஆம் திகதி திகாரையில் அமைக்கப்பட்ட கிளையும், முஸ்லிம்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட கிளைகளாகும்.

இந்தக் கிளைகளை உருவாக்கும்போது அதற்கு முன்னணிப் பாத்திரம் வகிப்பவருக்கு நாம் எதுவித கொடுப்பனவும் வழங்குவது கிடையாது. கிளைக்கூட்டங்கள் அநேகமாக மண்டபங்களில் நடத்தப்படவில்லை. வீட்டு வாசல்களிலேயே அவை இடம்பெற்றன. சில கூட்டங்களின்போது கதிரைகளை வாடகைக்கு எடுக்க நேர்ந்தது. அவற்றுக்கான செலவை ஏற்பாட்டாளர்களே ஏற்றுக்கொண்டனர். கலந்துரையாடல்களின்போது தேநீர் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களில் அதற்கான செலவினத்தை அக்கிளைக் கூட்டங்களை ஏற்பாடு செய்தவர்களே பொறுப்பேற்றனர்.

**அர்ப்பணிப்பு**

மார்ச் 23 ஆம் திகதி 'எப்பாவெல'. 'கல்வடுவாகம' என்ற கிராமத்தில் இடம்பெற்ற கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் நீதித்துறையோடு தொடர்புடைய அட்டவணைப்படுத்தப்பட்ட இரண்டு அரச உத்தியோகத்தர்களாவர். பிரசித்திபெற்ற 'அவுக்கண' புத்தர் சிலையை சிருஷ்டித்த சிற்பிகளின் ஊர் என்ற பொருளிலேயே 'கல்வடுவாகம' என்ற பெயர் அமைந்துள்ளது. இங்கு இடம்பெற்ற கலந்துரையாடல் 'ராவய' பத்திரிகையின் ஒரு வாசகரான அபேவர்த்தனவின் வீட்டில் இடம்பெற்றது. அவருடைய வீடு அரைகுறையாக பூர்த்தியடைந்த நிலையிலேயே இருந்தது. கலந்துரையாடலில் பங்குபற்றிய அனைவருக்கும் அவர் தேநீர் வழங்கி உபசரித்தார். மேலதிகமாக கலந்துரையாடலில் பங்குபற்றிய அனைவருக்கும் இரவு உணவையும் அவர் வழங்கினார். அந்த வீட்டில் இருந்து இரவு உணவை முடித்துக்கொண்டு நாம் புறப்படும் சமயத்தில், அபேவர்த்தன எமக்கு எரிபொருள் செலவாக 5,000 ரூபாய் வழங்க முயற்சித்தார். அது எனக்கு ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்திய ஒரு சம்பவமாகும். அக்கலந்துரையாடலில் அநுராதபுர மாவட்ட மறுமலர்ச்சி இயக்கத்தின் 5 முன்னோடிகளில் மூவர் (பானுக்க, அனுர மற்றும் பிரியந்த ஆகியோர்) பங்குபற்றினர்.



மார்ச் 24 ஆம் திகதி மாலையில் தம்புள்ளையில் இடம்பெற்ற கலந்துரையாடலை பாடசாலை அதிபரும் (திசாநாயக்க), ஒரு சட்டத்தரணியும் (முனசிங்க) ஏற்பாடு செய்திருந்தனர். அது பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்ட கலந்துரையாடலாக அமைந்தது. பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரியைகள் குறிப்பிடத்தக்க அளவு எண்ணிக்கையினர் பங்குபற்றினர். பிரதேசத்தின் பௌத்த குரு ஒருவரும், கிறிஸ்தவ அருட்தந்தை ஒருவரும், முஸ்லிம் மௌலவி ஒருவரும் பங்குபற்றினர். மேற்படி பௌத்த குரு சபையோரை விழித்தபோது, இலங்கையின் அரசும், அரச நிறுவனங்களும் மாத்திரமல்லாமல் மகா சங்கத்தினரின் சாசனமும் இன்று அழுகிய நிலையிலேயே உள்ளதெனக் குறிப்பிட்டார். இளம் பௌத்த குரு ஒருவர் இதற்குச் சமமான ஒரு உரையை மாவனெல்லையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது நிகழ்த்தினார். பௌத்த சங்க சமூகத்தைப்பற்றிய விமர்சனத்தைக் கண்டியில் இடம்பெற்ற ஒரு உரையாடலில் பௌத்த குரு ஒருவரும் இவ்வாறாகவே குறிப்பிட்டார். இதற்குச் சமமான ஒரு விமர்சனத்தை கத்தோலிக்க பிரதேசங்களில் கத்தோலிக்க சாசனம்பற்றியும் குறிப்பிடப்பட்டது.

தம்புள்ளை கலந்துரையாடல் 'சன்னச' ஹோட்டலில் அமைந்துள்ள அழகான முற்றத்தில் இடம்பெற்றது. ஹோட்டல் சொந்தக்காரர் நீண்டகாலமாக ராவய பத்திரிகையின் வாசகராக செயற்படுகிறார். கலந்துரையாடலில் பங்குபற்றியோருக்கு அவர் தேநீரும் வழங்கினார். கலந்துரையாடலின் இறுதியில் அங்கு சமுகமளித்த மறுமலர்ச்சி இயக்கத்தின் பிரதிநிதிகளுக்கு இரவு உணவும் வழங்கினார். இரவு உணவுக்குப் பின்னர் நாம் புறப்பட்டுச் செல்கையில் அந்த ஹோட்டல் சொந்தக்காரரான குறுப்பு தம்புள்ளையை அண்மித்த பிரதேசங்களில் வேலைசெய்யும் போதும், தம்புள்ள ஊடாகப் பயணிக்கும்போதும் தங்குமிட வசதிகளை தான் பெற்றுத்தர தயார் என்றும் குறிப்பிட்டார்.

அநுராதபுரத்தில் 'எப்பாவெல' பிரதேசத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு குருநாகலையில் பணிபுரியும் வைத்தியர் 'சுகத்' தனது வாகனத்திலேயே என்னை அழைத்து வந்தார். நடுநிசியில் அவர் மீண்டும் தனது மோட்டார் வாகனத்திலேயே குருநாகலைக்குச் சென்றதோடு, மறுதினம் தம்புள்ளையில் இடம்பெற்ற கலந்துரையாடல் முடிந்த பின்னர் அன்று இரவு மீண்டும் குருநாகலையில் அமைந்துள்ள சுகத்தின் வீட்டுக்கு என்னை அழைத்துச் செல்லும் பொறுப்பை புகையிரத நிலையப் பொறுப்பாளரான அனுர குமார ஏற்றுக் கொண்டார். அந்தப் பயணத்துக்குத் தேவையான மோட்டார் வாகன வசதியை 'கலாவெவ' மறுமலர்ச்சி இயக்கத்தின் முன்னோடியான பாடசாலை அதிபரான ரத்னாயக்க ஏற்றுக்கொண்டார்.

மார்ச் 25 ஆம் திகதி காலையில் மறுமலர்ச்சி இயக்கத்தின் பிரதிநிதிகளுக்கும் மற்றும் தொழில்சார் நிபுணர்களின் அமைப்பின் பிரதிநிதிகளுக்குமிடையே நீண்டதொரு கலந்துரையாடல் கொழும்பில் இடம் பெற்றது. மறுமலர்ச்சி இயக்கமும், தொழில்சார் நிபுணர்களின் அமைப்பும் ஒத்திசைவாக பணியாற்றுவதே இக்கலந்துரையாடலின் குறிக்கோளாக அமைந்தது.

அன்று மாலை 'லால்ஹேகொட' புகைப்படக் கலைஞர் பம்பலப்பிட்டியில் கலைஞர்களுக்காக ஏற்பாடு செய்திருந்த ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் பிரபல கலைஞர்கள் சுமார் 30 பேர் பங்குபற்றினர். இச்சந்தர்ப்பத்தில் மறுமலர்ச்சி இயக்கத்தின் யாழ். கிளையின் கலந்துரையாடலும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றதோடு, அக்கலந்துரையாடலை வழிநடத்திக் கொண்டிருந்த பேராசிரியர் சந்திரஜீவ மேற்படி கூட்டத்தில் இருந்த வண்ணமே 'ஸ்கைப்' மூலம் கலைஞர்களின் கலந்துரையாடலை விழித்து உரையாற்றினார்.

லாலஹேகொட கடுமையாக சுகவீனமுற்றிருந்த நிலையிலும்கூட மேற்படி கலந்துரையாடலில் பங்குகொண்டார். அவர் கலைஞர்களை விழித்து சிறப்புரையாற்றினார். கலந்துரையாடலின் இடையே வடபுலத்தில் யுத்தம் இடம்பெற்ற காலகட்டத்தில் நிகழ்ந்த பெரிய கலாசார பகல்கொள்ளை பற்றியும் கருத்துத் தெரிவித்தார். யுத்தம் நடைபெற்ற காலகட்டத்தில் தமது சொந்த வீடுகளைக் கைவிட்டு, தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து சென்றனர். இக்காலகட்டத்தில் அவர்களது வீடுகளின் பழைய கதவு - ஜன்னல் நிலைகள் உட்பட தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த மரப்பலகைகள் கொழும்புக்கு எடுத்து வரப்பட்டு விற்பனை செய்த ஒரு கொள்ளை வியாபாரம் இடம்பெற்றதை அவர் ஞாபகமூட்டினார். கொழும்பு நகரில் நிர்மாணிக்கப்பட்ட பிரமுகர்களின் வீடுகளை அலங்கரிப்பதற்கு மேற்படி ஜன்னல், கதவு நிலைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதை அடையாளம் காணமுடியுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேநாளில் இரவு மிக நீண்ட நேரமாகியபோதும் பாகொட தேவாலய வீதியில் அமைந்த சமரசிங்க குணசேகரவின் வீட்டில் வெற்றிகரமான ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது. குணசேகர இக்கலந்துரையாடலில் பங்குபற்றியோருக்கு தேநீர் வழங்கினார். அதுமாத்திரமல்லாமல் இரவு உணவும் அவரால் வழங்கப்பட்டது. அனைத்து விடயங்களுக்கான செலவினங்கள் அரசசார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் கலாசாரத்தை விஞ்சிச் செல்வதில் மறுமலர்ச்சி இயக்கம் வெற்றிகண்டுள்ளது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதிய துணைவேந்தர்: புதிய சகாப்தத்தின் தொடக்கமா?

● நோக்கன்

தமிழ் கல்விச் சமூகம் சர்ச்சையுடன் விவாதித்துக் கொண்டிருந்த விடயம், யாழ். பல்கலைக்கழகத்தின் அடுத்த துணைவேந்தர் யார்? பல ஊகங்கள். பல எதிர்பார்ப்புகள். இதன் நடுவே அப்போதுள்ளவரே சிலகாலம் துணைவேந்தராகத் தொடர்வார் என்ற பத்திரிகைச் செய்தியோடு நாடி ஒடுங்கிப்போனவர்களும் உண்டு. இதன் இடையே “நானே துணைவேந்தர், நானே துணைவேந்தர்” என்று அவரவர்க்குள் சொல்லிக் கொண்டிருக்க, திடீரென ஜனாதிபதி செயலகத்திலிருந்து வெளியாகிய செய்தியோடு விவாதங்களும், ஆராய்வுகளும் முற்றுப் பெற்றன.

ஜனாதிபத்தியின் தெரிவால் கணிதப் பேராசிரியர் கே.விக்கினேஸ்வரன் யாழ். பல்கலைக்கழகத்தில் துணைவேந்தரானார். இதற்கான, 28 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் கிடைக்கப் பெற்று தொழிலாளர் தினமான மே தினத்தில் தனது பதவிப் பிரமாணத்தைச் செய்து அதிகார நாற்காலியில் அவர் அமர்ந்து கொண்டிருக்கிறார். வழமையாக பதவியிலிருந்து விலகிப் போகின்றவர் புதியவரின் பதவியேற்பு வைபவத்தில் கலந்துகொள்வதில்லை. இருந்தும் செல்வி வசந்தி அரசரட்ணம் கலந்துகொண்டார்.

இதற்கு முன்னர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தேர்தலில் தொழில்நுட்ப பீடாதிபதி பேராசிரியர் எஸ். சிறீசற்குணராஜா அதிக வாக்குகளைப் பெற்று முன்னிலை பெற்றிருந்தார். அவர் துணைவேந்தராக நியமனம் பெறவேண்டுமென்று ஆர்வம் காட்டியவர்கள் பலர். அவருக்காக அழுத்தம் கொடுத்தவர்களின் அரசியல் பின்னணி மிகவும் சக்தி வாய்ந்ததென்று ஆய்வாளர்கள் தெரிவித்திருந்தனர். அவர் தெரிவு செய்யப்பட்டு விட்டதாக வதந்திச் செய்திகளை சில பதிப்பு ஊடகங்களும், அவற்றைப் பிரதி பண்ணி இணையத்தளங்களும் செய்தி வெளியிட்டு இருந்தன. அவ்வளவுக்கு “அவர்தான் துணைவேந்தராக வருவார்” என்று பலரும் நம்பியிருந்த வேளை, இப்படி ஒரு முடிவை ஜனாதிபதி எடுத்ததற்கான காரணம் என்ன? நடந்தது என்ன? பலரின் கேள்விகள் ஆச்சரியமாக விரிந்துள்ளது.

இதற்கிடையில் கடந்த ஏப்ரல் 19 ஆம் திகதி கொழும்பு ரெலிகிராப் (Colombo Telegraph) என்ற இணையத்தளம் இது தொடர்பாகக் கட்டுரை ஒன்றை “யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவு : கேலிக்கூத்தாகிய ஜனநாயகம் மற்றும் பல்கலைக்கழகத் தன்னாட்சி உரிமைகள். (VC Election At Jaffna University: Mockery Of Democracy And University Autonomy)” என்ற தலைப்பில் பிரசுரித்திருந்தது. அந்தக் கட்டுரையில் அதனை ஆக்கியவரின் பெயரோ அல்லது மின்னஞ்சல் முகவரியோ இடப்படவில்லை. இருந்தும் நமது தமிழ் சமூகத்திலிருந்தே அக்கட்டுரையின் கருத்துகள் வெளியாகியிருந்ததை ஊகிக்கக்கூடியதாகச் சில தகவல்கள் அதில் இடம்பெற்றிருக்கின்றன.

அதில் யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்காக நடைபெற்ற தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்ற தொழில்நுட்ப பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சிறீசற்குணராஜா எந்த வகையிலும் நியமிக்கப்படக்கூடாது என்ற விதத்தில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. அவரது கடந்தகால நடவடிக்கைகள் பற்றிப் பலகோணத்திலும் விமர்சிக்கப்பட்டிருந்தது. அவரது கிராமமான உடுப்பிட்டியில் நடந்த சம்பவத்தைக் குறிப்பிட்டிருந்தனர். அவரைச் சாதியவெறி கொண்டவரென்றும் இப்படிப்பட்ட குறுகிய சமூகநோக்குடைய ஒருவரைப் பல்கலைக்கழக கவுன்ஸில் எப்படி சிபார்சு பண்ணமுடிந்ததென்றும் கேள்விகள் எழுப்பபபட்டிருந்தன.

அத்துடன் கடந்தகாலத்தில் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தமிழ் - சிங்கள மாணவர் கைகலப்பில் விசாரணை செய்து சரியான நீதியை வழங்க இவர் தவறிவிட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். “ஆட்காட்டி” என்ற சஞ்சிகையில் வெளியாகிய கட்டுரை ஒன்றை மேற்கோள்காட்டி “இவர் ஜனாதிபதியினால் துணைவேந்தராக நியமனம் பெறும் பட்சத்தில் யாழ். பல்கலைக்கழகத்தின் புலமைசார் சுதந்திரம் நசுக்கப்படும்” என்றும் அந்தக் கட்டுரை மேலும் தெரிவித்திருந்தது. மொத்தத்தில் அவருக்கு அதிக வாக்குகள் அளிக்கப்பட்டதற்காகப் பல்கலைக்கழகத்தின் கவுன்சிலில் உள்ளவர்களைச் சாடியிருப்பதோடு அவர்கள் சமூகப்பொறுப்பு பற்றியும் அந்தக் கட்டுரை ஆராய்ந்திருக்கிறது. முடிவாகப் பேராசிரியர் எஸ். சிறீசற்குணராஜாவிற்குச் சேறு பூசுவதாகவே அக்கட்டுரை எழுதப்பட்டிருந்தது.

கட்டுரையில் மேற்சொன்னவற்றில் நாம் உடன்படாது போனாலும் அதில் கடந்தகால யாழ். பல்கலைக்கழக நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிட்டிருப்பதை கவனத்தில் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். பல சமூக நடவடிக்கைகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. பல சமூக முன்னேற்றத்திற்குத் திறவுகோலாக நடைபெறவிருந்த நிகழ்ச்சிகள் சில பேராசிரியர்களினதும், விரிவுரையாளர்களினதும் நலன் சார்ந்து தடை செய்யப்பட்டிருக்கிறது. நடக்கவிருந்த [illegible] நடவடிக்கைகளையும், புலமையாளர்களினது சந்திப்புகளையும் இடைநிறுத்தியிருக்கின்றனர் என்று முன்னாள் துணைவேந்தரின் குறுகியஎண்ணங்களைப் பற்றியும் அக்கட்டுரை விவரித்திருந்தது.

இதுபற்றிப் பல சமூக ஆர்வலர்களும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தனர். அவர்களது குறையும் இதுபோன்றவையே. பல்கலைக்கழக மாணவர்கள், சமூகத்துடனான உறவுகளைப் பேணுவதற்குரிய சமூகவெளியென்பது அடைக்கப்பட்டிருந்ததாக அவர்கள் ஆதங்கம் தெரிவித்தனர். அத்துடன் முன்னாள் துணைவேந்தர் பல்கலைக்கழக கவுன்ஸில் மீதும் செனற்றின் மீதும் எப்பொழுதும் தனது கருத்தைத் திணிப்பவராகவும், அழுத்தத்தைப் பிரயோகிப்பவராகவுமே இருந்திருக்கிறார். நன்றாக இயங்கிய துறைகளுக்குத் தொடர்ந்து வள நிராகரிப்பைச் செய்வதும், அவர்கள் நடவடிக்கைகளுக்கு அனுமதி மறுக்கப்படுவதுமாக அவர் செய்கைகள் அமைந்திருந்தன. பொதுநலம் சார்ந்து சிந்திக்கின்ற எவரையும் தனது நிர்வாக வட்டத்திற்குள் அனுமதித்ததில்லை. தமது ஆளுமைகளில் நம்பிக்கையற்ற புலமையாளர்களையும், கூழைக்கும்பிடு போடுபவர்களையும் தன்னைச்சுற்றி இருக்க ஒரு அரசியல்வாதிபோலச் செயற்பட்டாரென்றே அறியக்கிடக்கிறது.

ஒரு பெரும் சமூக நிறுவனத்தைத் தன்னிச்சையாகச் செயற்படுத்தியதையும், தனது சொந்த அபிலாஷைகளுக்குக் கீழ் கட்டுப்படுத்தி வைத்திருந்ததையும் ஒரு பெரும் குற்றச் செயற்பாடாகவே பார்க்க முனைகிறோம். தனது இயலாமையை நன்கறிந்த அவர் எதையும் துணிந்து செயற்படுத்தக்கூடிய மனோபலமற்றவராகக் காணப்பட்டார். எதிலும் ஒருவித பயவுணர்வு இருந்தது. எனவே இவ்வகையில் தன்து பணிக்காலங்களில் அவர் ஏற்படுத்திய பின்னடைவுகளை ஒரு சமூகத் துரோகமாகப் பார்ப்பதுதானே நியாயமானதொன்று. அவர் பின்னாலிருந்த அரசியல் விமர்சிக்கப்பட வேண்டியது. அத்துடன் கண்டிக்கப்பட வேண்டியது. அவர் பின்னாலிருந்த அரசியல்வாதிகளும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே. “இவை புதியதாகத் தொடரும் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு ஒரு படிப்பினையாக இருப்பதோடு இவ்வாறான தவறுகள் தொடர்ந்தும் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்” என்பதற்காகவே இந்த விவரங்களை இங்கு குறிப்பிட்டிருக்கிறோம்.

தொடர்ந்து ‘தேசம்’ என்ற இணையத்தில் த.ஜெயபாலன் பின்வருமாறு எழுதுகிறார். “பேராசிரியர் [illegible] பேராசிரியராகத் தெரிவு செய்யப்பட்டு இருந்தால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு யாழ். பல்கலைக்கழகச் செயற்பாடுகளில் இருந்து ஓரம்கட்டப்பட்டுத் தமிழ் மக்கள் பேரவையின் கை ஓங்கியிருக்கும். கணிதவியல் துணைப் பேராசிரியர் விக்கினேஸ்வரன் துணைவேந்தராக நியமிக்கப்பட்டதில் இரா.சம்பந்தன், எம்.சுமந்திரனின் அழுத்தங்களுக்கு ஜனாதிபதி விட்டுக்கொடுத்திருப்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. துணைவேந்தர் விக்கினேஸ்வரன் கொள்கைப்படி செயற்படுகின்றவர் அதிகம் பேசாதவர் அமைதியானவர் எனப் பெயரெடுத்தவர். ‘இவர் பல்கலைக்கழகத்தை ஆளுமையுடன் நிர்வகிப்பாரா?’ என்ற கேள்விகள் பல்கலைக்கழக மாணவர் மட்டத்திலும் எழுந்துள்ளது” என்று சுருக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார் அவர்.

துணைவேந்தராகக் கடமையைப் பொறுப்பேற்றிருக்கும் பேராசிரியர் விக்கினேஸ்வரனுக்குப் பல்கலைக்கழகத்தில் பல சவால்கள் காத்திருக்கின்றன. அவரது நிர்வாகத்திறமை தொடர்பாகப் பல்கலைக்கழகச் சமூகத்திற்கு ஏற்பட்டிருக்கும் சந்தேகத்தைத் தீர்க்கவேண்டியது. கீழ்நிலையில் உள்ள யாழ். பல்கலைக்கழகத்தை மீளக்கட்டி எழுப்பி அதன் உச்ச நிலைக்குக் கொண்டு வரவேண்டியது. தரம் குறைந்து காணப்படும் வடமாகாணக் கல்விக்குரிய காரணிகளைக் கண்டறிந்து அதனை மீளுருவாக்க வேண்டிய திட்டங்களை உருவாக்குவது. மக்கள் மயப்படுத்தப்பட்டதொரு நிறுவனமாகப் பல்கலைக்கழகத்தை மாற்றுவது. பல்கலைக்கழகத்திற்கென ஒரு வெளியீட்டு நிறுவனத்தை ஏற்படுத்தி அதன் மூலம் விரிவுரையாளர்களினதும், மாணவர்களதும் ஆராய்வுகளை வெளிக்கொணர்வது. ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு பொதுவெளியை ஏற்படுத்துவது. வெளியிலுள்ள புலமைசார் ஆளுமைகளை விரிவுரைக்குப் பயன்படுத்துவது எனப் பட்டியல் நீளுகின்றது.

அத்துடன் நாம் அறிந்ததையும் தெரிந்ததையும் வைத்து எமது ஆலோசனையாகவும் பின்வருவனவற்றை சமர்ப்பிக்க வேண்டிய கடமையும் எமக்குண்டு. போருக்குப் பின்னலான சமூகத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்குப் புதியதாய் வருகின்ற மாணவர்களின் உளச்சமநிலையைப் பேணுவதற்கான திட்டம் மிகவும் அவசியம். இதில் பல்கலைக்கழகத்தின் நற்பெயரைப் பேணுவதற்கு அவர்கள் ஆற்றவேண்டிய பங்கும் பல்கலைக்கழகம் தொடர்பாக அவர்களது அரசியலையும் முன்னிறுத்தி முதல் ஒரு மாதகாலத்திற்குரிய பாடத்திட்டமாக அதனை நடைமுறைப்படுத்துவது.

மற்றும் பல்கலைகழகத்திலுள்ள சகல மட்டங்களிலுமிருந்து ஆலோசனை பெறுவது. அதாவது விரிவுரை மற்றும் பேராசிரியர்கள், புலமைசார் ஊழியர்கள் மற்றும் புலமைசாரா ஊழியர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக நலன் விரும்பிகள் என்று எல்லோர் சந்திப்புக்களையும் ஏற்படுத்தி அவரவர் துறைசார்ந்து அவர்கள் கருத்துக்களையும் கேட்டறிவது. இது ஓர் ஆரோக்கியமான நிர்வாகத்தை ஏற்படுத்த வழிசமைப்பதோடு பல புதிய வழிகளைத் திறக்க ஏதுவாகவும் இருக்கும்.

புதிய துணைவேந்தரின் புதிய செயற்பாடுகளை கல்விச் சமூகம் மாத்திரமல்ல சகலரும் ஆவலோடு எதிர்பார்க்கின்றனர். அவர் அரசியல் தலையீடுகள் அற்ற முறையில் தனது பணிகளைச் செய்வாரேயானால் பகுதிப் பிரச்சினைகள் குறைந்துவிடும் என்பது எமது நம்பிக்கை. “புதிய மாற்றங்கள் தேவையில்லை” என்று புதிய துணைவேந்தர் கருதுவரேயானால் வாழ்நாள் துணை வேந்தராக முன்புள்ளவரையே இருக்க விட்டிருக்கலாம். அதில் தப்பில்லை. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாகுபலி: வியாபாரப் பூச்சுற்றல்



■ நிஷாந்த்

முதல் விஷயம்.... பாகுபலி போன்றதொரு செலவுமிக்க படத்தை இந்தியாவில் கிடைக்கும் தொழில்நுட்பங்களை வைத்து எடுப்பதே ஒரு பெரும் பணிதான். இது போன்றதொரு செயற்றிட்டத்தை படிப்படியாக நிறைவேற்றிய தயாரிப்பாளர், இயக்குநர் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் நிச்சயம் பாராட்டபட வேண்டியவர்கள். இவர்களிடமிருந்து மேலாண்மை நுட்பங்களை நிச்சயமாகக் கற்றுக் கொள்ளலாம்.

பாகுபலியின் மொத்தக் கதையையும் பார்த்த பின்னர் நமக்கு பிடிபடும் விஷயம் இந்த கதையின் பெரும்பான்மையான பாகம் பாகுபலி 2இன் முதல் பாதியிலேயே அடக்க கூடியதுதான். இதை ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட கதையாக பார்த்தால் சிவகாமிதேவி எனும் அரசி. அவளுடைய இரண்டு புதல்வர்கள், அவர்களில் ஒருவன் அரசனாக தேர்ந்தெடுக்கப்படுகிறான். அவன் திக் விஜயம் செய்ய புறப்பட்டு போன காலத்தில் நடைபெறும் சில சம்பவங்களை வைத்து அவன் அண்ணன் ஆட்சியைக் கைப்பற்றுகிறான். தொடர்ந்து தம்பியையும் அம்மாவையும் கொன்று தம்பி மனைவியை அடிமைப்படுத்துகிறான். 25 ஆண்டுகளுக்குப் பின் பாகுபலியின் மகன் வந்து போர் செய்து தனது பெரியப்பாவுக்கு பெரிய ஆப்பு வைக்கிறான்.

இந்த கதை மொத்தம் 329 நிமிட கதையாக சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு பேட்டியில் ராஜமௌலி சொல்லியிருந்தார்; "இந்தக் கதையை முடித்தவுடனே தனக்குத் தெரிந்து விட்டது." இதை ஒரு பாகமாக எடுக்க முடியாது என்று. படத்தில் அவர் நம் காதில் சுற்றிய பூவை விட பெரிய பூ இந்த பதில்தான். திரைக்கதை பற்றி, கதை சொல்லல் முறைகைளை பற்றி கொஞ்சமேனும் அறிவுள்ள எவருமே சொல்லிவிடுவர், இந்தக் திரைக்கதைக்கு 329 நிமிடங்களுக்கான தேவையில்லையென்பதை. இரண்டு பாகமாக பார்த்தால் படத்தில் மொத்தம் 10 பாடல்கள், அது போக பிரதான கதைச்சரடிற்கு தொடர்பில்லாத எத்தனை உபகதைகள் இதில் உள்ளன . தமன்னா இடம் பெறும் எந்தக் காட்சியுமே கதைக்குத் தேவை இல்லாததல்லவா.. இரண்டு பாகங்களிலும் உள்ள தேவை இல்லாத நகைச்சுவைக் காட்சிகள் எல்லாம் எதற்கு? தேவசேனாவின் மாமா பாத்திரம் எதற்கு? பாகுபலி இரண்டு பாகமாக வந்தது முழுக்க முழுக்க வணிக நோக்கத்துடனே அன்றி வேறில்லை. வணிக நோக்கத்தில் தவறே இல்லைத்தான். இரண்டு படம் எடுத்து பணம் பண்ணுவதில் எந்த ஆட்சேபனையும் இல்லவே இல்லை. ஆனால் இரண்டும் இரு முழுமையான படங்களாக இருக்க வேண்டுமல்லவா? இரண்டு படத்திற்குத் தேவையான கதை வேண்டுமல்லவா. கதாபாத்திரங்களை நிறுவுவதற்கு மட்டும் ஒரு படம், மீதிச் சம்பவங்களைச் சொல்ல இன்னொரு படமா ? இப்படி ஒரு சினிமா வியாபார உத்தியை எங்குமே கேள்விப்பட்டது இல்லையே. இதிலெல்லாம் மிகப்பெரிய காமெடி "கட்டப்பா ஏன் பாகுபலியைக் கொன்றான்?" என்றதொரு மொக்கையான கேள்வியை தேசிய ட்ரெண்ட் ஆக்கியது. மோடியின் scripted ட்ரெண்டிங்கிற்கும் இதற்கும் எந்த வித்தியாசமும் கிடையாது. முழுக்க முழுக்க வியாபார நோக்கத்துடன் இந்தக் கதையை அணுகியதால் மட்டுமே இத்தனை தேவையில்லாத கதை சரடுகளை நுழைக்க வேண்டி வந்துள்ளது என்பது எனது அனுமானம்.

இரண்டாவது படத்தை வெறுக்க செய்த விஷயம் இத்தனை அதிமானுடத் தன்மையான ஹீரோயிசம். ஓர் அளவு வேண்டாமா? இது விஜயகாந்த் படமோ பாலகிருஷ்ணா படமோவாக இருந்தால் பரவாயில்லை . இந்திய அளவில் ஹொலிவூட்டுக்கு நிகரான படமென்று விளம்பரம் செய்யப்படும் படத்தில் இவ்வளவு யதார்த்த விரோத ஹீரோயிசம் வேண்டுமா ? அதில் உச்சம் இந்தப் படத்தின் க்ளைமேக்ஸ். அந்தரத்தில் உருளை அமைத்து பல அடி தூரத்தில் சென்று விழுகிறார்களே, கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். அந்த கேடயத்தை பிடித்திருக்கும் கைகள் என்னவாகுமென்று? அந்த போர் வீரர்கள் அனைவரும் பயிற்சி பெறாதவர்கள் வேறு. கில்லியில் ஹீரோ 300 பேருக்கு தண்ணி காட்டி விட்டு தப்பிப்பது, கத்தியில் 50 பேரை அடிப்பது போன்ற காட்சிகளும் மிகைப்படுத்தபட்டதுதான். ஆனால் அந்த திரைக்கதையில் எவ்வளவு புத்திசாலித்தனம் இருந்தது. பாகுபலியின் பலமே இதில் இடம்பெறும் போர் காட்சிகள்தான். காளகேயர்களுடனான போரில் எரிபொருள் தடவிய துணியை உபயோகித்தது, எருமை மாடுகளை கொண்ட போர்காட்சி, அணையை உடைப்பது போன்றவை எல்லாம் கூட ஏற்றுக்கொள்ள கூடியதாகவே இருந்தது, எனில் இறுதிக்காட்சி,... சத்தியமாக சொல்கிறேன் ஒத்துக்கொள்ள முடியவில்லை. ஏழாம் அறிவுக்கு நடந்த அதே கதிதான் இந்த காட்சிகளுக்கும்.

மூளையை கழற்றி வைத்து விட்டு இது போன்ற படங்களை பார்க்க வேண்டும் என்று யாராவது சொன்னால் அப்படியே ஓடிவிடுங்கள். நான் எதற்காக மூளையை கழற்றி வைக்க வேண்டும். எனது மூளையை திசை திருப்ப வேண்டியது அந்த திரைக்கதை ஆசிரியனுடைய வேலை அல்லவா? படத்திற்கு வரும்போதே மூளையை கழற்றி வைத்து வாருங்கள் என்று ஒரு திரைக்கதை ஆசிரியன் / இயக்குநர் சொல்வாராகில் அதன் பேர் தடித்தனம். நான் மூளையை கழற்றி வைக்க வேண்டுமென்றால் உனக்கெதற்கு இந்த ஆள் அம்பு சேனை 300கோடி பணம் எல்லாம்? "இன்செப்ஷன்" போன்ற படங்கள் எப்போது இந்தியாவில் வரும் என்று அமீர் கானிடம் கேட்ட போது, அவர்கள் மூளையை நன்றாக உபயோகித்து படம் பார் என்கிறார்கள், நாமோ மூளையை கழற்றி வைத்து விட்டு படம் பார்க்க சொல்கிறோம் என்றார்.

பாகுபலியில் கவரக்கூடியது, இதன் கிராபிக்ஸ் காட்சிகள்தான். நிச்சயமாக இதன் பின்னால் நூற்றுக்கணக்கான தொழில்நுட்ப கலைஞர்களின் உழைப்பும் நேரமும் கொட்டிக்கிடக்கிறது. அவர்களுக்கெல்லாம் மனமார்ந்த பாராட்டுக்கள்.

எந்த ஒரு கதைக்கும் ஓர் அரசியல் இருக்கும். பாகுபலிக்கும் அது அருக்கிறது. அதை சாதாரணமாகக் கடந்து சென்று விட முடியாது .

"தலித் மக்கள் மீது பொதுவான ஒரு குற்றச்சாட்டு இருக்கு.. என்னடா இவனுங்க எப்ப பாத்தாலும் ஜாதி ஜாதின்னு பேசினு இருக்காங்க இவங்களுக்கு வேற பிரச்சினையே இல்லையா? நான் சாத்தியமா சொல்றேங்க எனக்கு ஜாதி ஒன்னுதான் பிரச்சினை. நான் எங்க போனாலும் என் ஜாதி என் கூடவே வரும்."

விகடன் மாணவ பத்திரிகையாளர் கேள்வி பதில் நிகழ்வில் இயக்குநர் பா.ரஞ்சித் கூறியது,

கொஞ்சம் கூட மனித தன்மையோ ஈவு இரக்கமோ அற்ற செயல்களை கலாசாரம் என்ற பெயரில் போற்றி பாதுகாக்கும் கயவாளித்தனமான தேசம் இது. இங்கே இந்த மனு அரசியல் எந்த ரூபத்தில் எவ்வளவு நுட்பமாக இருந்தாலும், அதை நொண்டி நொங்கெடுக்க வேண்டியது ஒரு பகுத்தறிவாளனின் கடமை. அதனால் இது போன்ற ஒரு வணிக படத்தை முன்வைத்து இப்படி ஒரு கருத்து தேவையா என யாரும் நினைக்க வேண்டாம்.

தமிழ் நாட்டில் தான் ஜாதிப் பெயரை பேருக்கு பின்னால் வழக்கம் கிடையாதே, அப்புறம் என்ன பல்வாள் "தேவன்" பிக்காளி "தேவன்" ?? காளகேய மொழி ஒன்றை உருவாக்கியவர்களுக்கு வேறு பெயரே கிடைக்கவில்லையா? இது ராஜமௌலிக்கு தெரியவில்லை பாவம் என்றால் மதன் கார்க்கிக்கும் தான் தெரிய வில்லையா ?

மீண்டும் மீண்டும் பாகுபலி சத்திரிய தர்மம் தர்மம் என்று கொக்கரிக்கிறாரே? அந்த தரும கருமத்தை வைத்து தான் இந்த நாட்டில் இவ்வளவு அடிமைப் படுத்துதல். நடந்தது. அதை கூவி கூவி விற்கும் ஒருவனை கதாநாயகனாக காட்டுவதன் மூலம் ராஜமௌலி என்ன சொல்ல வருகிறார். மனு தர்மம் எனும் அயோக் கியத் தனத்துக்கு விளக்கு பிடிக்கும் வேலையில்லாமல் வேறென்ன இது?

(19ஆம் பக்கம் பார்க்க)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# உன்னை நீயே அறிவாய்

எல்லா தொழிலிலும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதில்லை என்றாலும் பெரும்பாலான தொழில்களில் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. முக்கியமாக, பொருள்களை உற்பத்தி செய்யும்போது இயந்திரங்கள் மிகவும் அவசியமாகின்றன. வருடம் முழுவதும் இயந்திரங்களைப் பயன்படுத்தினாலும் வருடத்தில் ஒருநாள் வரும் ஆயுத பூசையின் போதுதான் ஒவ்வொருவருக்கும் இயந்திரங்களின் முக்கியத்துவம் தெரியவரும்.

நம் தொழிலில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. இயந்திரங்களின் தொழில்நுட்பங்கள் தற்போது மிகவும் நவீனமடைந்து விட்டன. இந்த நிலையில், நாம் பயன்படுத்தும் இயந்திரங்களை எப்படி சரியாகப் பராமரித்துப் பேணிக் காப்பது என்பதைத் தெரிந்துகொள்வது அவசியம்.

### இயந்திரங்களின் வகைகள்

இயந்திரங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் என்பவை ஒருவகை. உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் என்பவை மற்றொரு வகை. அலுவலகத்தில் பயன்படுத்தும் இயந்திரங்கள் பெரும்பாலும் இலத்திரனியல் தொழில்நுட்பம் சார்ந்தவை. உற்பத்திக்குப் பயன்படுத்தும் இயந்திரங்கள் பெரும்பாலும் பொறிமுறை தொழில்நுட்பம் சார்ந்தவை.

அலுவலகங்களில் பயன்படுத்துவதில் முக்கியமானவை கணனி, பிறிண்டர், ஸ்கானர் போன்றவை. இவை அனைத்து தொழிலும் தற்போது பயன்படுத்தப்பட்டாலும், பெருமளவில் அவசியமாக இருப்பது தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களுக்குதான். நம்முடைய தேவைக்கு ஏற்றாற்போல் இவற்றை வாங்கிக்கொள்ளலாம்.

சிறு தொழிலுக்கு ஒன்று அல்லது இரண்டு கணனி இருந்தால் போதுமானது. மடிக்கணனியாக இருந்தால் மிகவும் நல்லது. ஏனெனில் நம்மால் எங்கு வேண்டுமானாலும் அதை எடுத்துச் செல்ல முடியும். கணனி வாங்கும்போது நம் தேவைக்கு ஏற்றபடி பார்த்து வாங்கவேண்டும். கணனிக்கு எந்தப் பங்கமும் வராமல் தடுக்க, "ஒரிஜினல் அன்ரி வைரஸ்" பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டும். அன்ரி வைரஸ் ஒரிஜினலுக்குச் செலவு செய்ய யோசித்து, பைரேட்டட் அன்ரி வைரஸினை வாங்கிப்போட்டால், அடிக்கடி பிரச்சினை வந்து, செலவு செய்ய வேண்டியிருக்கும். இதனால் நேரம் விரயமாகி, நம்முடைய தொழிலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

பிறிண்டர் வாங்கும்போது அது லேசர் பிறிண்டராக இருப்பது நல்லது. பிறிண்டரை ரோணரின் விலையை அடிப்படையாக வைத்து வாங்க வேண்டும். பிறிண்டர் 10 ஆயிரம் ரூபா ரோணர் 2,500 ரூபா என்றால் அதைத் தவிர்த்து விட்டு, தரமான பிறிண்டரை 15 ஆயிரம் ரூபாவுக்கும் ரோணர் 1,500 ரூபாவுக்கும் வாங்கலாம். ஏனெனில் அடிக்கடி ரோணரை மாற்ற லாம். ஆனால், பிறிண்டரை மாற்ற முடியாது. அப்படி மாற்றினால் செலவு அதிகமாகும்.

ஆவணங்களை அனுப்பவும், அரசு இணையத்தளங்களில் பதிவு செய்யவும் ஸ்கானர்தான் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. யாரும் இப்போது தொலைநகலை அதிகம் பயன்படுத்துவதில்லை. எனவே, ஸ்கானர் மிகவும் அவசியம். ஸ்கானரை தனியாகவும் வாங்கிக் கொள்ளலாம். பிறிண்டரோடு ஸ்கானரும் சேர்ந்தே இருக்கிற மாதிரியும் வாங்கிக்கொள்ளலாம்.

### உற்பத்தி இயந்திரங்கள்

உற்பத்தி இயந்திரங்களை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று, உணவுப் பொருள்களைத் தயாரிக்கும் இயந்திரங்கள். இரண்டு, உணவு அல்லாத பொருள்களைத் தயாரிக்கும் இயந்திரங்கள். உணவுப் பொருள் தயாரிக்கும் தொழிலில் உணவுப் பொருள்களைத் தயாரிக்கும் இயந்திரங் கள், தயாரித்த பொருள்களை பொதி செய்யும் இயந்திரங்கள் என அடுத்தகட்டங்களில் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. உணவுப் பொருள் உற்பத்திக்குத் தேவைப்படும் இயந்திரங்கள், பொருளுக்கு ஏற்றவாறு மாறுபடும்.

நம்முடைய தொழிலுக்கு ஏற்ப இயந்திரங்களை வாங்க வேண்டும். திரவப் பொருள்களுக்கு தனியான இயந்திரங்களையும், திடப்பொருள்களுக்கு தனியான இயந்திரங்ளையும் வைத்துக் கொள்ள வேண்டும். ஒருபோதும் மாற்றிப் பயன்படுத்தக்கூடாது. சில சமயங்களில் சந்தையில் ஏற்கெனவே உள்ள மெஷின்களுக்குப் பதிலாக நம்முடைய பொருளுக்கு ஏற்ற மாதிரி நமக்கென பிரத்தியேகமாகவும் மெஷின்களைத் தயார் செய்யலாம். இப்போதெல்லாம் தோசை, கூட்டு- பொரியல் செய்வதற்குகூட மெஷின்கள் வந்துவிட்டன.

### உற்பத்திக்குப் பிறகான இயந்திரங்கள்

ஸ்கேலிங் மெஷின்: இது பெரும்பாலான சிறு தொழில்களுக்கு கட்டாயம் தேவைப்படும். ஒரு கிலோ முதல் 100 கிலோ வரையிலான ஸ்கேலிங் மெஷின்கள் உள்ளன. எந்தமாதிரியான ஸ்கேலிங் மெஷின் என்பதை தொழிலுக்குத் தகுந்தவாறு வாங்கிக் கொள்ளலாம். ஆனால், அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்துதான் வாங்கவேண்டும். தனியாரிடம் வாங்கினாலும் அதற்கு அரசுத் தரப்பில் இருந்து சோதனை செய்து சீல் வாங்கவேண்டும்.

ஹேண்ட் சீலிங் மெஷின்: பொதி செய்யும் அளவைப் பொறுத்து அதற்கேற்ப சீலிங் மெஷின் வாங்க வேண்டும். சீலிங் மெஷினை வாங்கும்போது அதோடு சேர்த்து அதில் பயன்படுத்தப்படும் இரும்புக் கம்பி ஒன்றையும், அதன் மேல் ஒட்டும் ரேப் ஒன்றையும், கூடுதலாக வாங்கிக்கொள்ள வேண்டும். ஏனெனில் இந்த இயந்திரம் அடிக்கடி பழுதடைய வாய்ப்புள்ளதால், உடனே மாற்றிக்கொள்ள உதவியாக இருக்கும்.இது ரூ.3,000 இலிருந்து ரூ.10,000 வரையில் கிடைக்கும்.

ஒரு கிலோ வரைக்கும்தான் இந்த ஹேண்ட் சீலிங் மெஷின் உதவியாக இருக்கும். ஒரு கிலோவுக்கு மேல் பொருள்களை பொதி செய்வதாக இருந்தால், அதற்கு நிறைய இயந்திரங்கள் சந்தையில் உள்ளன. அவற்றில் பொருளின் அளவை நிர்ணயம் செய்து, பையில் அடைத்து சீல் செய்யும் வரை அனைத்து வேலையையும் செய்துவிடும் வகையிலான மெஷின்கள் உள்ளன. இதுமாதிரி செயற்படும் இயந்திரங்களை 'ஃபுல்லி ஓட்டோமெற்றிக் மெஷின்' என்று சொல்வார்கள். இந்த மெஷின்களின் அளவும் விலையும் பொதியிடும் அளவைப் பொறுத்து வேறுபடும். எனவே, தேவைக்கு ஏற்ப மெஷின்களைத் தெரிவு செய்யவேண்டும். இதற்கு ரூ.20 முதல் 24 இலட்சம் வரை செலவாகும். மற்றொன்று, 'செமி ஓட்டோமெற்றிக் மெஷின்'. இதற்கு ரூ10 முதல் ரூ.14 லட்சம் வரை செலவாகும். இன்னொன்று, பையில் அடைத்து அனுப்ப, சீல் செய்யும் இயந்திரம். இதன் விலை ரூ.3 இலட்சம் ஆகும்.

### உணவு அல்லாத பொருள்களுக்கான இயந்திரங்கள்

உணவு அல்லாத பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள், பெரும்பாலும் மிகப் பெரிய முதலீட்டுடன் செய்யப்படக் கூடியவை. ஓட்டோ மொபைல், பிளாஸ்ரிக், கெமிக்கல், உலோகங்கள் போன்றவற்றுக்குப் பெரிய அளவில் மெஷின்கள் தேவைப்படும். இதிலும் சிறிய அளவில் செய்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்களிடம் உள்ள ஒன்று, இரண்டு லேத்மெஷின், மோல்டிங் மெஷின், வெல்டிங் மெஷின் போன்றவற்றை வைத்துக் கொண்டு பிசினஸ் செய்கிறார்கள்.

### முதலீடும் பாதுகாப்பும்

தொழில் மதிப்பில் இவ்வளவு சதவிகிதம் இயந்திரங்களுக்கு முதலீடு செய்யலாம் என்று எந்த வரைமுறையும் இல்லை. ஆனால், நம்முடைய உற்பத்தி இலக்கைப் பொறுத்தே இயந்திரங்கள் மீதான முதலீட்டை நிர்ணயிக்கவேண்டும். நம்முடைய தொழிலுக்குத் தேவையான இயந்திரங்களை மட்டுமே வாங்கவேண்டும். தேவையற்ற இயந்திரங்களை வாங்குவதால், முதலீடு வீணாவதுடன், அந்த இயந்திரம் பயன்படுத்தாமலேயே பழுதாகும் நிலை ஏற்படும். அதேபோல், வாங்கும் இயந்திரம் நவீன தொழில்நுட்பம் கொண்டதாகவும், தரமானதாகவும் இருக்க வேண்டும். இல்லை என்றால் விபத்துகளையோ, நஷ்டத்தையோ சந்திக்க நேரிடும்.


இயந்திரங்களை, தொடர்ந்து பராமரிப்பது அவசியம். ஒவ்வொரு இயந்திரத்துக்கும் தரப்பட்டுள்ள செயல்முறையின்படி மட்டுமே கையாளவேண்டும். அந்தந்த இயந்திரங்களைக் கையாளும் நிபுணத்துவம் கொண்டவர்களை வைத்து மட்டுமே இயக்கவேண்டும். மேலும், இயந்திரத்தின் தேய்மானம், விபத்து நடக்காமல் இருப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆகியவற்றை சரியான நேரத்தில் செய்யவேண்டும். இயந்திரங்களின் செயற்பாடுகளைத் தொடர்ந்து கண்காணிக்கவும், சோதனைச் செய்யவும் வேண்டும். மூன்று நாள்களுக்கு மேல் இயந்திரங்களை இயக்காமல் இருக்கக்கூடாது. இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை, இயந்திரங்களைக் கட்டாயமாக சுத்தம் செய்யவேண்டும். இயந்திரங்கள் அதிகம் தேவைப்படவில்லை என்றால், பிறரிடம் உள்ள இயந்திரத்தை வைத்தே நமக்கான தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளலாம். அதேபோல், நம்முடைய இயந்திரத்தையும் நம்முடையத் தேவைபோக, பிற நேரங்களில் பிறருக்காக இயக்கி அதன் மூலம் இலாபம் ஈட்டலாம்.

தடையில்லாமல் தொடர்ந்து தொழில் நடைபெற, இயந்திரங்கள் பேணிக் காக்கப்படுவது அவசியம் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைபெறும் நாயகன்



கடந்த மாதம் 23ஆம் திகதி தனது 40ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய ஜோன் சீனா, அன்றைய தினம் ரசிகர்களுக்காகத் தனது ருவிற்றர் வலைத்தளத்தில் வெளியிட்ட பளு தூக்கும் காணொளிக் காட்சியின் ஒரு பதிவு

செல்சி அணித்தலைவரான ஜோன் ரெரி இந்தப் பிறீமியர் லீக் தொடருடன் செல்சி கழகத்திலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். ஜோன் ரெரி 20 வருடங்களுக்கு மேலாக செல்சி அணியில் விளையாடி வருபவர். இதுவரை 713 போட்டிகளில் செல்சி அணிக்காக விளையாடி அவற்றில் 578 போட்டிகளுக்கு தலைவராகவும் செயற்பட்டவர். 2004ஆம் ஆண்டு செல்சி அணியின் முகாமையாளரான ஜோஸ் மௌறின்கோவின் கீழ் முதல் தடவையாகத் தனது தலைமையில் பிறீமியர் லீக் பட்டத்தை வென்றவர் இதுவரை 4 பிறீமியர் லீக் கிண்ணங்களையும் 5 எவ்ஏ கிண்ணங்களையும் வென்று கொடுத்துள்ளார்.

2008ஆம் ஆண்டு மன்செஸ்ரர் யுனைற்றட் அணிக்கெதிரான சம்பியன்ஸ் லீக் போட்டியில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு இருந்தபோதும் பெனால்ரியின் போது ஜோன் ரெரி அடித்த பந்து கம்பத்தில் பட்டு வெளியே சென்றதால் அந்தப்போட்டியில் செல்சி தோல்வி அடைந்தது. அந்தத் தோல்வியின் போது அவர் கண்ணீர் விட்ட காட்சியை ரசிகர்கள் அவ்வளவு இலகுவில் மறந்து விடமாட்டார்கள். அத்தோடு 2011 ஆம் ஆண்டு ஜோன் ரெரி மீது வீரர் ஒருவரை இனவாத ரீதியில் திட்டியதான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. விசாரணையின் முடிவில் அது நிரூபிக்கப்பட்டு 4 போட்டிகள் தடையும் 220,000 ஸ்ரேலிங்பவுண்டுகள் அபராதமும் விதிக்கப்பட்டமை ஜோன் ரெரியின் உதைபந்தாட்ட வாழ்க்கையில் ஏற்பட்ட கரும்புள்ளியாகவே கருதப்படுகின்றது.



செல்சி அணியில் தற்போது விளையாடி வரும் இளம்வீரர்களின் துடிப்பான ஆட்டத்தோடு ஒப்பிடுகையில் 36 வயதான ஜோன் ரெரியின் செயற்பாடுகள் விமர்சனத்துக்குள்ளான நிலையிலேயே அவர் செல்சியில் இருந்து விலகும் தனது முடிவை அறிவித்துள்ளார். ஆனாலும் செல்சி சார்பில் அதிக போட்டிகளில் கலந்து கொண்ட மூன்றாவது வீரர் என்ற வகையில் ஜோன் ரெரிக்கான பிரியாவிடையை சிறப்பாக நடத்துவதற்கே செல்சி நிர்வாகம் விரும்புகின்றது.


அந்தவகையில் தற்போதைய பிறீமியர் லீக் தொடரில் செல்சியின் சொந்த மைதானத்தில் நடைபெறும் இறுதிப்போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள சுண்டர்லாண்ட் அணிக்கெதிரான போட்டியாகும். எனவே அந்தப்போட்டியின் பின்னர் பிரியாவிடையை நடத்துவதற்கு உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது. ஆனாலும் பிறீமியர் லீக் உதைபந்தாட்டத் தொடரின் புள்ளிப்பட்டியலில் 33 போட்டிகளின் முடிவில் செல்சி அணிக்கும் ரொற்றின்காம் அணிக்குமிடையில் 4 புள்ளி வித்தியாசங்களே உள்ள நிலையில் செல்சி இந்தத்தொடரில் சம்பியன் பட்டத்தை வென்றால் ஜோன் ரெரியின் பிரியாவிடை வைபவம் இன்னும் சிறப்பாக இருக்கும் எனலாம்.

தொகுப்பு: சி.விமலன்

# அதிரடி அவதாரம்

இம்முறை ஐ.பி.எல். போட்டிகளில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி 49 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது ஆச்சரியமென்றால் அதைவிட ஆச்சரியம் கொல்கத்தா நைற்றைடர்ஸ் அணியின் சுழற்பந்துவீச்சாளர் சுனில் நரைன் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கி அதிரடி காட்டியமைதான். ஆனாலும் இதில் எந்தவித ஆச்சரியமும் இல்லை என்கிறார் ஐ.பி.எல். போட்டிகளில் கொல்கத்தா நைற்றைடர்ஸ் அணியின் செயல்திறன் ஆய்வாளராகப் பத்து வருடங்கள் கடமையாற்றி வரும் ஸ்ரீகாந் என்பவர். அவர் சுனில் நரைன் குறித்து சில விடயங்களைக் கூறியுள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகளில் வருடாவருடம் நடைபெற்றுவரும் கிரிக்கெட் தொடர்தான் Windball Cricket. தலா 8 ஓவர்கள் கொண்ட இந்த மென்பந்துத் தொடர் நடைபெறும் ஆடுகளம் கொங்கிறீட் மேற்பரப்பை உடையதாகும். இதில் சுனில் நரைன், டுவைன் பிராவோ, கெய்ரன் பொலாட் ஆகியோர்களும் விளையாடியுள்ளார்கள். எட்டு ஓவர்கள் என்பதனால் எல்லா பந்துகளையும் அடித்து ஆட வேண்டி இருக்கும். இந்தத் தொடரின் அனுபவமே அதிரடிக்கான ஆரம்பத்தை சுனில் நரைனுக்குள் விதைத்திருக்கிறது. கரீபியன் பிறீமியர் லீக் தொடரிலும் பாகிஸ்தான் பிறீமியர் லீக் தொடரிலும் சுனில் நரைன் பின்வரிசைத்துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கி ஓட்டங்களைக் குவித்துள்ளார். ஆனாலும் எனக்கு ஆச்சரியம் இந்த வருடம் நடைபெற்ற பிக்பாஸ் தொடரில் அதுவும் எகிறும் பந்துவீச்சு ஆடுகளத்தில் இரண்டு போட்டிகளில் மெல்பேர்ண் ரெனேகட்ஸ் அணிக்காக அவர் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கியமைதான்.




அவரது அதிரடித் துடுப்பாட்டத்திறமை குறித்து எந்தச் சந்தேகமும் கொல்கத்தா நைற்றைடர்ஸ் அணியின் பயிற்சியாளரான ஜக்கலிஸ், ஆலோசகர்களான சைமன் கட்டிச், பாலாஜி போன்றவர்களுக்கு ஏற்பட்டதே இல்லை. ஆனால் இவரை என்னவிதமாகப் பயன்படுத்துவது என்பதில் தான் அவர்கள் சற்றுக்குழப்பம் அடைந்திருந்தார்கள். எதிர்பாராத விதமாக அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான கிறிஸ் லின் காயம் காரணமாக தொடரிலிருந்து விலகியதால் அந்த இடத்திற்கு சுனில் நரைனை பரீட்சார்த்தமாகக் களமிறக்க முடிவு செய்தார்கள். இது கைமேல் பலனை அவர்களுக்குத் தந்தது.

அவர் முதல் பந்தில் ஆட்டமிழந்தாலும் அணிக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை. ஏனென்றால் பலமான துடுப்பாட்ட வரிசையை கொல்கத்தா நைற்றைடர்ஸ் அணி கொண்டிருக்கிறது. ஆனால் அவர் 10 பந்துகளைச் சந்தித்தால் நிச்சயமாக அணிக்கு 20 ஓட்டங்கள் மேலதிகமாகக் கிடைக்கும் என்பது உறுதி. பந்தைக் கணித்து ஆடுவதில் சுனில் நரைன் வல்லவராக இருப்பதால் இருபதுக்கிருபது போட்டியில் அவர் சதம் ஒன்றைப் பெற்றுக்கொண்டால் அதுவும் ஆச்சரியமில்லை என்று - ஸ்ரீகாந் கூறியுள்ளார்.

# சமத்துவம்

சச்சின் டெண்டுல்கரின் சுயசரிதையைத் தழுவி எடுக்கப்பட்ட Sachin : A Million Dreams திரைப்படம் விரைவில் வெளிவரவுள்ளது. ஏற்கனவே வெளியிடப்பட்ட படத்தின் டிரெயிலர் உலகம் பூராகவும் பலத்த வரவேற்பைப் பெற்றுள்ள நிலையில் படத்தின் மீதான எதிர்பார்ப்பும் அதிகரித்துள்ளது.

இந்தப்படத் தயாரிப்பின் போது தயாரிப்பாளருக்கு ஏற்பட்ட சம்பவம் ஒன்று தற்போது கசிந்துள்ளது. அதுதான் படத்தில் பயன்படுத்துவதற்காக இந்தப்படத்தை தயாரித்த 200 NOTOUT நிறுவனத் தயாரிப்பாளர் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையிடம் சச்சினின் கிரிக்கெட் வாழ்க்கையில் நடைபெற்ற முக்கிய போட்டித் தருணங்களின் வீடியோ பதிவுகளை சலுகை அடிப்படையில் தருமாறு கோரி உள்ளார். ஆனாலும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளது.




ஏனென்றால் சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் வெளிவந்த டோனியின் வாழ்க்கை வரலாற்றைத் தழுவி எடுக்கப்பட்ட M.S.Dhoni : The Untold Story திரைப்படத்தில் டோனி சம்பந்தப்பட்ட முக்கிய போட்டிகளின் சில வீடியோ பதிவுகளை அந்தப்படத்தின் தயாரிப்பாளரான அருண் பாண்டே இந்திய மதிப்பில் சுமார் ஒரு கோடி ரூபா செலுத்தியே பெற்றுக்கொண்டுள்ளார். அவருக்கு எந்தவிதமான சலுகைகளும் வழங்கப்படவில்லை. எனவே விதிகள் எல்லா வீரர்களுக்கும் ஒன்றே எனக்கூறியதால் சச்சின் படத் தயாரிப்பாளரும் குறிப்பிட்ட ஒரு தொகையைச் செலுத்தி உள்ளார்.

இது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் குரல்தரவல்ல அதிகாரி ஒருவர் 'வீடியோ பதிவுகளின் முக்கியத்துவம் கருதி அதற்கு குறிப்பிட்ட விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. செக்கனுக்குத் தகுந்தாற்போல் கட்டணமும் அறவிடப்படுகின்றது. இரண்டு வகைகளில் அதற்கான கட்டணம் நிர்ணயிக்கப்படுகின்றது. புனைவுவகைப் படங்களுக்கு ஒரு விலையும் ஆவணப்படங்களுக்கு ஒரு விலையுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சச்சினது திரைப்படம் அவரது சொந்த வாழ்க்கையைத் தழுவி எடுக்கப்பட்டாலும் அது வணிக சினிமாவாகவே தயாரிக்கப்படுவதால் அதற்கு புனைவுவகைப் படங்களுக்கான விலையே நிர்ணயிக்கப்பட்டுள்ளது' என்கிறார்.

அதேசமயம் சச்சின் படத்தை தயாரிக்கும் நிறுவனம் ஐசிசி ஊடாக கிரிக்கெட் அவுஸ்ரேலியா மற்றும் கிரிக்கெட் தென்னாபிரிக்காவிடம் சச்சின் சம்பந்தப்பட்ட முக்கிய போட்டிகளின் வீடியோ பதிவுகளை ஏற்கனவே பெற்றுள்ளது. எது எப்படியோ தற்போது படத்தைப் பார்ப்பதற்கு ரசிகர்கள் தயாராகி உள்ள நிலையில் டோனி படத்தின் வசூலை நிச்சயம் சச்சின் படம் வசூலில் முறியடிக்கும் என்று நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 06.05.2017 [illegible] யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org